24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 123 | பங்குனி 16ஆம் நாள் | சனிக்கிழமை | 30 மார்ச் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050


## அரசமைப்புக்கு உட்பட்டு

# வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட கலப்பு நீதிமன்றத்தை அமைக்கலாம்

## மகிந்த நியமித்த பகவதி குழு முன்னுதாரணம் என்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், மார்ச் 30

போர்க்குற்றங்களை விசாரணை செய்ய வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை நிறுவுவதற்கு உடனடியாக உறுப்புநாடுகள் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இலங்கை அரசமைப்பின் பிரகாரம் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை அமைக்கமுடியாது என்ற அரசின் கூற்று பொருத்தமற்றது. இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். » 08

### விபத்தில் காயமடைந்தவர் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 30
பண்டத்தரிப்பு விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த குடும்பத் தலைவர் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.
பண்டத்தரிப்பு பகுதியில் » 07

### கோர விபத்து மூன்று இளைஞர்கள் பரிதாபகரமாகச் சாவு

மட்டக்களப்பு, மார்ச் 30
மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட வந்தாறுமூலை பிரதான வீதியில் நேற்றிரவு ஏற்பட்ட கோர விபத்தில் மூன்று இளைஞர்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.
வீதியில் பயணித்த » 06

### மல்லாகத்தில் வீடு புகுந்து ஜன்னல், கதவுகள் உடைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30
மல்லாகத்தில் வீடு புகுந்த அடாவடிக் குழு, வீட்டு ஜன்னல் கண்ணாடிகள், கதவுகளை வெட்டியும் அடித்தும் சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளது.
இந்தச் சம்பவம் பங்களா வீதியில் நேற்று அதிகாலை 12.30 அளவில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். » 19

### தோற்கடிப்புக்குப் பொறுப்பேற்று பதவிகளைத் துறக்கவேண்டும்

மகிந்த அணி வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 30
இரண்டு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டது. அமைச்சர் » 19

### சாத்திரக்காரர் வேடமணிந்து நகைக் கொள்ளையில் இந்தியர்கள்

யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 30
சாத்திரக்காரர்கள் என்று தங்களை அறிமுகப்படுத்தி வீடுகளுக்குச் சென்று தங்க நகைகளைக் » 06

### இரண்டு மாதங்களுக்குள் 20 ஆயிரம் பட்டதாரிகள் அரசசேவைக்கு உள்ளீர்ப்பு

கொழும்பு, மார்ச் 30
அரச சேவைக்கு 20 ஆயிரம் பட்டதாரிகள் புதிதாக இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன் » 07

### நாடாளுமன்றில் தவறை ஏற்றுக் கொண்டார் ரணில்

கொழும்பு, மார்ச் 30
ஆளும்கட்சி உறுப்பினர்கள் சபைக்கு வராதமை எமது தவறு. சம்பிரதாய முறைப்படி அமைச்சுக்க » 19

### தோற்கடிப்பை ஏற்று பதவி துறந்தார் ஆசூமாரசிங்க

கொழும்பு, மார்ச் 30
மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் உள்ளக உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக » 05

see more news in newuthayan.com

### மின் துண்டிப்பின் பின்னணியில் மிகப் பெரிய சதி நடவடிக்கை

நாடாளுமன்றில் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 30
நாட்டில் ஏற்பட்டுள்ள மின் துண்டிப்பின் பின்னணியில் பெரிய ஊழல் மோசடியொன்று இடம்பெற்று வருகின்றது. தனியார் நிறுவனங்களின் அவசரகால மின்னுற்பத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தவே திட்டமிட்ட வகையில் மின் துண்டிக்கப்பட்டு வருகின்றது. இந்தச் சதித்திட்டத்தின் பின்னணியில் மின்சார சபை உயரதிகாரிகள் மற்றும் அமைச்சின் செயலருமே உள்ளனர். இவ்வாறு எதிர்க்கட்சிகள் சபையில் குற்றம் » 19

### ஓ.எல். பெறுபேறு மீளாய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 30
கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான மீளாய்வு விண்ணப்பங்கள் எதிர்வரும் 12ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. » 06

### மன்னாரில் எழும் சூழ்ச்சிகளை வெல்ல கத்தோலிக்கர்களே ஒன்றிணையுங்கள்

அறைகூவல் விடுக்கிறது கத்தோலிக்க ஆசிரியர் ஒன்றியம்

மன்னார், மார்ச் 30
மன்னார் மறைசாட்சிகள் குருதி சிந்திய மண். இங்கு நமது மறைக்காக எழும் சூழ்ச்சியை செபத்தினாலும் எமது கத்தோலிக்க விசுவாசத்தின் நம்பிக்கையின் » 19

### ஒரே சூலில் பிறந்த மூவருக்கும் 9ஏ



குருநாகல், மார்ச் 30
ஒரே சூலில் பிறந்த மூன்று பேர், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். இந்தச் சம்பவம் குருநாகல் மாவட்டத்தில் நடை » 06

### கேதீச்சர விவகாரம் பொலிஸ் அறிக்கை தவறு

## உரிய பிரிவுகளில் வழக்கு தாக்கல் செய்யப் பணிப்பு

அருட்தந்தை உள்ளிட்ட சந்தேகநபர்கள் மன்றில் நேற்று முன்னிலையாகினார்கள்

மன்னார், மார்ச் 30
மன்னார் திருக்கேதீச்சர ஆலய அலங்கார வளைவு உடைக்கப்பட்ட வழக்கைப் பொலிஸார் சாதாரண சொத்து அழிவு வழக்காகத் தாக்கல் செய்துள்ளனர். அது தவறு. மத வன்முறையைத் தூண்டும், மதத் தலங்களை இழிவு » 19

### ஓ.எல். பரீட்சை பெறுபேறு கடந்த ஆண்டைவிட வடக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 30
கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணம், 2017ஆம் ஆண்டை விட முன்னேறியுள்ளது. 2017ஆம் ஆண்டு 66.12 சதவீதம்பேர் உயர் தரத்துக்கு தகுதி பெற்றிருந்த நிலையில், கடந்த ஆண்டு 66.76 ஆக அது அதிகரித்துள்ளது. 2017ஆம் ஆண்டு 3.46 சதவீதம் பேர் சகல பாடங்களிலும் சித்தியடையத் தவறியிருந்த நிலையில் கடந்த ஆண்டு 2.58 சதவீதமாக அது குறைவடைந்துள்ளது. » 07

## தவறிவிட்டது

சின்னத்தம்பி இரங்கநாதன் என்பவரின்
தே.அ.அட்டை (510713583V). 2ATM காட்ஸ்.
சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ்
அராலி வீதி. பொம்மை வெளியிலிருந்து
ஒஸ்மானியா வீதிக்கிடையிலும்.
புதுப்பள்ளியிலிருந்து K.K.S வீதிக்கும் இடையில்
தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும்
தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**075 734 6477**

## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு
அனுபவமுள்ள எலக்ரீசியன் (Electrician)
ஒப்பந்த அடிப்படையில் வேலை
செய்வோர் தேவை. (CS 24374) (14,17)

**077 592 5371/076 316 5730**


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கலாலக்ஷ்மி தேவராஜா

**(எழுத்தாளரும், நாடக நடிகை மற்றும் நெறியாளரும்)**



காலையடியைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாலக்ஷ்மி தேவராஜா (எழுத்தாளரும் நாடக நடிகை மற்றும் நெறியாளரும்) 28.03.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் - தங்கம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சற்குணம் தம்பதிகளின் மருமகளும், சோ.தேவராஜாவின் (சிரேஷ்ட சட்டத்தரணி) மனைவியும், ஜெயலஷ்மி, காலஞ்சென்ற விஜயலஷ்மி, இராசலஷ்மி, சந்தானலஷ்மி (ஆனைக்கோட்டை), திருக்கேஸ்வரன்(இங்கிலாந்து), கோணேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், தேவராணி (கொழும்பு), தேவமலர் (ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர்), தேவகுமார் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், ஜனமகன் (ஆஸ்திரேலியா), அபிலாஷா (ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் தாயாரும், சாமினியின் (ஆஸ்திரேலியா) மாமியாரும், சாதனா, கீரன், ஜெயன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு நாளை (31.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனம் சம்பில்துறை மயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**சோ.தேவராஜா**
**(கணவர்- சட்டத்தரணி)**

**அரசடி,**
**பண்டத்தரிப்பு.**

(CS/24361)(11.17)



மண்ணில் 14 . 06 . 1942

விண்ணில் 26 . 03 . 2019

## மரியா மின்னொளி ஜூலியன் (லூர்த்து)

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயப் பங்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியா மின்னொளி ஜூலியன் 26.03.2019 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சைமன் ஜோசப் இன் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி பயஸ் ஜோன்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் திரு பயஸ் ஆனந்தகுமார் ஜூலியன்(அகில இலங்கை சமாதான நீதிவான், யாழ் மத்தியஸ்தசபை உறுப்பினர்) இன் அன்பு மனைவியும் லோயலா மனோஜ்குமார்(கனடா), ஜூலினா பெர்னிற்றா(கனடா), லொறெற்றா லிலாந்தினி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிறிஸ் ரீன் (கனடா), அன்ரனி (கனடா), சதீஸ்(நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஸ்ரெபனி, நதின், கெல்வின், நத்தானியா, பிரதீஸ், தனுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கிறிஸ்ரி அன்ரன் ஜோசப், சிசிலியா ஜோசப் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30.03.2019 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**www.marshalstudio.tk என்ற இணையத்தள முகவரியில் பிற்பகல் ஒரு மணியிலிருந்து நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.**


**தகவல்:**
**பயஸ் ஆனந்தகுமார் ஜூலியன்**
**(கணவர்), பிள்ளைகள்.**

**819, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 24302) (14,17)

**021 222 9752/077 749 8865**

# மரண அறிவித்தல்கள்



பிறப்பு 17 . 02 . 1942

இறப்பு 28 . 03 . 2019

## சோமசேகரம்பிள்ளை குலசிங்கம்

**(ஓய்வுநிலை அதிபர் - கிளி/சிவநகர் அ.த.க.பாடசாலை)**

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, உருத்திரபுரம் எள்ளுக்காடு மற்றும் 47/4, செம்மணிவீதி, யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சோமசேகரம்பிள்ளை குலசிங்கம் 28.03.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசேகரம்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவபூஷணியின் (குடும்பநல உத்தியோகத்தர், உருத்திரபுரம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம் (ஓய்வுநிலை இருப்பிட்டி உபதபாலதிபர்), இராசமணி மற்றும் செல்வநாயகம் (கனடா), எதிர்வீரசிங்கம் (ரூபன் ரெக்ஸ்- நல்லூர்), காலஞ்சென்ற யோகாம்பிகை (கிளி) மற்றும் இந்திராணி, மன்மதராசன் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகபூஷணி (ஓய்வுநிலை ஆசிரியை), சுந்தரலிங்கம் (வர்த்தகர்- கொழும்பு), காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் துரை கணேசலிங்கம்( ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான சுபாஸ்கரலிங்கம், தையல்நாயகி, கந்தசாமி சற்குணதேவி, கோபாலகிருஷ்ணன் மற்றும் கஜலெட்சுமிதேவி, புஷ்பரஞ்சினி (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.47/4, செம்மணிவீதி,**
**தேவாலயத்துக்கு அருகில்,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.** (CS/24366)(11.17)

**தகவல்: குடும்பத்தினர்,**
**சோ.எதிர்வீரசிங்கம் (வீரப்பா),**
**ரூபன் ரெக்ஸ், நல்லூர், யாழ்ப்பாணம்.**

**ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ**

## திருமதி இராஜேஸ்வரி யோகரட்ணம்



நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானையை பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் புதுறோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகரட்ணம் இராஜேஸ்வரி 26.03.2019 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி சதாசிவம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் செல்வரத்தினம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா, தங்கபூபதி, தவமணிதேவி மற்றும் ஞானம்மா, சிங்கராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறீபவன் (லண்டன்), வனிதா (லண்டன்), பிரகாஷ் (கனடா), சசிகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோமதி, சத்தியபவன், குணாளினி, துஷாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், அஷ்மிதா, ஆகாஷ், அஷ்வின், அர்ஜுன், அபிஷா, அபிநயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/24336)(11.17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 487 8144**

# மானிப்பாய் இந்துக் கல்லூரியின்
## மகத்தான சாதனையாளர்கள்

2018 க.பொ.த. (சா/த) பரீட்சையில் சாதனை படைத்த மாணவ மணிகளையும் அரும் முயற்சியில் ஆற்றுப்படுத்திய அதிபரையும், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



கு. சாருஜன்
**9A**



ஜெ.அனுசன்
**8AB**



பி.லோஜிதன்
**8AC**



கி.நிவேட்சங்கர்
**8AB**

வாழ்த்துவோர் :

**பழைய மாணவர் சங்கத்தினர்,**
**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.**

---

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

## சித்திரைப் புத்தாண்டு விசேட தள்ளுபடி

**விசேட விலைக்கழிவு**



### புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்

| | | |
|---|---|---|
| பட்டுச் சாறி | - ~~15000/=~~ | 7500/= |
| கொட்டன் சாறி | - ~~1800/=~~ | 1000/= |
| கொட்டன் Top | - ~~1500/=~~ | 1000/= |
| டெனிம் Top | - ~~1500/=~~ | 1000/= |
| பார்ட்டி புறொக் (பெரியது) | - ~~5000/=~~ | 3500/= |
| பார்ட்டி புறொக் (சிறியது) | - ~~3500/=~~ | 2500/= |
| கொட்டன் சல்வார் | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் (பெரியது) | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் (சிறியது) | - ~~3500/=~~ | 1000/= |



**இன்னும் பல புத்தம் புதிய டிசைன்களில்**

கொட்டன் சாறிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சல்வார்கள், நெற் சல்வார்கள்,
சல்வார் துணிகள், டொப் வகைகள்,பார்ட்டி புறொக்ஸ் , மொடன் சூட்ஸ், சேட், T-சேட், ரவுசர்

**இம் முறையும் சித்திரைப் புத்தாண்டை**
**இந்தியன் செலக்ஷனுடன் குதூகலமாகக் கொண்டாடுங்கள்**

**ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்**

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம் : 23.03.2019 - 14.04.2019 வரை**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியராக கடமையாற்றும்
**திருமதி அகிலா லோகராஜ்**
அவர்களின் பாசமிகு மாமியார்
**திருமதி கௌரியம்மா விபுலானந்தன்**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்**
**யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க.பாடசாலை.**
(CS 24369)(14.17)

## இரவு, பகல் காவலாளி தேவை

யாழ்.நகர்ப் பகுதியில் உள்ள வேலைத்தளம் ஒன்றுக்கும். வைத்திய நிலையத்துக்கும்
**இரவு, பகல் காவலாளிகள் (Security) தேவை.**
நேர்முகத் தேர்வு - 31.04.2019 (ஞாயிறு)
நேரம் - காலை 9 மணி
இடம் - சன்றைஸ் மெடிகிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி
(பஸ்நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.
**021 222 6069** (CS/24362)(11.17)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 ஆம் ஆண்டு பிறந்த உத்தரட்டாதி நட்சத்திரம், செவ்வாய் பாவம் குறைந்த கனடாவில் வைத்தியத்துறையில் கல்விகற்ற கனடா நிரந்தர குடியுரிமை உடைய தீய பழக்கங்கள் எதுவுமற்ற சைவ போசன மணமகனுக்கு படித்த, சைவபோசன மணமகள் தேவை.
**தொடர்பு - 076 167 1962 (Viber)**

உதயன்
விளம்பரங்களுக்கு
advt@uthayan.com

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
31 . 12 . 1937

உதிர்வு
30 . 03 . 2018

### திருமதி செல்வராணி சூசைமுத்து

கருவினில் எமக்கு உருக்கொடுத்து
தரணியில் நாம் சீருடன் வாழவழி வகுத்து
விண்ணகம் ஏகிய எம் தாயே!
மண்ணகம் வாழும் வரை நாம் உமை மறவோம்
கண் நெகிழும் வேளையெல்லாம் – எம்
செபங்களையே காணிக்கையாக்குகின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்:
**குடும்பத்தினர்.**
(cs.224182) (13.17)

## தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 121 ஆவது பிறந்தநாள் விழா



தமிழ் மக்களுக்கு ஆற்றிய சேவை மற்றும்
அர்ப்பணிப்புக்காக கடவுளுக்கு
நன்றி தெரிவிக்கும் வழிபாடு
யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்
கிறிஸ்தவ மையத்தில் (புனித தோமா ஆலயம்)
**Compus Lane**, திருநெல்வேலி
2019 மார்ச் 31 அன்று மாலை 4.00 மணியளவில்
நடைபெறும்


**பேச்சாளர் :** **கௌரவ. எம்.ஏ.சுமந்திரன்,**
ஜனாதிபதி சட்டத்தரணி
பாராளுமன்ற உறுப்பினர்.

**அனைவரையும் வரவேற்கின்றோம்**

**பேராயர் கலாநிதி டி.எஸ்.தியாகராஜா**
**யாழ் ஆதீனம், தென்னிந்திய திருச்சபை**

## மரண அறிவித்தல்

# செல்லத்துரை நவரத்தினம்



பிறப்பு
07.03.1942

இறப்பு
28.03.2019

யாழ்.நீர்வேலி தெற்கை பிறப்பிடமாகவும், பிரான்ஸ், நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை நவரத்தினம் 28.03.2019 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசம்மாவின் (கனடா)அன்புக் கணவரும், சக்திரூபன் (பிரான்ஸ்), சிவரூபன் (நெதர்லாந்து), சாந்தி (பிரான்ஸ்), வசந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாளினி (பிரான்ஸ்), றஞ்சினிதேவி (நெதர்லாந்து), சிவகுமாரன் (பிரான்ஸ்), நந்தகுமாரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கதிர்காமநாதன் (நெதர்லாந்து), காலஞ்சென்ற மனோன்மணி, சிவபாக்கியம் (கனடா), சரஸ்வதி ஆகியோரின் மூத்த சகோதரனும், புஸ்பமலர் (நெதர்லாந்து), காலஞ்சென்ற நடேசப்பிள்ளை மற்றும் ஸ்ரீஸ்கந்தராசா (கனடா), சுப்பிரமணியம், காலஞ்சென்ற நடராசா மற்றும் நல்லம்மா (கனடா), காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் கனகம்மா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், நடராசா, மகேஸ்வரி, கந்தையா, இராசலட்சுமி, காலஞ்சென்ற துரைராசா ஆகியோரின் சகலனும், ஆதித்தன், தர்மிகா, தமிலி (பிரான்ஸ்), தரிஸ், லக்சன், நிக்சன் (நெதர்லாந்து), சாயீன், சுஜித், ரஜித் (பிரான்ஸ்), லக்ஷா, ஆதிசா, கியாசன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2019)ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பூதர்மடச் சந்தி,**
**நீர்வேலி.**
(CS/24372)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**ரூபன் - +33 699 331965, சிவா - +31 684 633 515,**
**சாந்தி - +33 7532 23809, வசந்தி - 905 2012973,**
**நந்தன் - 6472 042973, கோணேஸ் - +9477 790 6035**

## மரண அறிவித்தல்கள்



மண்ணில்
24 . 01 . 1945

விண்ணில்
29 . 03 . 2019

### செல்லத்துரை சதானந்தம்

யாழ். கச்சேரியடி நக்காறோட்டைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும், இந்தியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சதானந்தம் நேற்று (29.03.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான நாகமணி - நல்லம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், செல்வராணி (இந்தியா) அவர்களின் அன்புக் கணவரும், லக்ஸ்மணன் (இந்தியா), விஜிதா (இந்தியா), றமேந்திரன் (ஜேர்மனி), நிக்சலா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பராணி (பிரான்ஸ்), நாகேஸ்வரி (இலங்கை), உருத்திராணி (ஜேர்மனி), பரமேஸ்வரி (இலங்கை), சர்க்குனேஸ்வரி (இலங்கை), உதயகுமார் (கொலன்ட்), விஜயகுமார் (இலங்கை), காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் ராஜ்குமார் (பிரித்தானியா) ஆகியோரின் மூத்த சகோதரரும், கோமதி (இலங்கை), முருகதாஸ் (இந்தியா), கஜீனா (ஜேர்மனி), ஹரிக்குமார் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனும், டிலக்ஷன் (இலங்கை), டினுக்ஷன் (இலங்கை), ஜெய்சாந் (இந்தியா) விதுசாந் (இந்தியா), அனிசா (ஜேர்மனி), கிரீஸ் (இந்தியா), கேமஸ் (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.03.2019) வெள்ளிக்கிழமை இந்தியாவில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: **செல்வராணி**
Mobile: + 919176325152 (இந்தியா)
S.சுமித்திரன் (மருமகன் - இலங்கை - 077 7113050)

தகவல்: **குடும்பத்தினர்**

### பத்மநாதன் அன்னலட்சுமி



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் அன்னலட்சுமி நேற்று (29.03.2019) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராஜா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகராஜா, நகுலேஸ்வரி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செந்தமிழ்ச்செல்வி, திருநிறைச்செல்வி அருந்தவச்செல்வன், பிறேமச்செல்வன், ஜெயச்செல்வன், செங்கதிர்ச்செல்வி ஆகியோரின் பாசமிகு தாயும், சர்வலோகராஜா, காலஞ்சென்ற தெய்வேந்திரா மற்றும் சுகந்தினி, செந்தமிழ்ச்செல்வி, சுகந்தினி ஆகியோரின் மாமியும், சரணிகா, சஜீவன், சன்ஜேவன், சிறீசங்கர், நிருத்திகா, பாமரன், ஆதித்தன், சேதுஜன், விதுஷன், பிரதீசன், அபினாஸ், அபிஷேக், ஜெசாந், துசாந், சிவானி ஆகியோரின் பாச மிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நடராஜா, புவனேஸ்வரி, பரலோகநாதன் மற்றும் மங்கையர்க்கரசி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**103/1, கோயில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

தகவல்: **குடும்பத்தினர்**

### மயில்வாகனம் இராஜரட்ணம் (ராசன்)



கரம்பொன் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடா (மொன்றியல்) வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் இராஜரட்ணம் காலமாகிவிட்டார்.

அன்னார் மயில்வாகனம் - நகுலாம்பிகை (கிளி) தம்பதியரின் அன்பு மகனும், வதனராணியின் அன்புக் கணவரும், சஞ்ஜீவ், கபில்ராஜ், காலஞ்சென்ற நிரோஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரன் (BABA), காலஞ்சென்ற தெய்வேந்திரன், வசந்தா, விஜிதா (London) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.04.2019 கனடா (மொன்றியல்)வில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**91/13, புங்கன்குளம் வீதி,**
**அரியாலை.**

தகவல்: **குடும்பத்தினர்**

076 654 8323 / 077 134 8423


## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள கோட்டலுக்கு மும்மொழியும் தெரிந்த கணினி அறிவுடைய வரவேற்பாளரும், பராமரிப்பாளரும் தேவை.

(AKN 680) (14.17)

**077 802 5875**



புதுவிதி
POTHU VITHI

## சிறுகதை, கவிதை, கட்டுரை போட்டி பரிசளிப்பு நிகழ்வு

பிரதம விருந்தினர் :
**கௌரவ ஈ.சரவணபவன்**
(யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)

**காலம் : 31.03.2019 ஞாயிறுக்கிழமை மு.ப. 10 மணி**
**இடம் : இல. 107, இராஜ வீதி, கோப்பாய்.**
(கோப்பாய் பொலிஸ் நிலையத்திலிருந்து வடக்கே 200 மீற்றர் தூரத்தில்)

**முதலாம், இரண்டாம், மூன்றாம், பாராட்டுப் பரிசுகளுக்குத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் ஏற்கனவே புதுவிதியில் வெளியானது. பரிசுக்குரியவர்களுக்கு தனித்தனியே அழைப்பிதழ்களும் அனுப்பப்பட்டுள்ளன.**

**பரிசுக்குரியவர்கள், போட்டியில் பங்குபற்றியவர்கள், கலை - இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் இந்நிகழ்விற்கு அன்புடன் அழைக்கின்றோம்.**

- **வெளிமாவட்டங்களில் இருந்து வருவோருக்கு யாழ். நகரிலிருந்து பயண ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.**
- மதியபோசன உபசரணை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**நிகழ்வு ஏற்பாட்டாளர்கள்,**
**புதுவிதி வார இதழ்.**


## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



### முருகேசு கந்தையா

தோற்றம்
09 . 11 . 1943



மறைவு
25 . 03 . 2014

ஆண்டுகள் ஐந்து ஆனாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் இதயத்தில் நிலைத்திருக்கும்
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதற்கிணங்க
உங்கள் வழி நடந்தோம்
வாழ்வில் உன்னதம் அடைந்தோம்
இப்போ உங்கள் பிரிவால் வாடுகின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உசன்,
மிருசுவில்.
(cs.24363) (13.17)

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**


## முழுநேர/பகுதிநேரவேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு **காப்புறுதி ஆலோசகராக** யாழ்.மண்ணில் 50வருடங்களாகச் சேவையாற்றி வரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

- 1 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

### அடிப்படைத் தகைமைகள்

- G.C.E (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 15.04.2019 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல: JF1005**
**C/0 உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


## பதவி...

ளுக்கான செலவுத் தலைப்புக்களை நிறைவேற்றுவதற்கு ஆளும் தரப்பு உறுப்பினர்களின் ஒத்துழைப்பை பெற தவறியதற்கான பொறுப்பை ஏற்று ஆளும் தரப்பு உதவி கொரடா பதவியிலிருந்து விலகுவதாக ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் அசூ மாரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்புக் கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் நிதி ஒதுக்கீடு நேற்று முன்தினம் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டன. இது தொடர்பான வாக்கெடுப்பின் போது ஆளும் தரப்பில் 24 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே இருந்தார்கள்.

நாடாளுமன்ற ஆளும் தரப்பு பிரதம கொரடாவாக அமைச்சர் கயந்த கருணாதிலக செயற்படுவதோடு பிரதி கொரடாக்களாக அமைச்சர் அஜித் பி பெரேரா, ஜே.சி.அலவதுவல ஆகியோரும் உதவி கொரடாக்களாக என்னுடன் ஹெக்டர் அப்புஹாமி மற்றும் சிட்னி ஜெயரத்ன ஆகியோர் செயற்படுகின்றனர்.

வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மற்றும் குழு நிலை விவாதத்தில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபையில் இருக்க வேண்டும். இது தொடர்பில் சகலருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. இரு அமைச்சுகளின் நிதி ஒதுக்கீடுகள் தோற்கடிக்கப்பட்டது குறித்து கவலையடைகிறேன். நாடாளுமன்ற உதவி கொரடாவாக இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பை பெற முடியாமல் போனதன் மூலம் தொடர்ந்தும் இந்தப் பதவியில் நான் இருப்பது பொருத்தம் இல்லை என்று எனது மனசாட்சி தெரிவிக்கின்றது. அதனால் பதவியிலிருந்து விலகத் தீர்மானித்தேன். எனது பதவி விலகல் கடிதத்தை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தேன்.

அமைச்சர்களான சம்பிக ரணவக்க மற்றும் வஜிர அபேவர்தன ஆகியோரிடம் மன்னிப்பு கோருகின்றேன் - என்றார். (ஓ.5,31)


## விற்பனை

45 நாள் நிரம்பிய தடுப்பூசி போட்ட டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

(CS 24358) (4.17)

**076 891 2025**



## இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள்

**இடம்:- நவமங்கை நிவாஸம்**
**இராஜவீதி, கோப்பாய் மத்தி**
**விண்ணப்ப முடிவு திகதி :-30.04.2019**
**ஆரம்பம் :- 05.05.2019**

- பன்னவேலை பயிற்சியும் வழங்கப்படும்.
- பயிற்சிக்குத் தேவையான பொருள்கள் இலவசமாக வழங்கப்படும்.
- வகுப்புக்கள் கிழமை நாள்களில் நடைபெறும்.

நிர்வாகம்

(CS/24370)(11.17)

**021 223 0418**



## இன்று முதல்

**வடக்கு மற்றும் கிழக்கு திரையரங்குகளில்**



| | |
|---|---|
| Majestic City Cineplex Jaffna. | Saru Cinema Point Pedro. |
| | Saraswathy Trinco. |
| Raja 2 Jaffna. | GK Cinema Kalmunai. |
| Annai Sellam Chenkalady. | Archana Akkraipattu. |
| Shanthi Batticaloa. | Vasanthi Vavuniya. |

**மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்**

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

## மாடிக் கட்டடத்தின் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் இல. 187, மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள நர்மதா கோல்ட் சென்டர் (Pvt) Ltd. கட்டடத் தொகுதியில் 1350 சதுர அடி பரப்பு உள்ள மின்தூக்கி வசதியும் வாகன தரிப்பிட வசதியும் கொண்ட 2ஆவது மாடி வாடகைக்கு உண்டு.

தொடர்பு - 075 999 1769

(CS 24377)15/18)





## ஆஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்துள்ள அழகு கலை நிபுணரின் அழகுக் கலை கருத்தரங்கு

35 வருடங்களாக ஆஸ்திரேலியா பிரபலமான அழகுக் கலை நிபுணர் தர்ஷினி றஞ்சன் அவர்கள் இங்குள்ள அழகுக்கலை நிபுணர்களுடன் யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கு நடத்தவுள்ளார். இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். அழகுக்கலையில் ஆர்வமுள்ளவர்களும் கலந்து கொள்ளலாம். இக் கருத்தரங்கில் நன்கொடையாக சேகரிக்கப்படும் சன்மானம் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்படும்.

இரு நாள்கள் கருத்தரங்கு

இடம் : வலம்புரி Hotel
காலம் : 31.03.2019, 01.04.2019
நேரம் : 4.00 pm

தர்ஷினி றஞ்சன் - 077 814 5932, Dharshini Ranjan Whatsapp - +61421038841

Harishi's Bridal Palace


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 28 . 12 . 1946

மறைவு 01 . 03 . 2019



### அமரர் A.V.K. மாணிக்கம்

கடந்த 01.03.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அஞ்சலி ஆறுதல் தெரிவித்த மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் ஆறுதல் அஞ்சலி தெரிவித்த மற்றும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் நேற்று வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியைகளை அடுத்து நாளை (31.03.2019) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியையிலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். - இதனை தனிப்பட்ட

விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு, கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர். 077 400 1876, 077 280 4787

## மரண அறிவித்தல்

### மோகன்கிருஷ்ணன் மதுசனன்



உக்குளாங்குளம் வவுனியாவைப் பிறப்பிடமாகவும், சித்திவிநாயகர்கோவிலடி உடுவில் தெற்கு மானிப்பாயை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட மோகன கிருஷ்ணா ஹேமமதனா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரன் மதுசனன் (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி, தரம் 08 மாணவன்) கடந்த (27.03.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவராசா விமலாதேவி (தாவடி) தம்பதிகளின் மற்றும் தம்பலிங்கம், யோகேஸ்வரி (சுதுமலை) தம்பதிகளின் பாசமிகு பேரனும் விஷ்ணுஜன் (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி), சாஜிதா (யா/மானிப்பாய் மகளிர்கல்லூரி), மதுர்சனா (நாவலர் முன்பள்ளி, சுதுமலை) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் (31.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி (மானிப்பாய்) இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 696 8539

தகவல்: தர்மலிங்கம் குடும்பத்தினர் (பேரன்)


## VACANCY AT THINNAI ORGANIC

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. DEMI CHEF DEPARTIE (KITCHEN)
2. KITCHEN STEWARD
3. ROOM ATTENDANT
4. RECEPTIONIST

விண்ணப்பங்களை (CV) E-mail மூலமாக அனுப்பிவைக்கவும்.

hr@thethinnai.com

9/10, Puttur Road, Chunnakam, Jaffna.

021 493 0180 / 021 203 0400


## யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் பங்குதாரர்களுக்கான முக்கிய அறிவித்தல்

எமது 74 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 2019 மார்ச் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இல. 31, மானிப்பாய் வீதியில் அமைந்திருக்கும் "பிள்ளையார் இன்" இல் நடைபெறும் என இத்தால் அறியத்தருகின்றோம்.

பணிப்பாளர் சபை சார்பாக
திரு.இ.சபேசன்
கம்பனி செயலாளர்

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்
530, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


## வேலையாள்கள் தேவை

கொழும்பில் இயங்கும் எலக்ரானிக்ஸ் மற்றும் டிஸ் ஆன்ரெனா விற்பனை நிலையத்திற்கு

- Accounts மற்றும் விற்பனையாளராக பணிபுரியக்கூடிய கணினி அறிவுள்ள நபர் ஒருவர் தேவை. தங்குமிடம், உணவு கிடைக்கும். தங்குமிட வசதி இருந்தால் பெண்களும் விண்ணப்பிக்கலாம். அனுபவத்திற்கும் திறமைக்கும் ஏற்ப Rs.40,000/= வரை சம்பளம் வழங்கப்படும்.
- Dish Antenna பொருத்துனர் மற்றும் ரிசீவர் ரிப்பேர் செய்யக்கூடிய Technicians தேவை. அனுபவத்திற்கும், திறமைக்கும் ஏற்ப Rs.40,000/= + Overtime சம்பளம் வழங்கப்படும். தங்குமிடம் உணவும் இலவசம்.

அனுபவமும் பொறுப்பான தன்மையும் உள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

(CS 24364)04.17

Rajkumar 076 886 6972



சிவபூமி அறக்கட்டளையின் ஆதரவில் கூழாவடி, ஆனைக்கோட்டை

## அபயம் மருத்துவ சேவை நிலையம்

ABAYAM MEDICAL CLINIC AND MEDICAL EDUCATION CENTRE

### திறப்பு விழா

காலம்:- 31.03.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- பிற்பகல் 3.30 மணி

எமது மண்ணில் வாழும் மக்களின் மருத்துவ சேவையில் தமது பங்களிப்பையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்காக பிறநாடுகளில் பணியாற்றும் எம் மண்சார்ந்த வைத்திய நிபுணர்கள் சேவையாற்ற முன் வந்துள்ளனர். துறைசார் வைத்திய நிபுணர்கள் இலவசமாக இப்பணியை ஆற்றுவதற்காக மருத்துவ சேவை நிலையம் திறக்கப்படுகிறது. இவ் வைபவத்துக்கு அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிலம், கட்டடம் அன்பளிப்பு
வைத்தியகலாநிதி அம்பலவாணர் பொன்னம்பலம் குடும்பம் (ஆஸ்திரேலியா — சுதுமலை)

நிகழ்ச்சி நிரல்

தலைமை
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் (தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

பிரதம விருந்தினர் உரை
வைத்திய நிபுணர் கந்தப்பிள்ளை பார்த்தீபன் (லண்டன்)

சிறப்பு விருந்தினர் உரை
வைத்திய கலாநிதி ந.சத்தியமூர்த்தி (பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை)

நன்றியுரை

மாலை 5.00 மணி - இலவச மருத்துவ சேவை ஆரம்பம்

நுரையீரல் சம்பந்தமான நோயாளருக்கு மாலை 5.00 மணி முதல் 8.00 மணிவரை நுரையீரல் சம்பந்தமான விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனைகள் நடைபெறும். நுரையீரல் சம்பந்தமான நோயாளர்கள் சமூகம் தரவும்.

நன்றி

ABAYAM Foundation For Health and Education, UK.

நிர்வாகசபை, சிவபூமி அறக்கட்டளை, இலங்கை, தலைமை அலுவலகம், கோண்டாவில். 021 222 7938


## சாத்திரக்காரர்...

கொள்ளையடித்துச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் இந்தியாவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் தெரிவித்ததாவது:

சந்தேகநபர்கள் இருவரும் சாத்திரக்காரர் போன்று வேடமணிந்து கரம்பன் மற்றும் நாரந்தனைப் பகுதிகளில் சாத்திரம் பார்க்கச் சென்றுள்ளனர். ஒரு வீட்டில் இருந்த பெண் சாத்திரம் பார்க்கும் ஆவலில் அவர்களை வீட்டுக்குள் அனுமதித்துள்ளார். அந்தப் பெண்ணுக்குத் தோசம் உள்ளதாகவும் அதற்குப் பரிகாரம் செய்ய பூசை செய்ய வேண்டும் என்றும் அதற்குப் பெறுமதியான தங்க நகையைப் பூசையில் வைக்க வேண்டும் என்றும் சாத்திரக்காரர்கள் கூறியுள்ளனர்.

அதை நம்பிய பெண் அவர்களிடம் நகையை கொடுத்துள்ளார். பூசை ஆரம்பித்தது. இதனையறிந்த அயல் வீட்டுப் பெண்ணும் சாத்திரம் கேட்கும் ஆவலில் அங்கு சென்றுள்ளார். வீட்டுக்காரர் தங்க நகையைக் கொடுத்ததும், கறிக்குப் பயன்படுத்தும் பழுப் புளியைக் கொண்டுவருமாறு கூறினர். அதனையும் வீட்டுக்காரப் பெண் கொடுத்தார். தங்க நகையைப் புளிக்குள் வைத்து சுவாமி அறையில் வைத்துவிட்டு, குளித்து விட்டு வருமாறு கூறியுள்ளனர்.

பரிகாரம் செய்யும்போது எவரும் தம்முடன் நிற்கக்கூடாது என்று சாத்திரக் காரர்கள் கூறியுள்ளனர். அதனால் மற்றைய பெண் தனது வீட்டில் நின்றுள்ளார். அந்த நேரம் தங்க நகையை எடுத்துக்கொண்டு சாத்திரிமார் தப்பிச் சென்றுவிட்டனர்.

குளித்துவிட்டு வந்த பெண் சாத்திரக்காரர்களைக் காணாது திகைத்தார். சுவாமி அறைக்குள் சென்று பார்த்தபோது புளிக் கரைசல் மட்டும் காணப்பட்டது. தங்க நகையைக் காணவில்லை. அதன் பின்னரே தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து முறைப்பாடு செய்தார் என்றனர். மண்டைத்தீவு பொலிஸ் காவல் அரணுக்குப் பொறுப்பான உபபொலிஸ்பரிசோதகர் விவேகானந்தன் தலைமையிலான குழுவினர் மண்டைதீவில் கண்காணிப்பில் ஈடுபட்டனர். சந்தேகநபர்களின் அங்க அடையாளங்களின் அடிப்படையில் வழிமறித்துச் சோதனையிட்ட போது இருவரும் சிக்கினர். கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இருவரிடமிருந்தும் வங்கி அட்டைகள், கடவுச்சீட்டுகள், கடவுள் விக்கிரகங்கள், இந்திய நாணயங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வீரசேகரவின் ஆலோசனையின்படி இருவரும் மேலதிக விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (கு-26)

## ஓ.எல். ...

இதேவேளை பரீட்சைக்குத் தோற்றிய 527 பேரின் பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (ஓ.5)

## ஒரே...

பெற்றுள்ளது.

ஜானக குமாரசிங்க மற்றும் அச்சலா திசாநாயக்க ஆகிய தம்பதிகளுக்கு இரண்டு மகள்களும், மகனும் ஒரே சூலில் பிறந்தவர்கள். பிறந்த நாளில் இருந்து மூன்று பேரும் தனித்துப் பிரிந்து சென்றதில்லை. புலமைப் பரிசில் பரீட்சையில் மூன்று பேரும் சித்தியடைந்தனர். குளியாப்பிட்டிய மத்திய மகா வித்தியாலத்தில் தமது கல்வியைத் தொடர்ந்தனர். கடந்த ஆண்டு நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மூவரும், ஒன்பது ஏ திறமைச் சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். ஈ.எம். திவ்யாஞ்சலி தெவ்மினி குமாரசிங்க, ஈ.எம். நவாஞ்சலி தெத்மினி குமாரசிங்க, ஈ.எம். பிரியங்ஞன பியுமன்ன குமாரசிங்க ஆகிய சகோதர சகோதரிகளே இந்தச் சாதனையைப் படைத்துள்ளனர். (ஓ.5,21)

## மூன்று..

இரண்டு உந்துருளிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. இதன்போது இரு உந்துருளிகளும் தீப்பற்றிக்கொண்டன. அதில் சிக்குண்டே உந்துருளிகளில் வந்த மூன்று பேருமே உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கி மேலும் மூன்று இளைஞர்கள் காயமடைந்துள்ளனர். அவர்கள் மூவரும் மட்டக்களப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஓ.5,22)

## தற்காலிக கடைகள் வாடகைக்கு

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு
தற்காலிக கடைகள் நாளை (31.03.2019)
ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு
வழங்கப்படும்.

**சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்**
**சீரணி , சண்டிலிப்பாய்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





**திருமதி லூர்துமேரி கனகரத்தினம்**
**(சமாதான நீதவான்)**

சாவகச்சேரி பிரதேசசபையின் 17ஆம்
வட்டார கௌரவ உறுப்பினர்
**திருமதி லூர்துமேரி கனகரத்தினம்**
அவர்கள் **சாவகச்சேரி மாவட்ட**
**நீதிமன்றில் நீதிபதி ஜெ.கஜநிதிபாலன்**
முன்னிலையில் **சமாதான நீதவானாக**
**28.03.2019** சத்திய பிரமாணம்
செய்துகொண்டார். இவர் மென்மேலும்
பல பட்டங்கள் பெற்று மக்களுக்கான
சேவைகளை ஆற்ற வேண்டும் என்றும்
பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- **கணவர், மகன், மகள்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மாதகலைப் பிறப்பிடமாகவும் அளம்பிலை
வசிப்பிடமாகவும் கொண்ட

**இன்னாசிமுத்து**
**சூசைப்பிள்ளை**
**(ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர்)**

தோற்றம்
01.10.1936

மறைவு
30.03.2018

உறவினர்க்கெல்லாம் உதவி புரிபவராக
குடும்பத்துக்குரிய குலப் பெருமையுடன்
அத்தனை கடமைகளையும் அணையவிட்டு
பரமனிடம் பதிவு பண்ணிப் பன்னிரண்டு
மாதங்கள் பறந்து போனதுவோ!!!

**அளம்பில்,**
**முல்லைத்தீவு** **குடும்பத்தினர்.**

(AVA.504)(11.17)



**World Class British Degree @ICBT Jaffna Campus**

Apply now for New Intake 2019

EQAA
Institutionally Accredited
(European Quality Assurance Agency)

# ICBT HND QUANTITY SURVEYING

TVEC REGISTERED

» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

Accredited by RICS

# BSc (Hons) Quantity Surveying

» Entry Qualifications
- *Higher National Diploma in Quantity Surverying*

UGC RECOGNIZED

» Duration: 1 Year

Week End Part Time Classes

### கடந்த...

இது தொடர்பில் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் 9 ஆயிரத்து 57 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். 6 ஆயிரத்து 220 பேர் உயர் தரத்துக்கு தகுதி பெற்றுள்ளனர். இது 68.68 வீதமாகும். 2017ஆம் ஆண்டு 67.77 வீதமாக இது காணப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 495 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். ஆயிரத்து 384 பேர் உயர் தரத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர். இது 55.47 வீதமாகும். 2017ஆம் ஆண்டு 57.17 வீதமாக இது காணப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 774 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். ஆயிரத்து 280 பேர் உயர் தரத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர். இது 72.15 வீதமாகும். 2017ஆம் ஆண்டு 71.44 வீதமாக இது காணப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 976 பேர் பரீட்சைக் குத் தோற்றினர். ஆயிரத்து 221 பேர் உயர் தரத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர். இது 61.79 சதவீதமாகும். 2017ஆம் ஆண்டு 61.46 வீதமாக இது காணப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 672 பேர் பரீட்சைக் குத் தோற்றினர். ஆயிரத்து 895 பேர் உயர் தரத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர். இது 70.92 சதவீதமாகும். 2017ஆம் ஆண்டு 68.53 சதவீதமாக காணப்பட்டது.

(ஓ.5.7.11.21)

### 20 ஆயிரம்...

னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்விலேயே தலைமை அமைச்சர் இவ்வாறு உரையாற்றினார்.

இரண்டு மாதங்களுக்குள் 20 ஆயிரம் பட்டதாரிகள் அரச சேவைக்குள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள். எதிர்கால உலகிற்கு ஏற்ற வகையில் பட்டதாரிகளுக்கு தமது வல்லமையை மேம்படுத்திக் கொள்வது அவசியமாகும். பட்டதாரிகளிடமிருந்து தேவையான சேவை கிடைக்காமை பெரும் பிரச்சினையாகும், என்றும் தலைமை அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாடுமுழுவதுமுள்ள 57 ஆயிரம் பட்டதாரிகளையும் ஒரே தடவையில் எந்தொரு நிபந்தனையுமின்றி அரச சேவைக்குள் உள்ளீர்க்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜக்ச அரசிடம் வலியுறுத்தி நிலையில் தலைமை அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

(ஓ.5)

### விபத்தில்...

கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த தங்கராசா உதயகுமார் (வயது-37) என்னும் இருபிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார். மாதகல் பகுதியில் உள்ள தோட்டத்துக்கு கூலிவேலைக்காக ஈருருளியில் கணவனும் மனைவியும் சென்று மாலை 7 மணியளவில் வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் பண்டத்தரிப்பு திசையில் இருந்து மாதகல் நோக்கிப் பயணித்த ஓர் உந்துருளி எதிர்த் திசையில் பயணித்தவர் மீது மோதியுள்ளது. ஈருருளியில் பயணித்த தம்பதியர் படுகாயமடைந்தனர். அவ்வாறு மோதிய உந்துருளி நிறுத்தாது அங்கிருந்து தப்பிச் சென்றது. விபத்தில் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதான மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி 28ஆம் திகதி மாலையில் உயிரிழந்தார். விபத்தை ஏற்படுத்தி விட்டுதப்பியோடியவர் அயலவர்களின் உதவியுடன் இனம்காணப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் சாரதி அனுமதிப் பத்திரமும் இல்லை என்பது கண்டறியப் பட்டுள்ளது.

(ஓ.5.105)

சிவமயம்

## தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியம்
## அங்குரார்ப்பண வைபவம்

மேற்படி எமது தாயகம் நம்பிக்கை நிதியத்தின்
அங்குரார்ப்பணவைபவ விழா

நாளை (31.03.2019) ஞாயிற்றுக்கிழமை, பி.ப 4.00 மணிக்கு

**பெருமாள் கோவில்**
**"ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண மண்டபத்தில்"**

நிகழவிருப்பதனால் இவ்வைபவத்தில்
தாங்களும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்

*பிரதம விருந்தினர்*
**திரு.நா. வேதநாயகன்** அவர்கள்
(யாழ். அரசாங்க அதிபர்)

அன்று பாடசாலை மாணவர்களுக்கு
துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வும்,
22 பயனாளிகளுக்கு கோ தான நிகழ்வும்
இடம்பெறும் என்பதனையும் மகிழ்வுடன்
அறியத்தருகின்றோம்.

செ.வீ.சிறிதரன்
(தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியம் சார்பில்)

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 29.03.2019 | 2488 | நீலம் |

மீனம்
வெற்றி இலக்கங்கள்: 07 22 23 62
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 02, 275, 084/=
31.03.2019 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 425
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.03.29
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 118,912,963/-
K 41 48 49 58
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>K என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 569
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.03.29
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,325,750/-
வெற்றி இலக்கங்கள்: 06 23 31 39 V
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## மரண அறிவித்தல்



தோற்றம்
29
.
06
.
1934

மறைவு
29
.
03
.
2019

### ஆசைப்பிள்ளை ஆனந்தம்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை ஆனந்தம் நேற்று (29.03.2019) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கௌரியம்மா விபுலானந்தன்



வேளாதோப்பு கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌரியம்மா விபுலானந்தன் 27.03.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், கனகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற விபுலானந்தனின் அன்புமனைவியும் லோகநாயகி, தவராஜா, பாலராஜா, கருணேஸ்வரன், காலஞ்சென்ற நந்தீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமாறன், தாரணி, தசராஜ், லோகராஜ், ஸ்ரீரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும் லதா, கனகராஜா, தேவிஸ்ரீ, அகிலா, செந்தில்குமரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஸ்ரீசாய்ராம், அக் ஷயன், அக் ஷனா, அக்ஸ்வின், அக் ஷயா, வர்ஷன், யஸ்விந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இராமஜெயம், ஞானபூங்கோதை, ராஜி, அருணா மற்றும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சாய்ராமின் அன்புப் பெரியதாயாரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, முத்தம்மா, கனகம்மா ஆகியோரின் பாசமிகு பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2019) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வேளாதோப்பு, கட்டப்பிராய்,**
**யாழ்ப்பாணம்.**
**021 223 0091, 077 4771567**

**தகவல்: குடும்பத்தினர்.**




## வெளிநாட்டு...

இது தொடர்பில் அவரது ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி அப்போதைய அரச தலைவரால், இந்தியாவின் முன்னாள் தலைமை நீதியரசர் பகவதி தலைமையில், 16 மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரணை செய்யும் உடலகம ஆணைக்குழுவின் விசாரணைகளைக் கண்காணிப்பதற்கு அமைத்த முன்னணி நபர்களைக் கொண்ட பன்னாட்டு சுயாதீனக் குழுவை உதாரணமாகக் கொண்டு கலப்பு நீதிமன்றத்தை உருவாக்கலாம்.

வெளிநாட்டு நீதிபதிகளின் உள்ளடக்கம் எவ்வாறு மனித உரிமைகள் மீறல் பொறிமுறைகளில் பன்னாட்டுத் தராதரத்தையும் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் நம்பகத்தன்மையையும் ஏற்படுத்தும் என்பதற்கு நீதியரசர் பகவதி குழு ஒரு சிறந்த உதாரணமாகும்.

அதேபோல, இலங்கை அரசின் உடலகமஆணைக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் பன்னாட்டுத் தராதரம் மற்றும் கோட்பாடுகளுக்கு அமையாமலும் வெளிப்படைத் தன்மை இன்றியும் நடைபெற்றது என்றுகூறிஆணைக் குழுவின் செயற்பாடுகளுக்கு அனுமதி கொடுப்பதை தவிர்க்கும்வகையில் ஒரு வருடத்தின் பின்னர், 'பன்னாட்டு சுயாதீன குழுவை' நீதியரசர் பகவதி கலைத்தமையானது ஏன் உள்நாட்டு பொறிமுறை இலங்கைக்கு பொருத்த மற்றது என்பதற்கான ஒரு சிறந்த உதாரணமாகும் என்றுள்ளது. (ஓ.5)

## மரண அறிவித்தல்



### ராஜரட்ணம் (இரத்தினம்) செல்வம்

யாழ். மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் நல்லூர் வீரமாகாளியம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜரட்ணம் (இரத்தினம்) செல்வம் நேற்று (29.03.2019) வெள்ளிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயங்கர் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும் ஐயங்கர் இராஜரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகலிங்கம் துரைராஜாவின் அன்புச் சகோதரியும் இராஜகரன் (பெல்ஜியம்), டிலிஸ்ரன் (கொலன்ட்), சுகதாசன் (கட்டடங்கள் திணைக்களம்), சுஜாத்தா (இந்தியா), ரஜீவன் (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிலா (பெல்ஜியம்), சுபத்திரா (கொலன்ட்), சுபாஜினி, விபுலன் (இந்தியா), பொம்மி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அஸ்விகா, கிருத்திகா, கிஷான், சாயங்கா, பபிசான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (01.04.2019) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சுகதாசன் 077 377 9442**
**297, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.**
**(வீரமாகாளியம்மன் கோயிலடி முன்பாக)**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 23799/15/18)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை வீரசிங்கம்

*(ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜெண்ட்)*



வட்டு தென்மேற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வீரசிங்கம் கடந்த (26.03.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களரன செல்லத்துரை இராஜாங்கம் தம்பதியினரின் பாசமிகு மருமகனும் தங்கம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான பொலிஸ் உத்தியோகத்தர்களான செல்லத்துரை, நாகலிங்கம், கந்தையா (கந்தமுத்து), நாராயணபிள்ளை, சிவராசா ஆகியோரின் அன்பு சகோதரனும் சறோஜினி (கனடா), நாகேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகுதந்தையும் கோபாலகுலசிங்கம் (கனடா), தயாளன் (கனடா), ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனோஜன், வினோத், துவாரகன், தனுஜன், நீகன், தக்சாயினி ஆகியோரின் அன்பு பேரனும் றெஜியாவின் அன்பு தாத்தாவும் ரேவாவின் பாசமிகு பூட்டனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வட்டு தென்மேற்கு,**
**வட்டுக்கோட்டை**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 491 7247**

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் ரோகினி (மரியா)



தோற்றம் 07.10.1939
மறைவு 29.03.2019

கோயில் வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ரோகினி கடந்த (29.03.2019) வெள்ளிக் கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் புஸ்பராணி, செல்வராணி, நீலா, தவமணி, தவராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற அன்ரன் மற்றும் மகாலிங்கம், சண்முகநாதன், விஜயகுமார், பத்மநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ராதிகா, ரஜிதா, ராஜ்குமார், விஜிதா, ரகுலன், அனுசன், சோபா, நோவா, ரகுவரன், ராஜீவ், ரஜீவன், ஜாம்சி, சாம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிநல்லடக்க ஆராதனை இன்று (30.03.2019) சனிக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி சுதுமலையில் அமைந்துள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# சங்கானைப் பிரதேசத்தில் 777 பேர் வேலைதேடி பதிவு

*யாழ்ப்பாணம், மார்ச் 30*

யாழ்ப்பாண மாவட்டத்தில் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள இளையோரில் 777 பேர் அரச, மற்றும் தனியார் வேலைகளுக்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

சங்கனைப்பிரதேசசெயலகமும், யாழ்ப்பாண மாவட்ட தொழில் திணைக்களமும் இணைந்து சங்கானைப் பகுதியில் தொழில் தேடுவோர் தொடர்பான பதிவுகளை கடந்த புதன் கிழமை மேற்கொண்டனர்.
யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் இதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தது.
சங்கானைப் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள ஒவ்வொரு கிராம அலுவர் பிரிவுகளிலும் வேலையின்றி இருக்கும் இளையோர் பதிவு செய்யப்பட்டனர்.
காலை 8 மணிமுதல் மாலை 3 மணிவரை அந்தப் பதிவுகள் இடம்பெற்றிருந்தன. அன்று மட்டும் 777 பேர் வேலைவாய்ப்புக்காக தங்களது விண்ணப்பங்களை வழங்கியுள்ளனர்.
அரச, தனியாார் துறைகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல், தொழிற் பயிற்சிக்கான வாய்புக்களைப் பெற்றுக் கொடுத்தல், சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தல், பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளை நடத்துதல், உயர் கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல், தொழில் வழிகாட்டல்ஆலோசனைகளை வழங்குதல், தொழில் வெற்றிடங்கள் தொடர்பான தகவல்களை வழங்குதல், உளவியல் ஆய்வினூடாக தனித்திறமைகளை வெளிக்கொணருதல் போன்றன பதிவு செய்யப்பட்ட இளையோருக்கு வழங்கப்படவுள்ளன என்று மாவட்டச்செயலகம் தெரிவித்துள்ளது.
25ஆம் திகதி பதிவுகளை மேற்கொண்ட இளையோருக்கான தொழில் வழிகாட்டல் பயற்சிகள் விரைவில் வழங்கப்படவுள்ளன என்றுமனிதவளதொழில்வாய்ப்பு திணைக்கள அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.
இந்த சேவைகளுக்கு விண்ணப்பிக்கத் தவறியோர் கிராம அலுவர் ஊடாக மேலும் விண்ணப்பிக்க முடியும் என்றும் அந்த அலுவலர் தெரிவித்தார். (எ-21,ரி)

## பன்னாட்டு மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 30
யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் பன்னாட்டு மகளிர் தின நிகழ்வு வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். சங்கத் தலைவி திருமதி உதயகுமார் மகேஸ்வரி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மேலதிக மாவட்ட செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்துகொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினர்களாக தேசிய கல்வி நிறுவன யாழ்ப்பாண பிராந்திய நிலைய இணைப்பாளர் திருமதி கனகலட்சுமி வில்வநாதன், பெண்கள் அபிவிருத்தி அலுவலர் திருமதி நதியா சூரியதாஸ் மதிப்புறு விருந்தினராக கிராம அலுவலர் திருமதி தீபன் பிரதீபா, அபிவிருத்தி அலுவலர் சிவாஜினி கந்தையா, சமுர்த்தி அலுவலர் பஞ்சரத்தினம் வசீகரன், ஒய்வுபெற்ற கிராம அலுவலர் நாகலிங்கம் சுந்தரராஜா ஆகியோர் கலந்துகொள்வர்.
பாரம்பரிய விளையாட்டுக்களில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஜ)



## விளையாட்டு நிகழ்வுகள்

கொடிகாமம், மார்ச் 30
யாழ்ப்பாணம் கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள் விநாயகர் விளையாட்டு கழக மைதானத்தில் அண்மையில் முன்பள்ளி ஆசிரியர் திருமதி இரவீந்திரன் மகேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், சிறப்பு விருந்தினராக கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபர் நா.கருணாகரன், மதிப்புறு விருந்தினர்களாக கைதடி தெற்கு கிராம அலுவலர் செல்வி விஜய சிறி நியூறிசா, பொருளாதார அபிவிருத்தி அலுவலர் ர.அனுராகரன், கைதடி முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி சுபத்திரா தேவி தனபாலசிங்கம், விநாயகர் விளையாட்டுக் கழக செயலாளர் செல்வன் க.தமிழ்ச்செல்வன், உவீரி மாதர் கிராம அபிவிருத்தி சங்க தலைவி திருமதி முத்துராமலிங்கம் குகனேஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டனர்.
மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகள், வினோத உடைப் போட்டி என்பன இடம்பெற்றன. வெற்றிபெற்ற சிறார்களுக்கான பரிசில்களை முதன்மை விருந்தினர் வழங்கி வைத்தார். (ஜ-159)

## தனித்துவாழ்ந்தவிவசாயி தவறான முடிவு

சாவகச்சேரி, மார்ச் 30
தனித்து வாழ்ந்த 71 வயதுடைய விவசாயி தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.
அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி ஜெகசோதி என்பவரே உயிர்மாய்த்தார்.
அவர் பொது மயானத்தில் கொட்டகைக்குள் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது பிள்ளைகள் திருமணமாகி வடக்கில் வாழ்ந்து வருகின்றனர். மனைவி காலமாகிவிட்டார்.
அவர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றார். தினமும் சந்தைக்கு விவசாய உற்பத்திகளைக் கொண்டு செல்வார். இந்த நிலையில், தனித்திருந்த அவர் தவறான முடிவெடுத்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
கடந்த புதன்கிழமை இரவு படுக்கைக்குச் சென்றவர் மறுநாள் காலை மயான கொட்டகைகள் சடலமாக மீட்கப்பட்டார். (து)

## வீட்டு திட்டத்துக்கு அடிக்கல் நடல்

யாழ்ப்பாணம்,மார்ச் 30
ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் ஆனந்தபுரி கிராமத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் 'செமட்ட செவன' மாதிரி கிராமம் திட்டத்தின் கீழ் 16 வீடுகளைக் கொண்ட மாதிரி கிராமம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள் பிரதேச செயலக அதிகாரிகள், கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டனர். ஒரு வீட்டுக்கு 7இலட்சத்து 50 ஆயிரம் வழங்கப்பட்டது . கடந்த காலங்களில் ஒரு வீட்டுக்கு ஐந்து இலட்சம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-154)





## சமாதான நீதிவான்களாக பதவியேற்பு

சாவகச்சேரி, மார்ச் 30
சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் உட்பட 23 உறுப்பினர்கள் சமாதான நீதிவான்களாக நேற்றுமுன்தினம் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர்.
பிரதேச சபையில் தவிசாளர், உப தவிசாளர் உட்பட 31உறுப்பினர்கள் உள்ள போதிலும் தவிசாளர் உட்பட ஏழு பேர் ஏற்கனவே சமாதான நீதிவான்களாக உள்ளதால் ஏனைய 24 பேர் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்ட போதிலும் ஒருவர் வருகை தராததால் 23 உறுப்பினர்கள் பதவியேற்றனர்.
சபையின் பதவிக்காலம் முடியும் வரை இவர்கள் சமாதான நீதிவான்களாக செயற்படமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

## யோகா பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மார்ச் 30
புதிய யோகா உலகம் யோகா பயிற்சி நெறிகளை நல்லூர் தேரடி அருகே அமைந்துள்ள அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் ஆரம்பிக்கவுள்ளது.
இந்தப் பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
யோகா வகுப்புக்கள் காலை மற்றும் மாலை வேளைகளில் 6மெணி தொடக்கம் 7 மணி வரை இருபிரிவுகளாக தினமும் நடைபெறும்.
புதிதாக இணைய விரும்பு பவர்கள் அறிமுகநிகழ்வில் கலந்து கொள்ளமுடியும் என்று யோகா உலகம் அமைப்பின் இயக்குனர் சி.உமாசுதன் அறிவித்துள்ளார். (ஜ)



தெல்லிப்பழை பிரதேச செயலக பன்னாட்டு மகளிர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் நடைபெற்றன. (க-9)

## பொங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம் மார்ச்30
சுன்னாகம். தாளையம்பதி சிறி அரிகர புத்திர ஐயனார் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்று ஆலய ஆதின கர்த்தாக்கள் தெரிவித்துள்ளனர். (ஜ)



## இலவச சமய தீட்சை

கொடிகாமம் மார்ச் 30
சரசாலை இலந்தைதிடல் வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் இலவச சமய தீட்சை வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும். தீட்சை பெற விரும்புவோர் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஜ-159)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,மார்ச் 30
யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் அருள்மிகு சீரணி நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து 18 நாள்கள் திருவிழாக்கள் நடைபெறும். 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 20 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலயத்தின் இந்து இளைஞர் மன்றம் அறிவித்துள்ளது. (ஜ)

## மதிப்பளிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 30
தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் இன் 102 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மலையக கலை கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் பல்துறை சார்ந்தவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.
மக்களின் சமூக மேம்பாட்டுக்காகவும், அர்ப்பணிப்போடு சேவையற்றிய மனித நேயம் கொண்ட பல்துறை சார்ந்தவர்கள் இதன்போது மதிப்பளிக்கப்பட்டனர்.
இந்த நிகழ்வு கண்டி கெப்பற்றிகொல நினைவு மண்டபத்தில் அண்மையில் டி.ஜி.ஜெ.ராஜா தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் வட பிராந்திய எம்.ஜி.ஆர் முன்னேற்ற கழகத்தின் தலைவரும் சமூகசேவையாளருமான வ.இ. செல்வகுமாருக்கு சமூக தீபம் என்ற பட்டம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.
முதன்மைவிருத்தினரான கல்முனை பிரதேச முன்னாள் செயலர் முகமது நவ்பல் கலந்து கொண்டார். (ஜ-23)

# முல்லைத்தீவு வலயத்தில் 20 மாணவர்களுக்கு 9ஏ

**2018 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியாகியிருந்தன. அதன்அடிப்படையில் முல்லைத் தீவுக் கல்வி வலயத்தில் இருந்து 20 மாணவர்கள் 9ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.**

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் அதிகமான மாணவர்கள் சித்திய டைந்துள்ளனர்.

அங்கு 7 மாணவர்களும், முல்லைத் தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் 3 மாணவர்களும், விசுவமடு மகா வித் தியாலயம், இரணைப்பாலை றோ.க வித்தியாலயம், முல்லைத்தீவு மகா வித்தியாலயம், செம்மலை மகாவித்தி யாலயம், குமிழமுனை மகாவித்தியா லயம், கலைமகள் வித்தியால யம், சிலாவத்தை தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இருந்து தலா ஒருமாணவர்கள் 9ஏ சித்திகளைப் பெற் றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 3ஆயிரத்து 494 மாணவர்கள் க. பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியபோதும் ஆயிரத்து 246 மாணவர்களே உயர்தரம் கற்கத் தகுதிபெற்றுள்ளனர். முல்லையில் உயர் தரத்துக்குத் தகுதி பெற்றவர்கள் வீதம் 60.4 என்று கணிப்பிடப்பட்டுள் ளது. (ஜ-21)



## பாடசாலையில் முதலிடம் பெற்ற மாணவி

வவுனியா,மார்ச் 30

வவுனியா இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை யில் க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் செல்வி ஆனந்த ராஜா அதிசயா 8 ஏ சித்திகளைப் பெற்று முதலிடத்தில் உள் ளார். குறித்த மாணவிக்குப் பாடசாலை அபிவிருத்திக்குழு வினர் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த.சாதாரணப்பரீட்சையின் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின. (ஜ)



## விக்ரோறியாக் கல்லூரியில் 4 மாணவர்கள் 9 ஏ சித்தி

யாழ்ப்பாணம், மார்ச் 30

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் 4 மாணவர் கள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ள னர்.

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதார ணப் பரீட்சையின் பெறுபேறுகளின் முடிவுகள் கல்வி திணைக்களத்தால் நேற்றுமுன்தினம் வெளிடப்பட்டன.

இந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் விக் ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த சுவேந்தினி, நிரோயிகா, வித்தகி, கேஷானி ஆகிய மாணவர் கள் 9 ஏ சித்தியை பெற்றுள்ளனர் என்று பாடசா லையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## க.பொ.த சாதாரண தரம் ஆரம்பமாகி முதல் தடவையிலேயே 100 வீத சித்தி

பளை, மார்ச் 30

பளை தர்மக்கேணி அ.த.க.பாட சாலை க.பொ.த. சாதாரண தரம் ஆரம்பிக்கப்பட்டு முதல் தடவையி லேயே 100 வீத சித்தி பெற்று சாதனை படைத்துள்ளது.

பாடசாலையில் கடந்த வருடம் தரம் 11 வகுப்பு நடத்த அனுமதி வழங்கப்பட்டு 10 மாணவர்களுடன் வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட் சைக்கு 10 மாணவர்களும் தோற்றி யிருந்தனர்.

நேற்றுமுன்தினம் வெளியான பரீட்சை முடிவுகளின் பிரகாரம் பத்து மாணவர் களும் 100 வீத சித்தி பெற்று க.பொ.த. உயர்தரம் கற்பதற்கு தகைமை பெற் றுள்ளனர் என அதிபர் வே.செல்வ குமார் தெரிவித்தார்.

**பரீட்சை முடிவுகள் வருமாறு**

லக்சிகா அழகேந்திரன் 5 ஏ பி 2சி, சரண்யா சசிக்குமார் 4 ஏ பி 2சி 2 எஸ், சுதர்சனா ரகுநாதன் 3 ஏ 3 பி சி எஸ், கரனீகா சசிக்குமார் 3 ஏ 2 பி 3, சி.லோகநாதன் கேதுஜன் 3 ஏ பி 3 சி எஸ், யதுர்சா ஜெயக்காந்தன் 2 ஏ 2பி 4 சி, கணேசமூர்த்தி நிருஷாந் 2 ஏ 2பி 4சி,

வேல்முருகு கோநிலவன் 2 ஏ 3 சி 4 எஸ் ,பேரரசி தியாகராசா 2 பி 3 சி 3 எஸ், திருநாவுக்கரசு தமிழ் மகன் 5சி 2 எஸ். (ஜ-9)

## வேம்படி 100 வீதம் பாடசாலை சித்தி

யாழ்ப்பாணம், மார்ச் 30

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் யாழ்ப் பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாட சாலை மாணவர்கள் 100 வீதமான சித்தை எய்தியுள்ளனர்.

2018 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதா ரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன் தினம் வெளியாகின. இதன்படி வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 50 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள் ளனர்.

32 மாணவர்கள் தமிழ்மொழி மூலமும் 18 மாணவர்கள் ஆங்கில மொழிமூலமும் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

49 பேர் 8ஏ தரச் சித்தி யினையும், 34 மாண வர்கள் 7ஏ தரச்சித்தியினையும் 35 மாணவர் கள் 6ஏ தரச்சித்தியையும் பெற்றுள்ளனர்.

பாடசாலயில் மொத்தமாக 231 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர் அவர்கள் 157பேர் தமிழ்மொழி மூலமும், 74 பேர் ஆங் கில மொழியிலும் பரீட்சை எழுதியிருந்தனர். அதனடிப்படையில் வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலை 100 வீதம் சித்தியடைந்துள் ளது.

சித்தியடைந்த மாணவர்கள் அனைவருக்கும் பாடசாலைச் சமூகத்தினர் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். (ஜ-21)

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

2018 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைப்பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின. இதன்படி மாணவர்களின் பெறுபேறுகள் பாடசாலைகளால் வெளி யிடப்பட்டுள்ளன.

**யாழ்ப்பாணம் உடுத்துறை மகா வித்தியாலயம்**

வை.துவாரகா 9ஏ.எஸ்.சதுஸ்டிகா 3ஏ பி 2சி 3எஸ்,வை.பல்லவி 2ஏ 5பி 2சி,எ. ஜானுஜன் 3சி 3எஸ்,ஜே.ஜெதுர்சன் 4சி 3எஸ், எ.கிருசிகன் ஏ 5பி 2சி எஸ்,ஆர். ரதுசன் பி 6சி,கே.சயந்தன் 4சி எஸ்,எஸ். தனுசன் பி 6சி எஸ்,ஆர்.தர்சன் 5சி 3எஸ்,ஐ.தேனிலவன் 2சி 3எஸ், கே.துள சிகன் 3சி 3எஸ்,கே.துவாரகன்பி 4சி 2எஸ், எஸ்.விதுர்ஜன் 2சி 5எஸ்,ஆர். இந்துஜா 4பி சி 3எஸ்,வை.கிஷாந்தினி பி 3சி 3எஸ், எம்.ரஜீவனா பி 3சி 3எஸ்,கே. ரிசிகா 2பி 3சி 3எஸ்,ரி.சங்கீதா பி 3சி 3எஸ்,எஸ்.சதுஸ்டிகா 3ஏ பி 2சி 3எஸ், பி.ஸ்ரீசுபா 4ஏ சி எஸ், எஸ்.வான்மதி ஏ 2பி 4சி எஸ்.

**யாழ்ப்பாணம் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்**

ம.திருவரங்கன் 9ஏ,க.செந்தாளன் 8ஏ பி, த.விதுசியா 7ஏ பி சி, பி.மிதுசா 3ஏ 2பி 4சி,பா.ஆருரன் 3ஏ 4பி 2சி

**யாழ்ப்பாணம் வரணி மத்திய கல்லூரி**

என்.யருசா 8ஏ பி, ஆர்.நிர்சன் 7ஏ பி சி, கே.விதுசன் 4ஏ 4பி சி, கே.யனுசா 3ஏ 6பி, வை.செந்தூரி 4ஏ பி 2சி 2எஸ்,வை. கிரிஜா 3ஏ 3பி 3சி,எஸ்.ரனுஜா 3ஏ 5பி சி.வி.ஜாலவன் 3ஏ 5பி எஸ்,கே.நிலோ ஜினி 2ஏ 2பி 4சி எஸ்,கே.ரவிந்தன் ஏ 2பி 2சி 4எஸ்,வை.யசிந்தினி ஏ 4பி 4சி,கே. யசிந்தா ஏ 2பி 5சி எஸ்,கே.தர்மிளா 2ஏ 2பி 5சி,எம்.ஜெனிபா 2ஏ 6சி எஸ்,ரி. நிஷாந்தன்ஏ 3பி 3சி எஸ்,ஆர்.சாருஜா 2ஏ 2சி 4எஸ்,எஸ்.மதுசா ஏ 2பி 3சி 2எஸ்,ரி. யனுசிகா ஏ பி 4சி 2எஸ்,யு.கேசனா ஏ 3பி 3சி 2எஸ்,கே.தனுசன் ஏ 4சி 3எஸ்.

**யாழ்ப்பாணம் மந்துவில் றோ.க.த.க பாடசாலை**

ஸ.தீபாகர் ஏ2 பி 3சி 2எஸ்,த.டெல்சன் 5ஏ 3பி எஸ், ஞா.சாந்தருபன் ஏ3 பி3 சி 2எஸ், த.ருமேகாந்த் 4ஏ 4பி சி,த.மயூராபி 4சி 2எஸ்,பி.பிரவீனா 6ஏ பி 2சி,த.ருமேகா ஏ பி 5சி 2எஸ்.

**யாழ்ப்பாணம் மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை**

ஸ்ரீ.தனுசன் ஏ 6சி 2எஸ்,யெ.துஸ்யந்தினி ஏ 2பி 3சி 2எஸ், கொ.அவைட்சனா பி 4சி 3எஸ்,ம.நிதுசா பி 2சி 3எஸ்.

**யாழ்ப்பாணம் கடைக்காடு றோ.க.த.க பாடசாலை**

ஆர்.ஜனுஜா 3சிஎஸ்,எஸ்.யதுசன் பி 5சி எஸ், ஜே.கனிஸ்டன் 4சி 3எஸ்,ஏ.நிதர் சன் ஏ பி 4சி,என்.நியூமன் 3சி 4எஸ்,ஆர். புகழரசு 4சி 2எஸ்,எம்.ரஜீவன் பி 4சி 2எஸ்,ஆர்.ரஜீபன் பி 3சி 3எஸ்,வி.விதுசா பி 3சி 3எஸ்,எம்.டிலோஜினி ஏ 4சி 2எஸ், ஆர்.இன்பருதி ஏ 4சி எஸ்,ஏ.ஜெனிதா பி 2சி 2எஸ்,ஜெ.ஜெயசுதர்சினி 3பி சி 2எஸ்,ஏ.கலைசெல்வி 2ஏ பி 2சி 3எஸ், கே.கீர்த்தனா 3சி 4எஸ்,ரி.தமிழிசை 2ஏ 2பி 2சி 2எஸ்,ஆர்.விதுபா ஏ 2பி 3சி 2எஸ்,பி.விதுசா 4சி 3எஸ்.

**யாழ்ப்பாணம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி**

எஸ்.குகபரன் 8ஏ, ஐ.தனுசிகன் 8ஏ, கே.மதுசங்கர் 8ஏ, வி.அபர்ணன் 8ஏ, எஸ்.மாதங்கி8ஏ, எஸ்.சுபாங்கி8ஏ, என். துலக்ஷி8ஏ, எஸ்.சுகர்ணா8ஏ, வி.கம்சிகா 8ஏ, பி.தர்மிகா8ஏ, எ. சானுஜா8ஏ, எ. சாருஜா8ஏ, ஜெ.ரிசனுகா8ஏ, ஆர்.மதுசன் 8ஏ, எஸ்.சங்கீதன்8ஏ, ஜெ.ஜெயமதுரா8ஏ கே.கீர்த்தனன் 7 ஏ,பி.சயன் 7 ஏ,எல்.கோவி சாந்த் 7 ஏ,அஜிசாந்த் 7 ஏ.எஸ்.நிவேதா 7 ஏ,வி.கேதுசா 7 ஏ,எஸ்.காதாம்பவி 7 ஏ,எஸ்.திலக்சன் 7ஏ, டினெக்சன் 6ஏ, நிதர் சனா 6ஏ.கே.டிலக்ஸ்னவி6ஏ,ஜே.ஜீவிகா 6ஏ.கே.வினோஜா 6ஏ.எஸ்.அபிஷா 6ஏ,வி.வேதினி 6ஏ,ஆர்.சதுஷ்னவி6ஏ, கே.கஜீபன் 5ஏ, ஏ.கஜராஜ் 5ஏ.பி.பிரி யங்கா5ஏ,ஜே.சினிகா5ஏ.

**யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி**

அ.சந்தோஷி 9ஏ,த.விஷ்ணுஜா 9ஏ,உ. நிதுஷா 9ஏ.சி.விவேகா 9ஏ, த.தயானி 8ஏபி,து.ஸ்ரீபிரியா 8ஏபி,சு.ஆனிசா 8ஏபி, ஜெ.கஜலப்பிரியா 8ஏபி,ப.தர்சிகா 8ஏபி,கு. சங்கவி 8ஏபி,கு.எழில்மதி 8ஏபி,சி.சிவப் பிரியா 8ஏபி,ச.சுவஸ்யந்தி 8ஏபி,உ. கிருஷ்ணவி 8ஏபி,சு.யதுர்சனி 8ஏபி,ச. சத்தியரூபினி 8ஏசி,வ.அக்சயா 8ஏசி,பா. டிருசிகா 7ஏ2பி,சி.அபிராமி 7ஏ2பி,அ. உமாபாரதி 7ஏ2பி,றொ.விதுர்சா 7ஏபிசி,அ. கிஷாளினி 7ஏ2சி,ச.டன்சியா 7ஏபிஎஸ்,ர. தரணியா 6ஏ3பி,செ.தக்சாயினி 6ஏபி2சி, ப.பவப்பிரகாசினி 6ஏ2பிசி,சி.சிவரஞ்சனி 6ஏ2பிசி,ப.சிந்துஜா 6ஏ2பிசி,கி.சரணியா 6ஏ2பிசி,ச.துஷாரகா 6ஏ3பி,ஜெ.நிவேதிகா 6ஏ3பி, ப.லக்சிகா 5ஏ2பி2சி,ஜெ.மகா வைஷ்ணவி 5ஏ3பிசி,சி.சோனியா 5ஏ3பிசி,அ.தனுசியா 5ஏ4பி,ச.தரங்கினி 5ஏ3பிசி, றோ.தஸ்மிகா 5ஏ3பிசி,ச.அருச் சனா 5ஏ2பி2சி,துவாரகா நிமலன் 5ஏ3பிசி,சு.சங்கவி 5ஏ4பி,சு.ஆத்மிகா 5ஏ3பிசி.

# நகரில் முறைகேடான கட்டுமானங்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கும் மாநகர சபை

## தொழில்நுட்ப அலுவலரின் திருமணக் கனவும் அதற்கொரு காரணமாம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

**தொ**ழில்நுட்ப அலுவலர் ஒருவரின் திருமணக் கனவு காரணமாக, யாழ்ப்பாண மாநகர சபைப் பகுதிக்குள் சட்டதிட்டங்களை மீறிய கட்டடங்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. முறைகேடாகக் கட்டப்படும் கட்டடங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்வது தனது திருமணத்தைப் பாதிக்கும் என்று குறித்த தொழில்நுட்ப அலுவலர் கூறுவதால் சட்டத்துக்கு மாறான கட்டடங்களை உருவாக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாண நகரில் ஒரு வீதியைக் காணவில்லை என்கிற விவகாரத்தை மாநகர சபை உறுப்பினர் ந.லோகதயாளன் சபையில் முன்வைத்தபோது எழுந்த விவாதத்திலேயே முறைகேடான கட்டடங்களை அகற்றுவதற்கும் கட்டுபடுத்துவதற்கும் உள்ள இந்த விநோதமான தடை பற்றிய உள்வீட்டு விடயங்கள் அம்பலத்துக்கு வந்தன.

"நகரின் மத்தியில் காங்கேசன்துறை வீதியில் இருந்து ஜும்மா பள்ளிவாசல் வீதிக்குச் செல்லும் இணைப்பு வீதியை இப்போது காணவில்லை. மின்சார நிலைய வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று அந்த வீதியை ஆக்கிரமித்து வைத்துள்ளது. மாநகர சபைக்குரிய அந்த வீதியை மீட்க ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?" என்றார் உறுப்பினர்.

இதையடுத்து நகரத்துக்குள் சட்டத்துக்குப் புறம்பாக எழுப்பப்படும் கட்டுமானங்கள் தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன.

**சபைக்குரிய ஆவணம் எங்கே?**

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைப் பரப்புக்குள் 500க்கும் மேற்பட்ட முறைகேடான கட்டடங்கள் அமைக்கப்படும் நிலையில், வெறும் 40 கட்டடங்கள் தொடர்பில்தான் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது. பொது மக்களுக்கு எதிராக மட்டும் வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றதே தவிர, பணம் படைத்தவர்கள் மற்றும் அதிகாரம் மிக்கவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

முறையற்ற கட்டுமானங்கள் மீது வழக்குத் தொடுப்பது சபையின் தொழில்நுட்ப அலுவலரின் பணி. ஆனால், முறையற்ற கட்டுமானங்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு அவருக்குப் பணித்தாலும் அவர் நடவடிக்கை எடுக்க முன்வருகிறார் இல்லை என்று இதற்குப் பதிலளித்தார் பொறியியலாளர் வரதன்.

மேலதிகாரியான பொறியியலாளர் இட்ட பணியை நிறைவேற்ற மாட்டேன் எனத் தெரிவிக்கும் தொழில் நுட்ப அலுவலர் இந்தச் சபைக்கு தேவைதானா? என்று உடனே கேள்வியெழுப்பினார் உறுப்பினர் லோகதயாளன்.

**நீதிமன்று சென்றால் பெண் கிடைக்காது!**

இதற்குப் பதிலளித்த மாநகர முதல்வர் ஆனல்ட், "தொழில்நுட்ப அலுவலர் வழக்குப் போடமாட்டேன் என்பதற்கான காரணத்தை என்னிடமும் ஆணையாளரிடமும் கூறிய போது வியப்படைந்தோம்" என்றார்.

"தான் திருமணம் செய்யாதவர் எனவும் வழக்குத் தாக்கல் செய்தால் அடிக்கடி நீதிமன்றம் செல்ல வேண்டிய நிலமை ஏற்படும் என்றும் அவ்வாறு நீதிமன்றுக்குச் சென்று வந்தால் மணம் முடிக்க பெண் கிடைக்காது போய்விடும் என்றும் தொழில்நுட்ப அலுவலர் தம்மிடம் தெரிவித்தார்" என்றார் மாநகர பிதா.

இதனையடுத்து, குறித்த தொழில்நுட்ப அலுவலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் சபையின் சட்டத்தரணி ஊடாக வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

**சட்டத்தரணியும் தவறிழைக்கிறார்!**

சபையின் சட்டத்தரணியே அனுமதி பெறாது பருத்தித்துறை வீதியில் கட்டடம் ஒன்றை எழுப்பி வரும்போது ஏப்படி அவர் முறைகேடான கட்டடங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பார் என்று கேள்வி எழுப்பினார் உறுப்பினர் தே.தனுஜன்.

சட்டத்தரணி மட்டுமல் சபையின் இரு உறுப்பினர்களேகூட முறைகேடாகத்தான் கட்டடங்களை அமைத்து வருகிறார்கள் என்றும் சபையில் சுட்டிக்காட்டப்பட்டது.

காரசாரமான இந்த விவாதங்களின் பின்னரும் இது தொடர்பில் எதுவித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர். (உ105)

## மாரா சூர வதமும் குளிர்ச்சி உற்சவமும்

யாழ்ப்பாணம், மார்ச் 30

கீரிமலை சிறி மகாமுத்து மாரிஅம்பாள் ஆலயத்தின் மாரா சூரவதமும், வருடாந்த குளிர்ச்சி உற்சவமும் நாளைமறுதினம் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளன.

முற்பகல் 10 மணிக்கு சிறப்பு குளிர்ச்சிஅபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து அம்பாள் வீதி உலா வருவதுடன் அன்னதானமும் இடம்பெறும். மாலை 5.30 மணிக்கு கீரிமலை சந்தியில் மாரா சூர வதம் இடம்பெறும் என்று ஆதினகர்த்தாவும் புனருத்தாரணசபையினரும் அறிவித்துள்ளனர். (ஐ)

## மாம்பழச் சங்கங்களுக்கு உபகரணங்கள் கையளிப்பு


சாவகச்சேரி, மார்ச் 30

தென்மராட்சிப் பிரதேசத்தில் மாம்பழ உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட மாம்பழச் சங்கங்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

உலக வங்கியின் நிதி உதவியுடன் விவசாயத் திணைக்களத்தால் மாம்பழ உற்பத்தி மேற்கொள்ளக்கூடிய ஐந்து கமக்கார அமைப்பு பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாம்பழச் சங்கங்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. தெரிவு செய்யப்பட்ட 200 விவசாயிகளுக்கு கால் ஏக்கர், அரை ஏக்கர், ஒரு ஏக்கர் பரப்பளவில் புதிய மாமரக் கன்றுகள் வழங்கப்பட்டு தூவல் நீர்ப்பாசனத்துக்கு வேண்டிய உபகரணங்களும் ஏற்கனவே வழங்கப்பட்டன. மீசாலை ,அல்லாரை, எழுதுமட்டுவாழ் வடக்க தெற்கு விடத்தற்பளை, கெற்பேலி ஆகிய பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 200 விவசாயிகளுக்குப் புதிய ரக மாங்கன்றுகள் வழங்கப்பட்டு ஊடு பயிராகப் பயிரிட நிலக்கடலை விதைகள் வழங்கப்பட்டு அவற்றின் அறுவடையும் நிறைவடைந்துள்ளன.

இந்த நிலையில் விவசாயத் திணைக்கள அலுவலர்கள் இதனைப் பார்வையிட்ட பின்னர் ஐந்து மாம்பழச் சங்கங்களுக்கு மேலும் ஒரு தொகுதி உபகரணங்களை நேற்று வழங்கினர். (ஐ-9)



பன்னாட்டு காசநோய் கட்டுப்பாட்டு தினத்தையொட்டி பருத்தித்துறை கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கான காசநோய்க் கட்டுப்பாட்டு சுகநலக்கல்வி பொது சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜன்சன் றொனால்ட்டினால் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடத்தப்பட்டது. (ஜ 9)

### வடக்கு ஆளுநரிடம் முறையிட்டதால்

## பரு. மரக்கறி வியாபாரிகளின் போராட்டம் நேற்று முடிவு

### மாடியில் மட்டும் இனி மரக்கறிகள் விற்பனை

யாழ்ப்பாணம், மார்ச் 30

பருத்தித்துறை மரக்கறிச் சந்தை இரண்டு நாள்கள் இழுபறியின் பின்னர், ஆளுநரின் தலையீட்டால் பிராந்திய உதவி ஆணையாளரின் நடவடிக்கையால் நேற்றுத் தொடக்கம் சுமுகமாக இயங்க ஆரம்பித்துள்ளது.

சந்தையின் மரக்கறிகள் விற்பனைப் பிரிவு மாடியில் உள்ளது.

பருத்தித்துறை மீன்சந்தை வீதியிலும் நான்கு கடைக்காரர் மரக்கறிகளை விற்பனை செய்து வந்தனர். அதனால் தமது வியாபாரம் குறைந்து வருவதாகவும் கீழே மரக்கறி இலகுவாக வாங்குவதால் மேல்மாடிக்கு வாடிக்கையாளர்கள் வருவதில்லை என்றும் கூறி மாடியிலுள்ள மரக்கறிச் சந்தை வியாபாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரண்டு நாள்களாக அவர்களுக்குத் தீர்வு கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தீர்வுகோரி வடக்கு ஆளுநரிடம் சென்றனர். ஆளுநர் யாழ்ப்பாணப் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளருக்கு இதனைத் தெரிவித்து பிரச்சினையைத் தீர்க்குமாறு பணித்தார்.

ஆணையாளர் மு.சுலோசனா நேற்றுக் காலை 6.30 அளவில் பருத்தித்துறை மரக்கறிச் சந்தைக்கு வந்து தவிசாளர் இருதயராயா, செயலர் மற்றும் மரக்கறி வியாபாரிகளுட னும் கலந்துரையாடினார்.

மீன் சந்தை வீதியிலுள்ள மரக்கறி வியாபாரத்தை நிறுத்தி, அவர்கள் மாடியில் வியாபாரம் செய்ய இடம் ஒதுக்கிக் கொடுக்குமாறும், உள்ளூராட்சிச் சட்டத்தை ஆராய்ந்து சட்டத்தின்படி எது சரியோ அதைத் தான் மிகவிரைவில் அறிவிப்பதாகவும் கூறினார்.

உள்ளூராட்சிச் சட்டத்தின் கீழ் பொதுச்சந்தையைச் சுற்றிய 500 மீற்றர் சுற்றுவட்டத்துக்குள் மரக்கறி வியாபாரம் செய்யமுடியாது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார். அதனையடுத்து சந்தை வியாபாரிகள் போராட்டத்தைக் கைவிட்டு வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

முற்பகல் 10 மணியளவில், நகரசபைத் தவிசாளர், உறுப்பினர்கள் கலந்துரையாடி உதவி ஆணையாளரின் ஆலோசனைப்படி செயற்படுவது என்றும் உதவி ஆணையாளரைச் சென்று சந்தித்துக் கலந்துரையாடுவது என்றும் முடிவெடுக்கப்பட்டதாகத் தவிசாளர்தெரிவித்தார். (து-26-160)

## முழுநாள் செயலமர்வு

சாவகச்சேரி, மார்ச்30

சாவகச்சேரிப் பிரதேச சபையினரால் தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பொறிமுறைகள் தொடர்பான ஆலோசனைகள் கருத்துப் பகிர்வரங்கம் உள்ளிட்ட முழுநாள் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

பிரதேச சபையின் கொடிகாமத்தில் உள்ள தலைமையகக் கட்டடத்தில் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் சபையின் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெறும். செயலமர்வில் வளவாளர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட ஆலோசகர் க.கந்தசாமி ஆகியோரும் தென்மராட்சி பிரதேசம் சார் புலமையாளர்கள், புத்திஜீவிகள், துறைசார் வல்லுநர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் போன்றோரின் கருத்துரைகளும் இடம்பெறும். (ஐ-9)

## கசிப்புடன் ஒருவர் கைது

வவுனியா.மார்ச்30

வவுனியா புதியபேருந்து நிலையத்தில் ஒரு போத்தல் சட்டவிரோத சாராயத்தை (கசிப்பு) உடமையில் வைத்திருந்த குற்றசாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் சிறப்பு போதை ஒழிப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

நேற்று முன்தினம் காலை புதிய பேருந்துநிலைய பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் நபர் ஒருவரிடம் சோதனையில் ஈடுபட்டபோதே குறித்த சட்டவிரோத மதுபானம் மீட்கப்பட்டதுடன், அதனை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றசாட்டில் பதுளைப் பகுதியைச் சேர்ந்தவர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

அவர் கிளிநொச்சிப் பகுதிக்கு திருமணம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக சென்றுவிட்டு, மீண்டும் பதுளைநோக்கி செல்வதற்காக வவுனியா பேருந்துநிலையத்தில் காத்திருந்தபோதே கைதுசெய்யபட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யபட்டவர் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (க-110)

# மன்னாரில் கால்நடையை இறைச்சியாக்க அனுமதி

*மன்னார், மார்ச் 30*

*மன்னாரில் கால்நடைகளை இறைச்சியாக்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்படுகிறது என முருங்கன் கால்நடை மருத்துவ அதிகாரி சி.பி வின்சன்ட் தெரிவித்துள்ளார்.*

கடந்த தை மாதம் மாந்தை மற்றும் நானாட்டான் பகுதி கால்நடைகளுக்கு கால்வாய் நோய் தொற்று இருப்பது இனம்காணப்பட்டு, அவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்பொருட்டுகால்நடைகளின் நகர்வுகள் மற்றும் தற்காலிகமாக இறைச்சி கொல்களங்களும் மூடப்பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து சிறப்பு தடுப்புமருந்தேற்றல்திட்டமானது கால்நடை வைத்தியர் சி.பி.வின்சன்ட்னின் வழிகாட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டு ஒன்பதாயிரம் கால்நடைகளுக்கான தடுப்புமருந்து வழங்கப்பட்டது.

இதுவரை கிடைத்த தகவலின்படி அறுபத்தி எட்டு கால்நடைகளுக்கே கால்வாய் தொற்று நோய் இனம்காணப்பட்டு மூன்று கால்நடைகள் மாத்திரமே இறந்துள்ளன.

தக்க சமயத்தில் போதிய தடுப்பு மருந்துகளை வழங்கியதன் மூலம் பண்ணையாளருக்கு ஏற்படவிருந்த பாரிய பொருளாதார இழப்புகளில் இருந்து காப்பாற்றப்பட்டுள்ளார்கள்.

எனவே கால்நடைகளை இறைச்சியாக்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நேற்றிலிருந்து நீக்கப்படுகிறது என்று முருங்கன் கால்நடை வைத்திய அதிகாரி சி.பி .வின்சன்ட் தெரிவித்தார்.

மன்னாரில் கால்நடைகளுக்கு ஏற்பட்ட கால்வாய் நோயினை இல்லாது செய்வதற்கு போதிய தடுப்பு மருந்துகளை வழங்கிய மன்னார் உதவி பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், மாகாண பணிப்பாளர் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், பணிப்பாளர் விலங்கு சுகாதார பிரிவு மத்திய கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் என்பவை பெரும் பங்காற்றி இருந்தன. (க-213)

## இணக்க சபை அமர்வுகள் பிற்போடப்பட்டுள்ளன

புத்தூர் சோமஸ்கந்தா இந்து ஆரம்பப் பாடசாலையில் செயற்படும் கோப்பாய் இணக்க சபையின் அமர்வுகள் காலாண்டு மதிப்பீடு நிமித்தம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற மாட்டாது. ஏப்ரல் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமை போல நடைபெறும் என்று தவிசாளர் இ.கிருஷ்ணபிள்ளை அறிவித்துள்ளார். புதுவருட பிறப்பை முன்னிட்டு 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் அமர்வுகள் நடைபெற மாட்டாது. 13ஆம் திகதி சனிக்கிழமை இணக்க சபை அமர்வுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-11)




## முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் திறப்பு

முல்லைத்தீவு ,மார்ச் 30

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்தில் வடக்கு மாகாண சபையின் 1.5 மில்லியன் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட பனிக்கன்குளம் " முதியோர் பகல் பராமரிப்பு " நிலையக் கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேச சமூகசேவைகள் அலுவலர் ச.சுதாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் த.அகிலன்,கட்டடத்துக்கான பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்து வைத்ததை தொடர்ந்து வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் வனஜா செல்வரத்தினம் கட்டடத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.

நிகழ்வில் மாங்குளம் பங்குத்தந்தை மரியதாஸ் அடிகளார் , வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் வனஜா செல்வரத்தினம் , ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் த.அகிலன், முல்லைத்தீவு மாவட்ட சமூகசேவைகள் அலுவலர் தசரதராஜகுமாரன் , பனிக்கன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் , கிராம அலுவலர் அபிவிருத்தி அலுவலர்கள் , சமுர்த்தி அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகள், முதியவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(க-222)



## மகளிர்தின நிகழ்வு

முல்லைத்தீவு,மார்ச் 30

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கி கிளைகளின் மகளிர் தின நிகழ்வு கடந்த 27ஆம் திகதி முல்லைத்தீவு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

முள்ளியவளை கிளையின் அதிகாரி சி.வாகினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலர் ரூபவதி கோதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப்பொது முகாமையாளர் எம். ஜே.பிரபாகரன், இலங்கை வங்கியின் வன்னிப் பிராந்திய முகாமையாளர் கே.சிவஞான சுந்தரம், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் மருத்துவர் எஸ்.சாமந்தி, மற்றும் இலங்கை வங்கியின் பிரதேச கிளைகளின் முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு இலங்கை வங்கியினால் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளதுடன் வருகைதந்த அனைவருக்கும் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (க-ரி3)

## மாவட்டத்துக்கான அமைப்பாளர்கள் நியமனம்

கிளிநொச்சி,மார்ச் 30

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்,கிளிநொச்சி மாவட்டதுக்கான அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின், கிளிநொச்சி தேர்தல் தொகுதி அமைப்பாளராக சதாசிவம் இராமநாதன், பூநகரி பிரதேச சபை உறுப்பினர் ஹஜ் முகமது ஹபீர், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளராகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

மார்ச் மாதம் 19 ஆம் திகதி , அரச தலைவரின் நாடாளுமன்ற அலுவலகத் தொகுதியில் வைத்து, மாவட்ட அமைப்பாளர்களுக்கான உத்தியோகபூர்வ நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. (க)



## ஆடை வடிவமைத்தல் கண்காட்சி

மாந்தை, மார்ச் 30

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாந்தைகிழக்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்டபிரதேச யுவதிகளுக் கான ஆடை வடிவமைத்தல் மற்றும் கைவேலை பயிற்சிகளில் பங்குபற்றியோரால் ஆக்கப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தல் நேற்றுமுன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றன.

பிரதேச செயலகர் றஞ்சனா நவரத்தினம் தலைமையில் நடைபெற்றநிகழ்வில், பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பாண்டியன்குளம் மகா வித்தியலாய அதிபர் ஆகியோர் விருந்தினர்களாகக்கலந்துகொண்டு ஆக்கப் பொருள்கள் காட்சிக்கூடத்தைத் திறந்து வைத்தனர். பயிற்சியை நிறைவு செய்த பயிலுநர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. (க-9)





## ஈருருளி வழங்கல்

விஞ்ஞானகுளம் கரப்புக்குத்தி சமூக செயற்பாட்டாளர் சுதாகரனின் வேண்டுகோளுக்கிணங்க கனகராயன்குளம் மகாவித்தியாலய மாணவன் ஒருவருக்கு ஈருருளி ஒன்று நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

நிகழ்வில் செயற்பாட்டாளர் சுதாகரன், வவுனியா வடக்குப்பிரதேச சபை உறுப்பினர்களான சஞ்சுதன், விஜீகரன் ஆகியோருடன் விஞ்ஞானகுளம் நவரத்தினா வித்தியாலய அதிபர் தவநாதனும் கலந்து கொண்டனர். இதற்கான நிதி உதவியை சுவிஸ் நாட்டிலே புலம்பெயர்ந்து வாழும் சயந்தன் என்பவர் வழங்கியுள்ளார். (க-222)

## மன்னார் மடு திருத்தலத்துக்கு ரவி கருணாநாயக்க பயணம்



மன்னார் மடு திருத்தலத்துக்கு அமைச்சர் ரவி கருணாநாயக்க கடந்த வியாழக்கிழமை மாலை திடீர் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

சிறப்பு வானூர்தி மூலம் மடு திருத்தலத்துக்குச் சென்ற அமைச்சர் சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டார்.

அதனைத்தொடர்ந்து மடுத் திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பொப்பி சோசை அடிகளார்,மன்னார் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், மற்றும் அருட்தந்தையர்களையும் சந்தித்து உரையாடியுள்ளார்.

இதன் போது மடு திருத்தலத்தின் பல்வேறு அபிவிருத்தி விடையங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

மடு திருத்தலத்துக்கான வீதி மின் விளக்குகள் பொருத்துதல்,மடு திருத்தல பகுதியில் எதிர் வரும் காலங்களில் சூரிய மின் சக்தியூடாக மின் வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-56)

# உப்பளத்துக்காக கிளிநொச்சியை நாடுகின்ற தெற்கு நிறுவனங்கள்

கிளிநொச்சி, மார்ச், 30

கிளிநொச்சியில் உப்பளங்களை அமைக்க சில நிறுவனங்கள் மாவட்டச் செயலகத்திடம் அனுமதிகோரியுள்ளன. அந்த அனுமதிகள் தொடர்பில் மாவட்டச் செயலக தொழில் நுட்பக் குழு, தேசிய தொழில் நுட்பக் குழுவில் கலந்துரையாடப்பட்டு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரைக்கு அமைய முடிவு எட்டப்படும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

தென்னிலங்கையைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்றுக்கு உப்பளம் அமைப்பதற்காக கிளிநொச்சி பகுதியில் நூறு ஏக்கர் நிலத்தை வழங்குவதற்கு நடவடிக்கைகள் இரகசியமாக மேற்கொள்ளப்படுகின்றன என்றும், இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது என்றும், இணையத்தளங்களில் நேற்று செய்திகள் பரவின. வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமில்லாத பிரதேசத்தை வனவளத் திணைக்களம் தங்களுடையது என பிரகடனம் செய்துவிட்டு அதனை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது என்றும் தகவல் வெளியாகியிருந்தன. கிளிநொச்சி மாவட்டத்தில் பல இடங்களில் மக்கள் நீண்ட காலமாக வசித்து வருகின்ற காணிகள், கிராமங்களில் உள்ள விளையாட்டு மைதானங்கள், குளங்கள் ஜெயபுரம் பிரசேத்தில் மக்களின் வயற்காணிகள் என்பவற்றை வனவளத்திணைக்களம் தங்களுடையது என்றும் அதனை விட்டுக்கொடுக்க முடியாது என்றும் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கும் போது இந்த விடயத்தில் இவ்வாறு நடந்துகொள்வது மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும் இணையத்தளங்கள் செய்திவெளியிட்டிருந்தன. அந்தத் தகவலை கிளிநொச்சி மாவட்டச் செயலர் மறுத்தார். அது தொடர்பில் அவர் உதயனுக்குத் தெரிவித்ததாவது;

கிளிநொச்சியில் உப்பளம் அமைக்கசிலநிறுவனங்கள் அனுமதிகளைக் கோரியுள்ளன. கிளிநொச்சிக்கு வரும் முதலீடுகளை நாங்கள் வரவேற்கவேண்டும். கொழும்பு, திருகோணமலை மாவட்டங்களில் ஏராளமான நிறுவனங்கள் முதலீடுகளை மேற்கொண்டு உற்பத்தியைப் பெருக்கி அந்த மாவட்டத்தை அபிவிருத்திநோக்கி தள்ளுகின்றன. ஆனால் யாரும் கிளிநொச்சிக்கு வருகின்றார்கள் இல்லை. வருபவர்களையும் விடுகிறார்கள் இல்லை. உப்பளம் அமைப்பதற்கு கேட்கப்பட்ட இடம்காட்டுப் பிரதேசம், அது வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமானது. அவர்களை அழைத்து அதுதொடர்பிலேயே நேற்று கலந்துரையாடப்பட்டது. ஒரு நிறுவனத்துக்கு காணி வழங்க வேண்டுமானால் அதற்கென ஒரு நடைமுறை உள்ளது. மாவட்டச் செயலகத்தில் உள்ள தொழில் நுட்பக் குழுவில் அந்த விடையத்தைப் பற்றி ஆராய வேண்டும், அடுத்து தேசிய ரீதியில் உள்ள தொழில் நுட்பக் குழுவில் ஆராய வேண்டும், அடுத்த படியாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு அதை பாரப்படுத்தவேண்டும். இவ்வாறு நடைமுறைகள் இருக்கும்போது காணியை கொடுப்பதற்கு இரகசியமாக கலந்துரையாடல் என்பதும், இரகசிய நடவடிக்கை என்பதும் வேடிக்கையானது. மாவட்டச்செயலர்கள் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது எனவே அதில் இந்த விடையங்களைத் தெளிவு படுத்துவதற்காகவே அந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.-என்றார். (எ-21)



## வவு.விபுலானந்தாவின் தேவைகளை அறிய சாந்தி எம்.பி. நேரில் பயணம்

வவுனியா,மார்ச் 30

வவுனியா விபுலானந்தா கல்லூரியின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா அண்மையில் பயணம் மேற்க்கொண்டுள்ளார்.

கிராமசக்தி திட்டத்தின் மூலம் குறித்த பாடசாலையின் அபிவிருத்திக்கு ஒரு மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து வழங்கியிருந்தார்.

இந்த நிலையில் பாடசாலையின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொள்ளும் முகமாக பயணம் செய்து, பாடசாலை அதிபர் பொன்.சிவநாதன் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுடனும் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

பாடசாலைக்கு மைதானம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான தமது முயற்சிக்கு தேவையான உதவிகளை வழங்குமாறு பாடசாலை அதிபர் மற்றும் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். இது தொடர்பில் கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளைமேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்திருந்தார். (க-222)

## பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும்

வவுனியா,மார்ச்.30

வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் வவுனியா மாவட்டத்துக்கான பொதுக்கூட்டமும் புதியநிர்வாக தெரிவும் நாளை ஞாயிற்றுகிழமை பிற்பகல் 3 மணிக்கு சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத்தின் வடமாகாண அமைப்பாளர் மாணிக்கம் ஜெகன் தலைமையில் நடைபெறவுள்ள குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா நகரபிதா இ.கௌதமன் கலந்துகொள்வார். சிறப்புவிருந்தினர்களாக பிரதேச சபை தலைவர்களான து.நடராஜசிங்கம்,இ.தணிகாசலம் ஆகியோர் கலந்து கொள்வர். (க-110)

## மாதர் மொனிக்கா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி



வவுனியா,மார்ச் 30

வவுனியா புதியவேலர்சின்னக் குளம் மாதர் மொனிக்கா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் நேற்றுக் காலை10 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழ் தெற்குப் பிரதே சபை உறுப்பினர் திருமதி அஞ்சலி கோகிலகுமார், சிறப்பு விருந்தினராக வவுனியா வடக்கு முன்பள்ளி கோட்டக் கல்வி அதிகாரி கா. விஜயகுமார் ஓய்வு பெற்ற கிராம அலுவலர் ஆசிரியர்கள்மாணவர்கள்பெற்றோர்கள்எனப் பலரும் கலந்துகொண்டனர். (க)

## தொழில்முயற்சியாளர்களுக்கு உதவிகள் வழங்கிவைப்பு

வவுனியா,மார்ச் 30

வவுனியா நகரசபை உறுப்பினர் எம். லறிப்பால் தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

மீன் வியாபாரம் மேற்க்கொள்வதற்கான குளிர்சாதனப் பெட்டி, கோழி வளர்ப்புக்கான கூடு போடுவற்கான உபகரணங்கள், மரக்கறிச் செய்கைமேற்கொள்வதற்கான உபகரணங்கள், கல்வி கற்கும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பன நேற்று முன் தினம் வழங்கி வைக்கப்பட்டன. (க-110)



## வடமாகாண பௌத்தமாநாடு



வவுனியா,மார்ச் 30

வவுனியாவில் வடக்கு மாகாண பௌத்த மாநாடு நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தலைமையில் வவுனியா கண்டிவீதியில் அமைந்துள்ள சிறிபோதி தட்சிணாராம விகாரையில் இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்தில் முதல்முறையாக நடைபெறும் இந்த பௌத்த மாநாடு ஆளுநர் கலாநிதி சுரேன்ராகவனின் வழிநடத்தலில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் கீழ் புத்தசாசன அமைச்சு, பிரதேச அரசியல் தலைவர்கள், முப்படையினர் மற்றும் அரச அலுவலர்களின் பூரண பங்களிப்புடன் இடம்பெற்றிருந்தது.

இந்த மாநாட்டில் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்துள்ள பௌத்த மதகுருமார்கள் கலந்து கொண்டதுடன், பௌத்தர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் கைத்தொழில் வர்தக பிரதி அமைச்சர் புத்திக்கபத்திரன, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வடகிழக்கு மாகாணங்களின் பிரதம சங்கைக்குரிய நாயக்கர் பூஜ்ஜியசியம்பலாகஸ்வெள விமலசார தேரர், களனி பல்கலைக்கழகவேந்தர் வலபிட்டியாவே குசலதம்மதேரர், மாவட்ட செயலர் ஐ.எம். கனீபா, மாகாணசபை உறுப்பினர்ஜெயதிலக், அரச உயர் அதிகாரிகள் மற்றும் சர்வமத குருமார்கள், எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (க-110)

## தவக்கால தியானங்கள்

## அழைப்பின் காலம்

காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள் என்று அவர் கூறினார் (மாற்கு 1:15). இயேசுவின் நற்செய்தி பணியின் தொடக்க முழக்கமே மனமாற்றத்துக்கான அழைப்பாகவே இருக்கிறது. ஏனெனில் இறையாட்சி இந்த உலகில் மலர வேண்டுமாயின் மனவருத்தமும், பாவமன்னிப்பும் மிகவும் அவசிமாகிறது.

எனவேதான் கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டிய தொன்றாக கருதாமல் மனிதரானார். அவரது வருகை இறையாட்சி வருகையாக இருந்தது. பாவத்தை போக்கும் ஆட்டுக்குட்டி ஆனார் (யோவா (1:29). மனித்ருக்காக தமது குருதியைச் சிந்தினார். தன்னையே பரிகாரபலியாகதந்தைக்குஒப்புக்கொடுத்தார். (உரோ 5:68). சிலுவை சாவின் வழியாக பாவத்தின்மீதும்அதன் விளைவாக ஏற்படும் சாவின் மீதும் வெற்றிக்கண்டார். இறைவனோடுநம்மைஒப்புவாக்கினார்(உரோ5:10). காணாமல்போன ஆட்டை தேடியதை போல காணாமல்போன மகனை ஏக்கத்தோடு தேடியதை போல இறைவன் எம்மைத் தேடி வருகின்றார். தேடிவரும் இறைவனோடு இணைய எமது மனித இயல்புகளை களைந்து ஆவிக்குரிய இயல்பைப் பெற பாவங்களுக்காக மனவருந்துவோம். எழுந்து என் தந்தையிடம் போவேன் என கூறிச்சென்ற ஊதாரி மகனைப்போல தந்தை இறைவனிடம் திரும்புவோம். கடவுளே உமது பேரன்புகேற்ப எனக்கு இரங்கும், உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களை துடைத்தருளும் (திபா.51:1) என்று மன்றாடுவோம்.

# ஆளுநரின் பிடிக்குள் அடங்கும் அபாயத்தில் மாகாண சபைகள்

## அழகப்பெரும எம்.பி. எச்சரிக்கிறார்

கொழும்பு, மார்ச் 30

**மா**காண சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்ற தேவை அரசுக்கு இல்லை. எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் அரசு மாகாண சபைகள் தேவையில்லை என்று தீர்மானித்து, அவற்றை ஆளுநர்களின் அதிகாரத்துக்குக் கீழ் கொண்டுவரும் அபாயம் இருக்கின்றது.

இவ்வாறு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தின் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு மற்றும் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபை முறைமை தமிழ் பேசும் மக்களை அரசியல் ரீதியில் உறுதிப்படுத்தவே 13ஆம் திருத்தம் ஊடாக ஏற்படுத்தப்பட்டது. கிழக்கு மாகாணம் கலைக்கப்பட்டு ஒன்றரை வருடம், வடக்கு மாகாணம் கலைக்கப்பட்டு 5மாதங்களாகின்றன. இது பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதுவும் கதைப்பதில்லை.

மோசமான தேர்தலைவிட தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதே மிகவும் மோசமானது என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிக்கின்றார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் தோல்வி கிடைக்கும் என்பது தெரிந்தும் மகிந்த ராஜபக்ச வடக்கு மாகாண சபை தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை நிலை நாட்டினார் - என்றார். (த-31)

# சுயநிர்ணய உரிமையை குறியீட்டுப் பொருளாக நோக்கின் போராடுவோர் பாதிக்கப்படுவர்

## கஜேந்திரகுமார் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

சுயநிர்ணய உரிமையை வெறுமனே ஒரு குறியீட்டுப் பொருளாக மட்டும் ஐக்கிய நாடுகளும் இந்த அவையும் தொடர்ந்தும் அணுகுமேயானால், சுயநிர்ணய உரிமைக்காக உண்மையில் போராடிக்கொண்டிருக்கின்ற அனைவரும் தொடர்ந்தும் இலக்கு வைக்கப்படுவார்கள்.

இவ்வாறு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது அமர்வு இடம்பெற்றபோது பொது விவாதத்தில் இவ்வாறு தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இலங்கை அரசின் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை எதிர்கொண்டு நிற்கும் தமிழ்த் தேசமானது ஒருபோதும் பாராதீனப்படுத்தப்பட முடியாத தமது சுயநிர்ணய உரிமையை அடைவதற்காக இலங்கையில் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கிறது.

இலங்கை அரசு வன்முறையைக் கையிலெடுத்த போது அதற்கான எதிர்வினையாக தமிழர் தரப்பும் ஆயுதங்களைக் கையில் எடுக்க நேர்ந்தது.

தமிழ்விடுதலைஅமைப்பை மட்டுமின்றி, தனது பார்வையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியவர்கள் எனக் கருதப்படும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் என அனைவரையும் இலங்கை அரசு தனது இலக்காகக் கருதியது.

இப்படியானவர்களுள் ஊடக அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக தொழிலாளர்கள் ஆகியோரே பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். போர் நடந்த காலப்பகுதியில் இலங்கையில் கொல்லப்பட்ட 48 ஊடகவியலாளர்களுள் 41பேர் இலங்கை அரசால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள். தமிழர்களல்லாத ஏனைய அந்த 7 ஊடகவியலாளர்களில் ஆகக் குறைந்தது இரு ஊடகவியலாளர்கள், தமிழர்கள் மீதான அரச ஒடுக்குமுறையை வெளிப்படுத்தியமைக்காக அரசால் கொல்லப்பட்டவர்கள்.

தமிழ்த்தந்தி எனப்படும் ஊடகநிறுவனம் இலங்கை அரசின் ஆகப்பிந்திய இலக்காக அமைந்தது. தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிய மாவீரர் ஒருவர் பற்றிய கட்டுரை ஒன்றை பிரசுரித்தமைக்காக அவர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் அச்சுறுத்தப்பட்டதோடு சட்ட நடவடிக்கைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்று இந்தச் சபைக்கு இலங்கைஅரசுஉறுதியளித்துள்ள நிலையிலும்கூட பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் இந்த நடவடிக்கை இடம்பெற்றிருக்கின்றது என்று கூறியுள்ளார். (த)

# தேர்தல் தாமதமாவதற்கு சு.கமட்டும் காரணமல்ல

## நிமல் சிறிபாலடி சில்வா எம்.பி. தெரிவிப்பு

மாகாணசபை தேர்தல் தொடர்பான சட்ட திட்டங்களை சிறிலங்கா சுதந்திர கட்சி மாத்திரம் தனித்துமேற்கொள்ளவில்லை. இரண்டு முதன்மைக் கட்சிகளும் இணைந்தே தேவையான திருத்தங்களைமேற்கொண்டன. எனவே தேர்தல்பிற்படுத்தப்படுவதற்கு எங்களைக் குறைகூறவேண்டாம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்தரமுன்னணி உறுப்பினர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இந்த வருடத்துக்கான பாதீட்டின் உள்ளக.உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளுராட்சி அமைச்சு மற்றும் மேல்மாகாணஅபிவிருத்தி அமைச்சு மீதானநிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவால் ஏற்படுத்தப்பட்ட தீர்மானத்துக்கமைய நாங்கள் பிரதேச சபைத் தேர்தலை தொகுதி அடிப்படையில் நடத்த நடவடிக்கை எடுத்தோம். தேசத்தின் தேவையைஉணர்ந்து நாங்கள் கடந்த பிரதேச சபைத் தேர்தலை தொகுதி அடிப்படையில் நடத்தினோம். இதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. குறைபாடுகள்இருந்தாலும் விகிதாசாரமுறைக்குச் செல்லாமல் தொகுதி அடிப்படையில் தேர்தலை நடத்தியது நாங்கள்அடைந்துகொண்ட வெற்றி. - என்றார். (ஐ -31)

# இவ்வருடம் ஜூலையில் மாகாண சபைத் தேர்தல்

## கிழக்கு ஆளுநர் தகவல்

எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் 37 பேருக்கு நிலுவைக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கிழக்கு மாகாண ஆளுநர், இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவேண்டும். எந்தக் காரணம்கொண்டும் அது ஒத்திவைக்கப்படக் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே அரச தலைவர் இருக்கின்றார். இது குறித்து தலைமை அமைச்சருடன் பேச்சு நடத்தப்பட்டது. விரைவில் தேர்தல் நடத்தப்படும் எனக் கூறப்பட்டது. எது எப்படியிருப்பினும், எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது- என்றார். (ஒ.5.22)

# எண்ணெய் சுத்திகரிப்பில் நிதி மோசடிக்கு வாய்ப்பு

## ட்ரான்பேரன்ஸி இன்டர்நெஷனல் எச்சரிக்கை

அம்பாந்தோட்டை மிரிஜ்ஜவிலவில் முன்னெடுக்கப்படவுள்ள 3.85 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திட்டத்தில் பெரும் நிதி மோசடி இடம்பெறுவதற்கான அபாயம் உள்ளதாக ட்ரான்பரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றைநிறுவுவதற்கான முதலீட்டாளர்கள் குறித்து சர்ச்சை எழுந்துள்ள நிலையிலேயே ட்ரான்பரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது:

**அரசியல்வாதியின் சிக்கலுக்குரிய நிறுவனம்**

சிங்கப்பூரைத் தளமாகக் கொண்டியங்கும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திட்டத்தின் முதலீட்டாளர். அது இந்தியாவின் தமிழ் நாட்டைச் சேர்ந்த அரசியல்வாதியும், முன்னாள் அமைச்சருமான எஸ். ஜெகத்ரட்சகன் என்பவரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. அவரது வியாபார முதலீடுகளில் இடம்பெற்ற ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஏற்கனவே இந்திய ஊடகங்களில்வெளிவந்துள்ளன.

எனவே தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் பிரிவு 9இன் கீழ் குறித்த செயற்றிட்டம்பற்றியமுழுவிவரங்களும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு 3 மாதங்களுக்கு முன்பதாகவே பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது. (த-61)

# இலங்கை முழுவதிலும் காணப்படுவது முறைப்படுத்தப்பட்ட நிர்வாக சேவை

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 30

முறைப்படுத்தப்பட்ட பொது நிர்வாகசேவையே இலங்கையில்காணப்படுகின்றது. நிஸ்ஸங்க மல்லன் அரசன் காலத்து லதாமண்டபத்தில் அரச சேவையாளர்கள் பற்றியமை குறிப்பிடப்படுகின்றது. அன்றைய அரசின் பிரதானநோக்கம் நாட்டை ஆட்சிசெய்வதாகும். விவசாயம், வருமானத்தைச் சேகரித்தல், இராணுவத்தை நிர்வகிப்பது போன்ற பணிகளுக்காக அன்று அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கடந்த 28 ஆம் திகதி, கொழும்பு,தாமரைத் தடாக அரங்கில் இடம்பெற்ற இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின்வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது:

இன்றுநீங்கள் கடமையாற்றும்சேவையானது 1948 ஆம் ஆண்டு கோல்புறூக் கெமரன் அரசியல் யாப்பின் கீழ்உருவாக்கப்பட்ட இலங்கை சிவில் சேவையுடன் தொடர்புபடுகின்றது. அன்று அந்தச் சேவையில் ஒருசிலரே பணிபுரிந்தனர். எமது நாட்டில் பிரசித்திபெற்ற சிவில் ஊழியராககருதப்படுகின்ற ஜோன் டொயிலி மற்றும் மகாவம்சத்தினை சிங்களத்திற்கு மொழிபெயர்த்த ஜோன்டர்னர் ஆகியோரும் தமது சேவையினை நிர்வாகசேவையினூடாகவே ஆரம்பித்தனர்.

அதனடிப்படையில் நோக்கும் போது ஆசியாவில் தொன்மையான நிர்வாக சேவையானது இலங்கையிலேயே காணப்படுகிறது என்பதைக்குறிப்பிடவேண்டும். தற்போதுநாட்டில் ஆற்றவேண்டியகடமைகள் அதிகரித்துள்ளன.

இன்றுநாட்டில் அரசியல் செயற்படுகின்றது. மாகாணசபைகளும்,பிரதேசசபைகளும் இயங்கிவருகின்றன. மேலும், கூட்டுத்தாபனங்கள்,திணைக்களங்கள் என்பனவும் காணப்படுகின்றன. அதனால் இவை அனைத்தினதும் பணிகள் இலங்கைநிர்வாகசேவையினூடாகவேமேற்கொள்ளப்படுகின்றன.

உங்களதுசேவையின் முக்கியத்துவம்தொடர்பில் அரச தலைவரும் குறிப்பிட்டார் -என்றார். (க)

# வீதிகளை காணவில்லை கண்டறிந்து கூறுங்களேன்

## மஸ்தான் எம்.பி. கோரியுள்ளார்

2010ஆம் ஆண்டு சீரமைக்கப்பட்டதாக மீள் குடியேற்ற அமைச்சின் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட வேப்பங்குளம் - சிலாவத்துறை வரை உள்ள வீதிகளைக் காணவில்லை. அவற்றைக் கண்டுபிடித்துத் தாருங்கள். இவ்வாறு வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் நாடாளுமன்றில்கடந்தபுதன்கிழமை கோரிக்கை விடுத்தார்.

முசலி பிரதேச மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் துயரங்களை வேதனையுடன் குறிப்பிட்ட மஸ்தான் மழைக் காலங்களில் சிலாவத்துறை இளவன்குளம் காட்டுப்பாதை சேறாகும் நிலைமையால் ஒயாமடுவ ஊடாக மக்கள் மூன்று மணிநேரங்களை மேலதிகமாக செலவழித்து பயணம் செய்கின்றனர். எனத் தெரிவித்தார். (த)

# வடக்கு மருத்துவமனைகளில் தகுதியானோரை நியமிக்கவும்

## சிவமோகன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 30

வடக்கிலுள்ள மருத்துவமனை வெற்றிடங்களுக்குத் தகுதியான அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் சுகாதார விடயம் பற்றிய குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் மருத்துவமனைகள் வசதிக்குறைவாக இருப்பதால் நிரந்தர மருத்துவர்கள் எவரும் வருவதில்லை, புறக்கணிக்கின்றனர்.

வடக்கு மருத்துவமனைகளில் உரிய வசதிகள் இல்லாததால் அங்கு வந்து சேவைபுரிய மருத்துவர்கள் விரும்புவதில்லை. இவற்றைக் கருத்திற்கொண்டு சுகாதார அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்ட மருத்துவமனைகளைநிபுணர்களின்ஆலோசனைகளுக்கு அமைய தரமுயர்த்த வேண்டும்.

வடக்கில் வன்னி, முல்லைத்தீவு, கிளிநொச்சி மருத்துவமனைகளில் கண் மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. கண் மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தர மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்றார். (த-31)

# கிராம அலுவலர்களை அரசு பழிவாங்கக்கூடாது

## பிரேமஜயந்த எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 30

கிராம அலுவலர்களைப் பழிவாங்காமல் அவர்களின் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அவற்றுக்காகப் போராட்டம் நடத்தும் உரிமை அவர்களுக்கும் இருக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இந்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தின் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரலாற்றில் முதல் தடவையாக கிராமசேவை அதிகாரிகள் வீதிக்கிறங்கி போராட்டம் நடத்திவருகின்றனர். 17 காரணங்களை அடிப்படையாகக்கொண்டே இந்த போராட்டத்தை மேற்கொள்கின்றனர். ஆனால் அரசு கிராமஅலுவலர்கள் சமாதான நீதிவான்கள். அதனால் அவர்கள் போராட்டம் நடத்தமுடியாது என்று தெரிவித்து அவர்களின் கோரிக்கைகளை நிராகரிக்க முடியாது. அவர்களுக்கென்று ஒரு யாப்பு இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. அதனால் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். கிராம சேவை யாப்பு தயாரித்து அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசு, கிராம அலுவலர்கள் எதிர்கொண்டுள்ள சம்பள முரண்பாடு, கொடுப்பனவுப் பிரச்சினை போன்ற 17 கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொடுக்க அவர்களுடன் பேச்சு நடத்தாமல் மாவட்ட மட்டத்தில் அவர்களைப் பழிவாங்கி வருகின்றனர் என்று தெரியவருகின்றது. உரிமையைப் பெறப் போராடும் உரிமை அவர்களுக்கு இருக்கின்றது.

அரசு கிராம அலுவலர்களுடன் கலந்துரையாடி அவர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் மிகவும் குறைவாகவே இருக்கின்றது என்றார். (த-31)

# தவறான முடிவால் வருடாந்தம் 225 சிறுவர்கள் உயிர் மாய்ப்பு!

கொழும்பு, மார்ச் 30

இலங்கையில் 17- 20 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் வருடாந்தம் 225 பேர் தற்கொலை செய்துகொள்கின்றனர். 20 வயதுக்கு உட்பட்ட பெண் பிள்ளைகள் கர்ப்பமாகும் வீதம் அதிகரித்து வருகின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க சபையில் தெரிவித்தார்.

இலங்கையில் இளம் வயதினர் தற்கொலை வீதம் அதிகரித்து உலகில் இலங்கையை எச்சரிக்கும் நிலைமை உருவாக்கியுள்ளது என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதம் நேற்று நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் 18 வயதுக்குக் குறைந்த சிறிவர்கள் 46 இலட்சம் பேர் உள்ளனர். இவர்களில் 77 வீதமான சிறுவர்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். 7 இலட்சத்து 80 ஆயிரத்துக்கு அண்ணளவான சிறுவர்கள் நகர் புறங்களில் வாழ்கின்றனர். 2 இலட்சத்துக்கும் அதிகமான சிறுவர்கள் மலையகத்தில் வாழ்கின்றனர். சிறுவர் பாதுகாப்புச் சட்டங்கள், சிறுவர் காப்புறுதிகள் என எவையும் இன்னமும் மாற்றியமைக்கப்படாது 25 ஆண்டுகளுக்கும் பழமையான, அதேபோல் வரைபுகளாக மட்டுமே உள்ளது. இவற்றை மாற்றியமைக்க வேண்டும். அதேபோல் அனாதைச் சிறுவர்கள் மற்றும் குற்றம் செய்த சிறுவர்கள் என்று இரு சாராரையும் சிறுவர் காப்பகத்தில் தடுத்துவைக்கின்றனர். இதனை மாற்றியமைக்க வேண்டும். அத்துடன் சிறுவர் பாதுகாப்பு நீதிமன்றங்களை உருவாக்க வேண்டும்.

**96 வீதமானோர் தப்பிவிடுகின்றனர்**

இலங்கையில் சிறுவர் முறைகேட்டுக் குற்றங்களில் கைதுசெய்யப்படும் நபர்களில் 4 வீதமானவர்கள் மட்டுமே குற்றத்துக்கான தண்டனையைப் பெறுகின்றனர். ஏனைய 96 வீதமானவர்கள் தப்பித்துக்கொள்கின்றனர். அவ்வாறு குற்றவாளியாக தண்டிக்கப்பட்டும் குற்றவாளி குறைந்தது நான்கு சிறுவர்களையாவது பாலியல் துர்நடத்தை செய்கின்ற நிலைமையே உருவாகியுள்ளது. சிறுவர் துர்நடத்தைக் குற்றவாளிகள் அவ்வளவு விரையில் சிக்குவதில்லை. சிறுவர் பாதுகாப்புக் குறித்து அதிக அக்கறை செலுத்தும் வகையில் சிறுவர் விவகாரங்களை ஆராய சிறப்பான சிறுவர் பாதுகாப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்.

மனித உரிமைகள் குறித்த விடயத்தில் சிறுவர் உரிமைகள் குறித்து அதிகளவில் அக்கறை செலுத்தவேண்டியுள்ளது. இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக்குழுவில் சிறுவர் விவகார ஆணையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

இளம் வயது கர்ப்பிணி பெண்களின் வீதமும் அதிகரித்து வருகின்றது. 2015 ஆம்ஆண்டில்20வயதுக்குக்குறைந்த பெண் பிள்ளைகள் 19 ஆயிரத்து 327 பேர் கர்ப்பமாகியுள்ளனர். 2017 ஆம் ஆண்டு 17 ஆயிரத்து 509 பேர் கர்ப்பமாகியுள்ளனர். இலங்கையின் திருமண சட்டங்களில் சாதாரண பொது சட்டம், கண்டிய சட்டம், முஸ்லிம் திருமணச் சட்டம் என மூன்று திருமண சட்டங்கள் கையாளப்படுகின்றன. இதில் கண்டிய மற்றும் முஸ்லிம் சட்டத்தின் மூலமாகவே அதிகளவில் சிறுவர் திருமணங்கள் இடம்பெற்று வருகின்றன. இலங்கையில் வருடாந்தம் 20 வயதுக்குக் குறைந்த முஸ்லிம் பெண் பிள்ளைகள் 2ஆயிரத்து 525 பேர் கர்ப்பமாகின்றனர் என்று மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. சிறுவர்கள் என்ற எல்லைக்குள் முஸ்லிம் சிங்களவர் என்ற பாகுபாடு இல்லை. முஸ்லிம் திருமண சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று கற்ற முஸ்லிம் சமூகத்தினர் கூறி வருகின்றனர். அதனைக் க்ருத்திற்கொண்டு செயற்பட வேண்டும் என்றார். (த-31)

# விடயங்களைச் செயற்படுத்தி குற்றவாளிகளைப் பிடியுங்கள்

கொழும்பு, மார்ச் 30

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட அரசதலைவர் விசாரணை ஆணைக் குழு, கோப்குழு மற்றும் கணக்காளர் நாயகத்தின் அறிக்கையை முழுமையாக முறையாகச் செயற்படுத்தினால் தேசிய நிதி மோசடியாளர்கள் விரைவில் தண்டிக்கப்படுவார்கள்.

தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் அறிவித்தலுக்கு அமையவே பிணைமுறி கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன என்று அனைத்து அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க எவ்விதமான முன்னேற்றகர நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் மோசடியில் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளார்கள்.

மோசடி தொடர்பில் விசாரணைகளிலும் ஒரு முக்கிய நபரின் அறிவுறுத்தலின் பெயரில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன என்று குறிப்பிடப்படுகின்றது. மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் கோப் குழுவுக்கு முதற்கட்ட விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது தலைமைஅமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவின் பணிப்புரைகளுக்கு அமையவே பிணைமுறி கொடுக்கல் வாங்கல்களில்பாரம்பரியமாகபின்பற்றிவந்த செயன்முறைகள் மாற்றியமைக்கப்பட்டன என்றார்.

திருடர்களின் கையில் அரசு இருக்கும் வரையில் திருடர்கள் தண்டிக்கப்படமாட்டார்கள்.

பொலிஸ் திணைக்களம் அரசதலைவரின் பொறுப்பின் கீழ் வந்ததன் பின்னர் விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவித்தார். (த-61)

# ரிசாத் இன்று திருமலை பயணம்

மூதூர்,மார்ச் 30

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வர்த்தக வாணிப கைத்தொழில்,நீண்டகாலம் இடம் பெயர்ந்தோரை மீளக்குடியேற்றல், கூட்டுற வுத்துறை, திறன்கள் அபிவிருத்தி அமைச்சருமான ரிசாத் பதியுதீன் இன்று திருகோண மலைக்கு பயணம் மேற் கொள்ளவுள்ளார்.

கட்சியின் தேசிய அமைப்பாளரும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை பிரதி அமைச்சருமான அப்துல்லா மஹ்ரூபின் சிறப்பு வேண்டு கோளுக்கிணங்க இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பயணத்தின் போது மூதூர் வேதத்தீவு பாலத்துக்கான நிர்மாண நடவடிக்கைகளுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு, வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

மூதூர்,கிண்ணியாபோன்ற பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைப்பதுடன் பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-40)

# இருதரப்பு நல்லிணக்கத்தை ஏற்படுத்த தமிழ், சிங்கள நூல்கள் மொழிபெயர்ப்பு

கொழும்பு, மார்ச் 30

தமிழர் சிங்களவர்களிடையே இலக்கியக் கலையின் ஊடாக நல்லிணக்கத்துக்கான அடிப்படைகளை உருவாக்கும் நோக்கில் சிங்கள மொழியிலான இலக்கிய நூல்களை தமிழில் மொழிபெயர்ப்பதற்கும், தமிழ்மொழியிலான இலக்கிய நூல்களைச் சிங்களத்தில் மொழிபெயர்ப்பதற்குமான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் கல்வி அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாட்டில் வாழும் சிங்கள, தமிழ் மக்களின் கலாசாரம், பாரம்பரியம், சடங்கு முறைகளில் பல்வேறு ஒற்றுமைகள் காணப்படுகின்றன. எனினும், மூன்று தசாப்த காலமாக நாட்டில் நிலவிய போரால் இரு இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வில் பின்னடைவான நிலையொன்று உள்ளது.

'தெய்வேந்திர முனையி லிருந்து பருத்தித்துறை முனை வரையிலான இலக்கியப் பாலம்' எனும் தொனிப்பொருளில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்பகட்டமாக 7 சிங்கள மொழிமூல இலக்கிய நூல்கள் தமிழ் மொழிக்கும், 7 தமிழ் மொழிமூல இலக்கிய நூல்கள் சிங்கள மொழிக்கும் மொழிபெயர்ப்புச் செய்யப்படவுள்ளன. அதன்பொருட்டு அந்த இரு மொழிமூல எழுத்தாளர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

என்று அமைச்சின் கலாநிதி சுனில் விஜேசிறிவர்தன தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்ததாவது:

நாட்டில் பல்வேறு இன, மத, மொழி சார்ந்தவர்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் தாம் விரும்பும் அடையாளத்தைப் பின்பற்றுவதற்கு உரிமை உள்ளவர்கள்.

**தமிழர் சார்ந்திருக்கின்றனர்**

பெரும்பாலான தமிழர்கள் தாம் இலக்கிய வாசிப்பு தொடர்பில் பெருமளவில் இந்திய எழுத்தாளர்களைச் சார்ந்திருப்பதாகக் கூறு கின்றனர். இத்தகைய மொழிபெயர்ப்புச் செயற்றிட்டத்தின் மூலமாக எமது நாட்டின் எழுத்தாளர்கள் எழுதிய புத்தகங்களை வாசிக்கும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைக்கும்- என்றார்.

நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் உரையாற்றினார். (த-61)

# இராஜாங்க அமைச்சர் காசிம் இனரீதியாகச் செயற்படுகிறார்

## ராஜித சேனாரத்ன தலையிட வேண்டும் என்று கூட்டமைப்பு சபையில் வலியுறுத்தியுள்ளது

கொழும்பு, மார்ச் 30

சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் இன ரீதியாகவே சுகாதார அபிவிருத்திகளை முன்னெடுக்கின்றார். அவரது சகல நடவடிக்கைகளும் அவ்வாறுள்ளது. அதனால் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தமிழர் பகுதிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு கடுமையாக வலியுறுத்தி எடுத்துக்கூறி யுள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன்.

நாடாளுமன்றில் சுகாதார அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருக்கோவில் ஆதார மருத்துவமனை 120 வருடங்கள் பழைமை வாய்ந்தது. இதற்குத் தேவையான வளங்கள், ஆளணி, கட்டட வளங்கள் போதிய அளவில் இல்லை. இந்த மருத்துவமனை அதிகளவான நோயாளர்களைக் கொண்டது. இதனை அபிவிருத்திசெய்ய வேண்டுமென்று நான் இந்த அரசின் ஆட்சியில் கடந்த 3 வரவு - செலவுத்திட்டங்களின் போதும் வலியுறுத்தி வருகின்றேன். எதுவும் நடக்க வில்லை.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன சுகாதார ரீதியாக மறு மலர்ச்சியை நாட்டில் ஏற்படுத்தி அனைத்து மக்களுக்கும் தேவையான சிறந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றார். ஆனால் சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசச் காசிம் தனது கட்சிக்காக, தனது தேவைகளை முன்னிட்டு தனது இனமக்கள் இருக்கும் பகுதிகளை மட்டும் மையப்படுத்தியே அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கின்றார். தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளிலுள்ள மருத்துவமனைகளை அவர் புறக்கணிக்கின்றார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஏனைய ஆதார மருத்துவமனைகளுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு நிதிகள், ஏனைய நிதி மூலங்களிலிருந்தும் தேவையான நிதிகள் ஒதுக்கப்படும்போது தமிழர் பகுதியிலுள்ள திருக்கோவில் ஆதார மருத்துவமனை மட்டும் எந்தவிதநிதி ஒதுக்கீடுமின்றிப் புறக்கணிக்கப்படுகின்றது.

அண்மையில் கூட 3 மருத்துவமனைகளுக்கு அடிக்கல் நடப்பட்டது. அதிகளவான வெளிநாட்டு நிதிகள் ஒதுக்கப்பட்டன. நாம் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் திருக்கோவில் ஆதார மருத்துவமனைக்கு ஒருசதம் நிதி கூட ஒதுக்கப்படவில்லை. அவர் இனப்பாகுபாடு பார்க்கின்ற சுகாதார இராஜாங்க அமைச் சராகவே உள்ளார்.

எனவே சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (த-31)

# கோத்தபாய வருகையை தவிர்க்கஐ.தே.ககூட்டணி

## மகிந்த அணி மகிந்தானந்த கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 30

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணியுடன் கூட்டணிய மைத்து தேசிய அரசை அமைக்கமாட்டார். கோத்த பாய ராஜபக்சவின் அரசியல் பிரவேசத்தைத் தடுக்கவே ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணியமைத்தல் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின்அரசியல்பிரவேசத்துக்கு அஞ்சியே ஐக்கியதேசியக்கட்சி தற்போது தேசிய அரசை அமைக்க முயற்சிக்கிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்ஒருசில உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கு முரணாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைந்துள்ளனர். பதவி மீதுகொண்டுள்ள பற்றின்காரணமாகவும், தங்களின் அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் ஐக்கிய தேசிய முன்னணியுடன் சுதந்திரக் கட்சி மீண்டும் கூட்டணியமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது.

**தேசிய அரசு பலவீனம்**

தேசிய அரசு எந்தளவுக்குப் பலவீனமானது என்பதைக் கடந்த நான்கு வருடங்கள் ஆட்சியில் தெரிந்து கொள்ளலாம். நிலையான அரசை அமைக்க வேண்டும் என்று அரசு எண்ணினால் எவருடனும் கூட்டணியமைக்க வேண்டிய அவசியம் கிடையாது.

நாடாளுமன்றைக் கலைத்து பொதுத்தேர்தலுக்குச் செல்வதற்கான தீர்மானத்தை நாடாளுமன்றில் கொண்டு வாருங்கள். பெரும்பான்மை ஆதரவுடன் தீர்மானம் வெற்றிறுவதற்கு எதிர்க்கட்சியினர் முழுமையான ஒத்துழைப்பு வ்ழங்குவார்கள். ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகச் செயற்படும் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைப்பதே எமது நோக்கம் என்றார். (த-61)

# பொலிஸ் சீருடை மாறும்

## சிறிசேன ஆலோசனை

கொழும்பு, மார்ச் 30

தற்போது பாவனையிலுள்ள காக்கிச் சீருடைகளுக்குப்பதிலாகப்பொலிஸ் அதிகாரிகளுக்குப் பொருத்தமான சீருடையொன்றை அறிமுகப்படுத்துவது பற்றி சம்பந்தப்பட்ட துறையினருடன் கலந்துரையாடவுள்ளேன் என்று அரசதலைவர் தெரிவித்தார்.

கொழும்பு கொஸ்கம பொலிஸ் நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸார் தொடர்பில் மக்களிடையே நிலவும் எதிர்மறையான எண்ணங்களை மாற்றி தரமும் மதிப்பும்மிக்க பொலிஸ் சேவை ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காகப்பொலிஸ்திணைக்களம் மேற்கொள்ளும் உள்ளார்ந்த மாற்றங்களின் மற்றுமொரு நடவடிக்கையாகஎதிர்காலத்தில்பொலிஸ் சீருடையில் மாற்றம் ஏற்படுத்த எதிர்பார்க்கிறேன்.

பொலிஸ் திணைக்களத்தைக் கையேற்று கடந்து சென்றுள்ள சில மாதங்களுக்குள் அதன் தரத்தை மேம்படுத்துவதற்கும் பல உள்ளார்ந்த மாற்றம் வரும் என்று தெரிவித்தார்.

குறித்த பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். பின்னர் தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை அரசதலைவரிடம் கையளித்தனர். (த)

அரசியல்

# கைதிகளின் குடும்பங்களுக்கும் ரூ. 10 ஆயிரமாக்கி வழங்குங்கள்

## சாந்தி சிறிஸ்கந்தராசா எம்.பி. வலியுறுத்துகிறார்

கொழும்பு, மார்ச் 30

காணாமற் போனோரின் உறவுகளுக்கு அரசு வழங்குவதாக அறிவித்துள்ள 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும். சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கும், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கும் இந்தத் தொகை வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுகாதார விடயம் பற்றிய பாதீட்டு விவாதத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு வலியுறுத்தினார். காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகள் தங்களுடைய பிள்ளைகள், கணவர்கள், சகோதரர்களைப் படைத்தரப்பினரிடம் கையளித்தமைக்கான ஆதாரங்களை வைத்துள்ளனர். இந்தநிலையில் 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவைக் கொடுத்து அவர்களை ஏமாற்றி விடலாமென்று அரசு எண்ணிவிடக்கூடாது.

வடக்கு - கிழக்கில் 89 ஆயிரம் விதவைகள் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

**என்ரபிறைஸ் சிறிலங்கா பணக்காரருக்கே வாய்ப்பு**

என்ர பிரைசஸ் சிறிலங்கா கடன் திட்டத்தின் மூலம் பலவிதமான கடனுதவிகள் முன்மொழியப்பட்டுள்ளன. ஆனாலும் அவையனைத்தும் வங்கிகளில் உயர் வர்க்கத்தினர் நன்மை பெறும் வகையிலேயே உள்ளன. இந்தக்கடன் திட்டத்தை சமுர்த்தி வங்கி, கிராம சக்தித் திட்டம் ஆகியவற்றின் மூலம் வழங்கினால் சாதாரண தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர் நன்மைகளை பெறமுடியும்.

பெண்கள் மீதான உடல், உள ரீதியான வன்முறைகளும் அதிகரித்துச் செல்கின்றன. இது பாடசாலைகளிலும் அதிகரித்துள்ளன. பாடசாலையில் மாணவி ஒருவர் பாலியல் துர்நடத்தைக்கு ஆளானால் தொடர்புபட்ட ஆசிரியர் உடனடியாகப் பணி நீக்கம் செய்யப்பட வேண்டும். ஆனால் அவ்வாறான ஆசிரியர்கள் பின்தங்கிய பாடசாலைகளுக்கு மாற்றப்படும் முறையே கடைப்பிடிக்கப்படுகின்றது. இது அந்த ஆசிரியரை மேலும் குற்றச் செயல்களில் ஈடுபடவே தூண்டுகின்றன- என்று மேலும் தெரிவித்தார். (த-31)

# எனக்குச் சொந்தமான காணியை மகிந்த ராஜபக்ச பறித்து விட்டார்!

## சந்திரிகா அம்மையார் கவலை

கொழும்பு, மார்ச் 30

திருகோணமலை, சலப்பையாறு பகுதியில் இருந்த தனக்கு சொந்தமான ஒரு ஏக்கர் காணியை முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச பறித்தெடுத்துள்ளார் என்று, அவருக்கு முன்னாள் அரசதலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலைக்கு அண்மையில் சென்றிருந்த அவர் மக்களிடம் அபிவிருத்தித் திட்டங்களைக் கையளித்துள்ளார். இதன்போதே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ச ஆட்சியிலிருக்கும்போது தமிழர்களின் காணிகளை பறித்தெடுத்திருந்தார். இந்த நிலையில் முன்னாள் அரசதலைவரின் காணியைக்கூட மகிந்த பறித்துள்ளார் என்பது தற்போது வெளிப்பட்டுள்ளது.

திருகோணமலையில் குச்சவெளி, சலப்பையாறு பகுதியில் மூன்று கிணறுகளையும், 22 மீனவக் குடும்பங்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் மற்றும் உள்ளக வீதிகளையும் நிகழ்வில் சந்திரிகா கையளித்துள்ளார். மொரவெவ மற்றும் கோமரங்கடவல போன்ற பிரதேச செயலகங்களில் கிணறுகள், வீதிகள் மற்றும் குளங்களைச் சீரமைப்புச் செய்வதற்காகவும், தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளையும் வழங்கியுள்ளார். இந்தத் திட்டத்தின் மூலம் ஆயிரத்து 500 குடும்பங்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நிகழ்வில் கிழக்கு மாகாண தலைமைச் செயலர் சரத் அபேகுணவர்தன, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (த)

# வழங்கிய அறிவுறுத்தல்களை உரியவாறு கடைப்பிடிக்கவும்

## அரசதலைவர் அரச அலுவலர்களிடம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 30

அனைத்து அரச நிறுவனங்களிலும் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவொன்றை அமைக்குமாறு அரசு முன்னர் பல சந்தர்ப்பங்களிலும் ஆலோசனைகளை வழங்கியுள்ளது. அந்தச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்லவேண்டும் என்று வலியுறுத்திய அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேன, அதன் அவசியம் பற்றி நிறுவனத் தலைவர்களுக்கு வலியுறுத்தியுள்ளார்.

போதையிலிருந்து விடுதலை பெற்ற நாட்டை உருவாக்குவதற்கான சித்திரை மாத உறுதிமொழி தொடர்பில் அரச அலுவலர்களுக்குத் தெளிவுபடுத்தும் சந்திப்பு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.

போதைப்பொருள் கடத்தல் பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் துறையினரால் மட்டும் கட்டுப்படுத்த முடியாதளவில் காணப்படுகிறது. குடும்பக் கட்டமைப்பு தொடக்கம் சமூகக் கட்டமைப்பு வரையான பரந்தளவிலான உள ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதனூடாக அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மேலும் தெரிவித்தார் - என்று அரசலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (த)

# மைத்திரி மகனுக்கு 'மே'யில் திருமணம்

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் புதல்வர் தஹம் சிறிசேன திருமண பந்தத்தில் இணையவுள்ளார்.

அவரும், அத்துல வீரரத்ன வின் புதல்வி நிபுனியும் காதலித்து வந்துள்ளனர். இந்த நிலையில் அவர்கள் திருமணத்தில் இணையவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மே மாதம் 9 ஆம் திகதி ஷங்கரி லா விடுதியில் திருமணம்நடைபெறும்-என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## சிறுவர் துன்புறுத்தல்களைத் தடுக்க உரிய சட்டங்கள் உருவாக்கப்படும் முஸ்லிம் விவகாரமே சிக்கலில்!

### நீதிஅமைச்சர் சபையில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 30

சிறுவர்களுக்கு உடல் ரீதியான துன்புறுத்தல்களை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக தேவையான சட்டங்களை மேற்கொள்ள இருக்கின்றோம். முஸ்லிம்விவாக, விவாகரத்து திருத்தச்சட்டம் தாமதமாக தான் காரணமில்லை என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தின் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு மற்றும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள 2009 ஆம் ஆண்டு நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. 10 வருடங்களுக்குப் பின்னர் அந்தக் குழுவின் அறிக்கையைக் கையளிக்குமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அறிக்கை என்னிடம் கையளிக்கப்பட்டது. என்றாலும் குறித்த குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஒரு இணக்கப்பாட்டில் இல்லாமலே குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

குறித்த குழு இணக்கப்பாட்டுக்கு வந்தால் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க முடியும். திருத்தச்சட்டம் தாமதமாவதற்கு தான் காரணமில்லை- என்றார். (த-31)

## தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தெரிவு செய்ய மாட்டார்கள்

### மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 30

ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு கூட்டமைப்பின் ஆதரவு ஒருபோதும் தேவையற்றது. வடக்கு மற்றும் கிழக்குத் தமிழ் மக்கள் கூட்டமைப்பினரை மீண்டும் தங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வார்களா என்பது சந்தேகமே! மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் சானக வகும்பர தெரிவித்தார்.

பொதுமக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்சவின் அரசில் நாட்டுக்கு எதிரான செயற்பாடுகள் ஏதும் இடம்பெறாது என்ற காரணத்தாலேயே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராகக் கருத்துரைக்கின்றார்கள்.

**மகிந்த அணி ஆட்சியமைக்க கூட்டமைப்பு தேவையில்லை**

தாம் ஆட்சிக்கு வருவதற்குக் கூட்டமைப்பின் ஆதரவு தமக்கு அவசியமில்லை. அது பற்றிய கூட்டமைப்பினரின் நோக்கம் ஒருபோதும் நிறைவேறாது.

ராஜபக்சர்களின் ஆட்சி மீண்டும் உருவாகுவதற்கு இடமளிக்க முடியாது என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குறிப்பிட்டுள்ளமை, அவர்களின் வரையறுக்கப்பட்ட அரசியல் நோக்கங்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கூட்டமைப்பினர் ஆதரவு வழங்குவதற்கான முதன்மைக் காரணம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு அரசு இணை அனுசரணை வழங்குவதாக இரண்டு முறை ஒத்துக்கொண்டுள்ளமையே. தலைமைஅமைச்சர் ரணில் விக்கிர மசிங்கவால் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்றோம் என்று நன்கு அறிந்தும் தங்களின் அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றார்கள்.

இராணுவத்தினருக்கு எதிரான செயற்பாடுகளுக்கு மகிந்த ராஜபக்ச துணைபோகமாட்டார் என்பதற்காகவே கூட்டமைப்பினர் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குகின்றார்கள் - என்றார். (த-61)

## கால்நடையாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு

மூதூர், மார்ச் 30

தம்பலகாமம் பிரதேசத்தில் உள்ள கால் நடை வளர்பாளர்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு வழங்கப்படவேண்டும் என கால்நடை வளர்ப்போர்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தம்பலகாமம் பிரதேச செயலர் பணிமனையில் சிவில் அமைப்புக்கள் சார்பில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் குறைகேள் மன்ற நிகழ்வில் இந்தக் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

தம்பலகாமம் பிரிவில் 15 ஆயிரம் கால்நடைகள் உள்ளன. இவற்றுக்கான மேய்ச்சல்தரை ஒதுக்காமையால் கால்நடை வளர்ப்போரின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. இந்த விடயம் தொடர்பாக இங்கு நடைபெற்ற பல அபிவிருத்திக் குழுக்கூட்டங்களிலும் நாம் கோரிக்கை முன்வைத்துள்ளோம். அதற்கு எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. பத்தினிபுரம் பகுதியில் 1981 ஆம்ஆண்டுகளில் 1250 ஏக்கர் இதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

போர் நிறைவடைந்ததன் பின்னர் அதனை வன இலாக எடுத்து விட்டு பாவிக்கத் தடைவிதித்து வருகின்றது.

அண்மையில் தற்காலிகமாக மொறவேவ பகுதிக்கு மாடுகளை கொண்டு செல்லும்படி கோரப்பட்டது. அங்கும் உள்ள விவசாயிகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் அதிகளவு கால்நடைகளை வளர்க்கும் எமது விவசாயிகள் பெரும் துன்பப்படுகின்றனர். அவர்களது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகவுள்ளது. அண்மையில் அதிகளவிலான மாடுகள் இறந்தன அதற்கும் எவ்விதமான இழப்பீடுகளும் செய்யப்படவில்லை. எனவே இதற்கான முறையான தீர்வை வழங்க இங்கு கலந்துகொண்டுள்ள உயரதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் எனவும் மக்கள் குறைகேள் கலந்துரையாடலில் கலந்துகொண்ட அதிகமான விவசாயிகள் தெரிவித்தனர். (க-40)

## மக்களுக்கான தண்ணீரை தனியாருக்கு வழங்காதே

### கண்டித்து ஹற்றனில் மக்கள் போராட்டம்

பொகவந்தலாவ, மார்ச் 30

பொதுமக்கள் பயன்படுத்தும் குடிதண்ணீரை நிறுத்தி தனியார் தொழிற்சாலைக்குக் வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் நீதி கோரி தோட்ட முகாமையாளர் விடுதியைச் சுற்றி வளைத்தனர். வீதியில் போராட்டத்திலும் ஈடுபட்டனர். அதனால் குழப்பம் ஏற்பட்டது.

மலையகம் டிக்கோயா சாஞ்சிமலை மேல்பிரிவு தோட்டத்திலிருந்து பிலிங்பொனி தோட்டப் பகுதியில் இயங்கும் தனியார் தொழிற்சாலைக்கு தண்ணீர் மாற்றப்பட்டதால் இந்த நிலை ஏற்பட்டது.

இந்தக் குழப்பம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மக்கள் அருந்தும் குடிதண்ணீரை மறிக்கவேண்டாம் என்று பிரதேச சபை பணித்த பின்னரும் தோட்ட நிர்வாகம் அதைக் கவனத்தில் கொள்ளவில்லை. அதனால் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து நீதிகேட்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். இதில் நோர்வுட் பிரதேசசபையின் தவிசாளர் உட்பட சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை தண்ணீர் வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹற்றன் சாஞ்சிமலை முதன்மை வீதியை மறித்து வீதியில்



அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வருகை தந்த ஹற்றன் பொலிஸார், போராட்டத்தைக் கைவிடுமாறு கோரியபோது நோர்வுட் பிரதேச சபையின் தவிசாளருக்கும் உதவிப் பொலிஸ் அத்தியட்சருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது

சட்டவிரோத செயற்பாட்டுக்குப் பிரதேசசபை அனுமதிக்காது என்றும் மக்கள் பயன்படுத்தும் தண்ணீரை தனி ஒரு நிறுவனத்துக்கு வழங்க முடியாது என்றும் தெரிவித்தார்.

அதனையடுத்து தொழிற்சாலைக்குத் தண்ணீர் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக பொலிஸாரும் உறுதியளித்தனர். அதனையடுத்துப் போராட்டத்தை நிறுத்தினர். (த)

## பிக்குகளின் தவறுகளால் அவப்பெயர்

கொழும்பு, மார்ச் 30

பிக்குகளில் ஒரு பிரிவினரின் நடவடிக்கைகளால் சில சந்தர்ப்பங்களில் முழு மகாசங்கத்தினரும் விமர்சனத்துக்கு உள்ளாகின்றனர். இத்தகைய நடவடிக்கைகளால் உலகில் மதிப்பும் குறைகிறது என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு நாரங்வல சிறி சுமணகீர்த்தி பிரிவெனாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அன்னதான மண்டபத்தையும் மாநாட்டு மண்டபத்தையும் கடந்த புதன்கிழமை திறந்து வைத்து உரையாற்றினார். அதில் அவர் மேற்கண்டவாறு கூறினார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்தது.

சில பிக்குகளின் மோசமான நடத்தைகள் இணையத்தளங்களினூடாக வெளியிடப்படுவதன் காரணமாக இலங்கை பிக்குகள் சமூகம் குறித்து பிழையான மனப்பதிவொன்று உலகில் ஏற்படக்கூடும். இந்த நிலைமை பற்றி இளம் பிக்குகள் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும் என்று ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## பறித்த வரப்பிரசாதங்களை மீளப் பெற்றுத் தரவேண்டும்

### பீல்மார்சல் பொன்சேகா எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 30

பறிக்கப்பட்ட தனது வரப்பிரசாதங்கள் அனைத்தையும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பீல் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றம் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலையில் கடந்த புதன்கிழமை கூடியது. நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா சிறப்புக் கூற்றொன்றை முன்வைத்து சிறப்புரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பில் தெரிவிக்கையிலேயே இவ்வறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

இதன் மூலம் எனது ஜெனரல் தரம், ஓய்வூதியம் என்பவற்றை இல்லாமலாக்கி என்னை வெலிக்கடைச் சிறையில் அடைத்தார்கள். அதன் பிரகாரம் 2010 ஏப்ரல் 22ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டேன்.

அப்போதைய ஆட்சியாளர் 2010 செப்ரெம்பர் 30ஆம் திகதி எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இல்லாமலாக்கி எனது சம்பளம், கொடுப்பனவுகள் சிறப்புரிமை என அனைத்தையும் இல்லாமலாக்கினார்.

அதன் பின்னர் 2015 ஜனவரி 8ஆம் திகதி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசதலைவர் என்மீது சுமத்தப்பட்டிருந்த அனைத்து குற்றங்களில் இருந்தும் விடுவித்து எனது உண்மை நிலையை உறுதிப்படுத்தி என்னை விடுதலை செய்தார்.

எனவே தனக்கு வழங்கப்படவேண்டிய அனைத்து வரப்பிரசாதங்களையும் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (த-31)

## காணிப் பிரச்சினை தீராவிட்டால் இனப்பிரச்சினை ஒருபோதும் தீரா

செங்கலடி, மார்ச் 30

கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் காணிப்பிரச்சினைகள் தீர்க்கப்படா விட்டால், இனப்பிரச்சினைக்குக் கூட நிரந்தரத்தீர்வுகாண முடியாது என மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசதலைவரின் ஆலோசனைக்கிணங்க ஆணைக்குழுவொன்று செயற்படுத்தப்படவுள்ளதாவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையின் நடைபெற்ற மாணவர் மற்றும் ஆசிரியர் மதிப்பளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது இந்த நிகழ்வில் முதன்மைவிருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாடசாலை எஸ்.ஏ. நஜீப் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிபர் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கிழக்கு மாகாணத் தலைவர் எம்.எஸ். சுபைர் மற்றும் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப்பணிப்பாளர் டாக்டர் எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (க)

## கல்வி அமைச்சின் செயலர் நியமனம்

கொழும்பு, மார்ச் 29

கல்வி அமைச்சின் புதிய செயலாளராக நிஹால் ரணசிங்க நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார். அரச தலைவர் அலுவலகத்தில் வைத்து அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து தனது நியமனக் கடிதத்தை அவர் பெற்றுக்கொண்டார். (ம)

# மின்தடை ஏற்படுவதற்கு மகிந்ததான் காரணம்

## குற்றம் சுமத்துகிறார் சந்திரிகா

**கொழும்பு, மார்ச் 30**

**நாட்டில் மின்தடை ஏற்பட்டுள்ளமைக்கு எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்சவே காரணம் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**

**நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மின்தடை குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.**



தமது காலத்தில் பல மின் உற்பத்தி நிலையங்களை ஆரம்பித்த போதும், தாம் கையொப்பமிட்ட உடன்படிக்கைகளை கிழித்து எறிந்த ராஜபக்ச அரசு, கைச்சாத்திட்டத்தை விட இரண்டு மடங்கு செலவில் நுரைச்சோலைக்கு கைச்சாத்திட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நுரைச்சோலையைத் தாம் சீனாவின் சிறந்த நிறுவனத்துக்கே வழங்கியதாகவும் அதிக தரகுப் பணம் கேட்டமையால், அரசின் முன்னாள் தலைவர்களில் ஒருவர் அந்த நிறுவனத்தை மூடிக்கொண்டு சென்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இரண்டு சதத்துக்கும் உதவாத சீன நிறுவனத்துக்கு அதனை வழங்கியதால், 38 தடவைகள் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் சீர்குலைந்துள்ளதாக முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ.5)

# ஊடகவியலாளர்களை வெளியேற்றிய பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர்

## அமர்வுக்கு அனுமதித்துவிட்டு வாக்கெடுப்பு நடத்தினார்

யாழ்ப்பாணம், மார்ச் 30

பருத்தித்துறை நகர சபை சிறப்புக் கலந்துரையாடலில் ஊடகவியலாளர்கள் பங்கேற்க முடியும் என்று அனுமதி வழங்கிய தவிசாளர், சபை உறுப்பினர்களின் கோரிக்கையை அடுத்து வாக்கெடுப்பு நடத்தி ஊடகவியலாளர்களை வெளியேற்றினார். ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

பருத்தித்துறை நகர சபைக்கு உட்பட்ட மரக்கறிச்சந்தை வியாபாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சபை விதிமுறைக்கு உட்பட்டு செயற்படுமாறு அறிவுறுத்தியிருந்தார். இந்த விவகாரம் தொடர்பில் சபை உறுப்பினர்களுடன் சிறப்புக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

சிறப்புக் கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் பங்கேற்கலாமா என்று நேற்றுக் காலை 9.55 மணிக்கு, நகர சபைத் தவிசாளரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினார்கள். நகரசபைத் தவிசாளர் இருதயராஜா, ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க முடியும் என்று பதிலளித்தார். கூட்டம் 10 மணிக்கு ஆரம்பமாகியது. ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டனர். கூட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் தயாபரன், கூட்டத்தில் பலரும் முரண்பட்ட கருத்துக்களைக் கதைக்கவேண்டி வரும். கலந்துரையாடல் முடிவில் ஊடகங்களுக்குத் தெரிவிக்கலாம் என்றார். இதனையடுத்து ஊடகவியலாளர்களை அனுமதிப்பதா இல்லையா என்பது தொடர்பில் சபையில் சலசலப்பு ஏற்பட்டது. இறுதியில் ஊடகவியலாளர்களை செய்தி சேகரிக்க அனுமதிப்பதா இல்லையா என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ந.நிரஞ்சன், சுயேச்சைக்குழு உறுப்பினர் மு.சுலோயனா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான க.பாமதி, சி.தயாபரன், ஈ.பி.டி.பி. உறுப்பினரான சிறி வாணி ஆகியோர் ஊடகவியலாளர்களை அனுமதிப்பதில்லை என்று வாக்களித்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களான சு.கோகிலகுமார், க.பாலசுப்பிரமணியம், பி.வின்சன் டிப்போல், சு.கமலன் ஆகியோர் ஊடகவியலாளர்களை அனுமதிக்கலாம் என்று வாக்களித்தனர். ஈ.பி.டி.பி. உறுப்பினரான மு.பிறேம்குமார் நடுநிலமை வகித்தார். இறுதியில் ஊடகவியலாளர்களை வெளியேற்ற 5 வாக்குகள் கிடைத்தன. ஊடகவியலாளர்களை அனுமதிக்கவேண்டும் என்பதற்கு ஆதரவாக 4 வாக்குகள் கிடைத்தன. இதனையடுத்து ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் கூட்டம் நடைபெற்றது.

இதற்கு முன்னர் நகர சபையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த உபதவிசாளர் தொடர்பான கூட்டம் உள்ளிட்ட சிறப்புக் கூட்டங்களுக்கு ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. (ஒ.5.26)

### சேறு பூசுவதன் ஊடாக

# மின்சார நெருக்கடிக்கு தீர்வுகாணவே முடியாது

## சபாநாயகர் கரு ஜயசூரிய

மின்சார நெருக்கடிக்கான தீர்வைக் கண்டறிந்து, ஒரு மித்து அதனை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவே நெருக்கடி நிலையிலிருந்து மீளமுடியும். அதனை விடுத்து ஒருவர் மீது மற்றொருவர் பரஸ்பரம் சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் ஊடாக எதனையும் சாதிக்க இயலாது என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நீர்த்தேக்கப் பகுதிகளில் நீர் மட்டம் மிகவும் குறைவாக இருப்பதுடன், மழை பெய்யாதமையின் காரணமாக நீர் மின்னுற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளதால் நாட்டின் மின்சாரத்தேவையைப் பூர்த்தி செய்ய இலங்கை மின்சார சபையால் இயலாமல் போயுள்ள நிலையில், மின்சாரத்தை சேமிக்கும் வகையிலான சக்திவலு அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் யோசனைக்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

மின்வெட்டு குறித்து அரசியல்வாதிகளுக்கு இடையிலேயே ஒருவர் மீதொருவர் என்று விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே, சபாநாயகர் தன்னுடைய கீச்சக பக்கத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

'மின்சார நெருக்கடிக்கான தீர்வைக் கண்டறிந்து, ஒருமித்து அதனை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவே நெருக்கடி நிலையிலிருந்து மீளமுடியும். அதனை விடுத்து ஒருவர் மீது மற்றொருவர் பரஸ்பரம் சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் ஊடாக எதனையும் சாதிக்க இயலாது. அமைச்சர் ரவி கருணாநாயக்க தலைமையிலான குழு இதற்கான தீர்வினை விரைவில் கண்டறிவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்' என்று அதில் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5.31)

# நெஞ்சுவலியால் அவதிப்பட்ட நோயாளியை காப்பாற்றிய சாரதி

கொடிகாமம், மார்ச் 30

நெஞ்சுவலியால் அவதிப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்ட நோயாளியை மருத்துவர் இல்லாத நிலையில் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு சென்று காப்பாற்றியுள்ளார் நோயாளர்காவுவண்டிச்சாரதி. இந்தச் சம்பவம் கொடிகாமம் மருத்துவமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பிற்பகல் 2 மணியளவில் நெஞ்சுவலியால் பாதிக்கப்பட்ட மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த நோயாளியை கொடிகாமம் மருத்துவமனைக்கு கொண்டு வந்துள்ளனர். மருத்துவமனையில் மூன்று மருத்துவர்கள் உள்ள போதிலும் அந்த நேரம் மூவரும் கடமையில் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நோயாளி, நெஞ்சுவலியால் துடித்துக் கொண்டிருப்பதைச் சகிக்க முடியாத நோயாளர் காவு வண்டி சாரதி பதிவுகள் எதுவுமின்றி நோயாளியை ஏற்றிவந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தார். சாவகச்சேரி மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நோயாளிக்கு உடனடிச் சிகிச்சை வழங்கப்பட்டது. அவர் காப்பாற்றப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

"மருத்துவமனையில் மூன்று மருத்துவர்கள் உள்ளனர். ஒருவர் பதில் கடமைக்காக வேலணை மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். பகல் கடமையில் ஈடுபட்டிருந்த மருத்துவர் வெளியே சென்றிருந்தார்" என்று கொடிகாமம் மருத்துவமனைத் தரப்பினர் தெரிவித்தனர். (த-9)

### உணவில் புழு

# ஆளுநரை நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு

கிளிநொச்சி நகரிலுள்ள உணவகத்தால் வழங்கப்பட்ட சாப்பாட்டில் புழு காணப்பட்டமை தொடர்பான வழக்கில் எதிர்வரும் 5ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவனுக்கு கிளிநொச்சி நீதவான் எம்.கணேசராஜா நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்தல் வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பொதுமக்கள் தினத்துக்கு வழங்கப்பட்ட மதிய உணவில் புழு காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அன்றைய தினம் பிற்பகல் இந்த வழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

உணவுச் சட்டத்தின் கீழ் கரைச்சிப் பிரதேச சுகாதார பரிசோதகர் ரி.நிசாந்தன் வழக்கைத் தாக்கல் செய்தார். சந்தேசநபரான கிளிநொச்சி பாரதி ஸ்ரார் உணவக முகாமையாளர் நீதிமன்றில் முன்னிலையானார்.

நேற்று வெள்ளிக்கிழமை வழக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட போது சுகாதாரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்படவில்லை எனத் தெரிவித்து வழக்கு தொடுநர் தரப்பின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபரின் சார்பில் சட்டத்தரணிகள் எஸ்.விஜயராணி, எஸ்.ரி.அருச்சுனா, திருமதி சர்மா ஆகியோரின் அனுசரணையுடன் மூத்த சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா முன்னிலையாகி முறையீடு ஒன்றைத் தெரிவித்து சமர்ப்பணங்களைச் செய்தார். நீதிமன்றின் உத்தரவின் பெயரில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலையே உணவகம் பூட்டப்பட்டது என்றும் தெரிவித்த சட்டத்தரணி அன்றிரவு 8 மணியளவில் சில பொலிஸ் அதிகாரிகள் உணவகத்துக்கு வந்தார்கள் என்றும் அவர்களைத் தொடர்ந்து வடக்குமாகாண ஆளுநர் அங்கு வருகைதந்தார் என்றும் குறிப்பிட்டார். சுமார் அரை மணித்தியாலங்களுக்கு மேலாக உணவகத்தில் ஆளுநர் ஒரு நாட்டாமை போல நடந்துகொண்டார் என்றும் ஒரு காட்டுத் தர்பார் அங்கு அவரால் நடாத்தப்பட்டதென்றும் குற்றஞ்சாட்டிய சட்டத்தரணி ஸ்ரீகாந்தா ஆளுநரின் நடத்தை சட்டவிரோதமானது மாத்திரமன்றி இந்த நீதிமன்றின் அதிகார எல்லைக்குள் ஊடுருவிய ஓர் பாரதூரமான விவகாரம் என்றும் தெரிவித்தார். நீதிமன்றின் முன்னால் உள்ள வழக்கு ஒன்றுடன் தொடர்புடைய உணவகத்தில் தலையீடு செய்வதற்கு ஆளுநர் யார் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். ஆட்சிமுறையின் கீழ் ஒவ்வொரு துறையும் தனக்குரியதைச் செய்யவேண்டும். குதிரையின் வேலையை எருதோ கழுதையோ செய்ய முடியாது. அதேநேரத்தில் ஒரே உறைக்குள் இரண்டு வாள்கள் இருக்க முடியாது. நீதித்துறையின் சுயாதீனத்திலும் சுதந்திரத்திலும் எவரும் தலையீடு செய்ய முடியாது. இது மிகப் பாரதூரமான விடயம். இந்த விடயத்தில் நீதிமன்றின் மதிப்பை பாதுகாக்கும் கடமைப்பாடு சட்டத்தரணிகளாகிய எங்களுக்கும் உண்டு. நீதிமன்று ஆளுநரின் நடத்தை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர் விண்ணப்பித்தார். எதிர்வரும் 5ஆம் திகதி வடக்குமாகாண ஆளுநர் சுரேன் ராகவனை வழக்கில் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அவருக்கு அறிவித்தல் வழங்கப்பட நீதவான் கட்டளையிட்டார். (ஒ.5.26)

## நாடாளுமன்றில்...

ளுக்கான நிதி ஒதுக்கீட்டை திருத்தத்துடன் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்வோம். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலையில் கூடியது.

ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்து எதிர்க்கட்சி உறுப்பினர் பந்துல குணவர்த்தன, மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் உள்ளக உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுகளுக்கான செலவுத்தலைப்புகள் நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் அடுத்த கட்டமாக அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கை தொடர்பில் அறிவிக்கவேண்டும் குறிப்பிட்டார்.

சபைமுதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல, அமைச்சுக்கள் அனைத்துக்கும் ஏப்ரல் 30ஆம் திகதி வரை நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஏப்ரல் 30க்கு முன்னர் இந்த அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டை சமர்ப்பித்து அனுமதித்துக் கொள்ளலாம். பத்து ரூபாவே கழிக்கப்படுகின்றது. அதனால் இது பெரிய பிச்சினையல்ல. என்றாலும் நாங்கள் இதனை மீண்டும் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்போம். இதனால் அரசு கவிழாது. பயப்படவேண்டாம் என்றார். மீண்டும் குறுக்கிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர் பந்துல குணவர்த்தன, அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால், அந்த ஒதுக்கீடுகள் அனைத்தும் இல்லாமலாக்கப்படும். புதிதாக மீண்டும் ஒதுக்கீடு செய்து அதற்கு அமைச்சரவையில் அனுமதியை பெற்றுக்கொண்ட பின்னர் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து அனுமதித்துக் கொள்ளவேண்டும். இதற்கு பல முன்மாதிரிகள் இருக்கின்றன. தவறான முன்ம்மாதிரிகளை ஏற்படுத்தவேண்டாம் என்றார். எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச, இதற்கு முன்னரும் இதுபோன்ற சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஆறுமுகன் தொண்டமான், ரத்னசிறி விக்ரமநாயக்க போன்றவர்கள் அமைச்சர்களாக இருந்த காலத்தில் அவர்களது அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தோற்கடிக்கப்பட்டது. அவ்வாறான நிலையில் சபாநாயகர் எம்மை அழைத்து, கலந்துரையாடி அடுத்த கட்டமாக எடுத்த நடவடிக்கைகள் இருக்கின்றன. அவ்வாறான முறையில் நடவடிக்கை எடுத்தால் எமக்கு பிரச்சினை இல்லை. மாறாக குறுக்கு வழிகளை பின்பற்றாமல் சம்பிரதாயங்களை பின்பற்றி நடக்க வேண்டும் என்றார்.

இதன்போது சபைக்கு வந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எழுந்து, வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நேற்று (நேற்று முன்தினம்) அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்டில் பிரேரிக்கப்பட்டதன் பிரகாரம் குறித்த அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட இரண்டாயிரத்து 312 பில்லியன் ரூபா நிதியில் இருந்து 320 ரூபாவை கழித்து மீண்டும் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளலாம். எமது உறுப்பினர்களது தவறும் இருக்கின்றமையால் சம்பிரதாயத்தின் பிரகாரம் கழிக்கப்பட்ட 320 ரூபாவை மீண்டும் சேர்த்து, திருத்தங்களுடன் சமர்ப்பித்து அனுமதித்துக் கொள்வோம் -என்றார். (ஒ.5.31)

## தோற்கடிப்புக்குப்...

பாட்டலி சம்பிக்க ரணவக்க, அமைச்சர் வஜிர அபேவர்தன ஆகியோர் சுயமாகவே தமது அமைச்சுப் பதவிகளை துறக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செகான் சேமசிங்க தெரிவித்தார்.

பொதுமக்கள் முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சம்பிக்க புதிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவில்லை. கடந்த அரசின் திட்டங்களை விமர்சித்து வந்தார். அதற்குரிய பலன் கிடைத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக தான் போட்டியிட வேண்டும் என்ற நோக்கத்தில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கடந்த காலங்களில் அரசியல் தந்திரங்களை பிரயோகித்தார். இவரது கனவுகள் அனைத்துக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் தகுந்த பதிலடி வழங்கி விடடார்கள்.

மக்களின் அடிப்படை, தேர்தல் உரிமையைப் பிற்போடுவதற்கு பல காரணிகளை குறிப்பிட்ட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடும் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சியின் பலவீனமும் அரசின் இறுதி அத்தியாயமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசுக்குள் இன்று பெரிய முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி வரவு - செலவு திட்டத்தின் மீதான இறுதி வாக்கெடுப்பு இடம்பெறும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரது ஆதரவுடன் நிச்சயம் வரவு செலவு திட்டம் வெற்றி பெறும்.

சிறிலங்கா சுதந்திர கட்சி எவ்வாறு செயற்படும் என்று குறிப்பிட முடியாது. வரவு செலவு திட்டத்தின் மீதான இரண்டாம் வாக்கெடுப்பில் சுதந்திர கட்சி தவறான அரசியல் தீர்மானத்தை மேற்கொண்டு ஐக்கிய தேசிய கட்சியைப் பாதுகாத்தது. மூன்றாம் கட்ட வாக்கெடுப்பில் எவ்வாறு சுதந்திர கட்சி செயற்படும் என்பதை பார்த்தே பரந்துப்பட்ட கூட்டணியமைத்தல் தொடர்பில் தீர்மானிக்கப்படும் - என்றார். (ஒ.5.31)

## மன்னாரில்...

கோட்பாட்டாலும் வெல்ல ஒன்றித்து நிற்க அழைக்கின்றோம் என்று மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு நேற்று ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**பணி ஏராளம்**

போர்க் காலத்தில் மன்னார் மறைமாவட்டத்தில் கத்தோலிக்க குருக்கள், துறவிகள் செய்த பணிகள் அளப்பரியது. அப்பாவி மக்கள் கைது செய்யப்பட்டதற்கு எதிராகவும், மனிதப் பண்பு மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் அவர்கள் ஆற்றிய பணி சொல்லில் அடங்காதது. இவ்வாறான பணிகளில் ஈடுபட்டமைக்காக ஆயர்கள், குருக்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டும், ஆயுததாரிகளால் அச்சுறுத்தப்பட்டும் அனைத்துக்கும் மேலாகத் தங்கள் உயிர்களைக் கொடுத்த வரலாறும் மன்னார் மண்ணுக்கு உண்டு. பிற, மத சகோதரர்கள் கத்தோலிக்க குருக்களை தங்கள் தேவைகளின் போது அந்தந்த தேவைகளின் வழங்குநர்களாக, தீர்வை முன்வைப்பவராக, ஒரு மதத்தின் தலைவராக பார்க்கின்றனர்.

**பக்கச் சார்பாக நடக்கின்றார்கள்**

கத்தோலிக்கர்களின் யாத்திரை தலமாகவும், மன்னார் கத்தோலிக்கர்களின் ஆன்மீக இளைப்பாற்றியின் மையமாகவும் காணப்படும் மடு அன்னையின் ஆரம்ப இருப்பிடமாக உள்ள மாந்தை லூர்து அன்னை ஆலயத்துக்கு அருகில் நிகழ்வு இடம்பெற்றது. இந்த ஆலயத்தின் நுழைவாயிலின் அருகில் அந்தப் பகுதி மக்களின் கலந்துரையாடலுடன் புரிந்துணர்வின் அடிப்படையில் விழாவுக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்ட அலங்கார வளைவை சிவராத்திரியைக் காரணம் காட்டி அதே இடத்தில் நிரந்தர அலங்கார வளைவாக அமைக்கும் நோக்குடன் ஏற்கனவே இருந்ததை தாங்களே அகற்றி அதற்குப் பதிலாக நிரந்தர அலங்கார வளைவை நிறுவ ஆரம்பித்ததும், அங்கிருந்த மக்களிடையே முரண்பாடு ஏற்பட்டதும் நிரந்தரமாக அமைக்கப்பட்ட அலங்கார வளைவு அகற்றப்பட்டதும் அறிந்ததே.

நிலமையை அறிந்து அதனைச் சீர்படுத்த எமது கத்தோலிக்க குருக்கள் சென்ற போது அங்கு ஏற்கனவே திட்டமிட்டு கூடியிருந்த சிலர் ஒரு பக்கச்சார்பாக செயற்பட்டதுடன் கத்தோலிக்க குருவை மையப்படுத்தி திட்டமிட்டு ஒளிப்படங்கள் எடுத்தும் பின்னர் முகநூல்களிலும் மன்னார் மறைமாவட்டக் குருக்களையும் கத்தோலிக்க சமூகத்தையும் ஒருவன் முறையாளர்களாக சித்தரித்து அவமானப்படுத்தியமை மாத்திரமல்லாமல் எமது கத்தோலிக்க குருக்களை கீழ்த்தரமான வார்த்தைகளால் விமர்சித்துக் கொண்டிருப்பதுடன் எமது மதகுரு மீது வன்முறைக் குற்றம் சுமத்தி அவரை ஒரு குற்றவாளியாகக் காட்டியிருக்கிறார்கள்.

நாங்கள் வன்முறையாளர்கள் அல்ல. எமது மதமும், எமது மதகுருக்களும் வன்முறையைத் தூண்டுபவர்களும் அல்ல. ஆனால் உண்மைக்காக எமது குரல் எப்போதும் ஒலிக்கின்றது. இந் நிகழ்வுகளை ஒருபக்கச் சார்பாகவும் நீதிக்கும், உண்மைக்கும் புறம்பாக செய்திகளை வெளியிட்ட ஊடகங்களையும் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க மக்களையும் கத்தோலிக்க குருக்களையும் தகாத வார்த்தைகளால் விமர்சித்தவர்களையும், அவமானப்படுத்தியவர்களையும் வன்மையாக கண்டிக்கின்றோம். நிகழ்வு நடந்த மாந்தைச் சந்தியில் காணப்பட்ட புனித லூர்து அன்னை ஆலயம் எந்த ஒளிப்படத்திலும் அவர்களால் காட்டப்படவில்லை. அவர்களின் கபடத்தன்மையும் நீதிக்குப் புறம்பான செயலும் புலப்படுகிறது. அவர்களின் கபடத்தனத்தால் பிளவு படவும் செய்துள்ளார்கள்.

உண்மையைச் சரியாக விளங்கிக் கொண்டு இது மறைசாட்சிகள் குருதி சிந்திய மண். இங்கு நமது மறைக்காக எழும் சூழ்ச்சியை செபத்தினாலும் எமது கத்தோலிக்க விசுவாசத்தின் நம்பிக்கையின் கோட்பாட்டாலும் வெல்ல ஒன்றித்து நிற்க அழைக்கின்றோம் என்றுள்ளது. (ஒ.5.56)

## உரிய...

படுத்தல் போன்ற குற்றங்களின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்படவேண்டும். இவ்வாறு முறைப்பாட்டாளர்களின் சட்டத்தரணிகள் மன்றில் முன்வைத்த வாதத்தை ஏற்றுக் கொண்ட மன்று, பொலிஸாரை அறிக்கையைத் திருத்தித் தாக்கல் செய்யுமாறு பணித்தது.

திருக்கேதீச்சர ஆலய அலங்கார வளைவு, மகா சிவராத்திரிக்கு முதல் நாள் கத்தோலிக்க மக்களால் அகற்றப்பட்டிருந்தது. இது தொடர்பான வழக்கு மன்னார் நீதிமன்றில் பதிவு செய்யப்பட்டது. காணொலி ஆதாரங்கள், ஒளிப்பட ஆதாரங்களைப் பயன்படுத்தி சந்தேகநபர்களைக் கைது செய்ய மன்று கடந்த 8ஆம் திகதி பணித்திருந்தது. பொலிஸார் கைது செய்யவில்லை. கடந்த 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினத்தில் அருட்தந்தையர் ஒருவர் உள்ளிட்ட 10பேர் பொலிஸில் சரணடைந்தனர். பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் வழக்கு மன்னார் நீதிமன்றில் நீதிபதி சரவணராஜா முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

முறைப்பாட்டாளர்களின் சட்டத்தரணிகள் மன்றில் தமது வாதங்களை முன்வைத்தனர். திருக்கேதீச்சர ஆலய அலங்கார வளைவு உடைக்கப்பட்டு, நந்திக் கொடியை காலால் மிதித்த செயல், ஒரு மதத்தை அவமதிப்பது போன்றது. இரண்டு மதங்களுக்கு இடையிலான பகைமையை தோற்றுவிக்கும் செயல். குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக தகுந்த ஒளிப்பட, காணொலி ஆதாரங்கள் இருந்தும் பொலிஸார் வழக்கு அறிக்கையில் அவற்றைச் சேர்க்கவில்லை. சாதாரண சொத்து அழிவு வழக்குப் போலவே பதிவு செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி கிடைக்கும் வகையில், வழக்கில் ஆதாரமாக காணொலி ஆதாரங்களைக் கொண்டு மத வன்முறையை தூண்டுதல், மதத் தலங்களை அழித்தல், மதங்களை இழிவுபடுத்தல் ஆகிய சட்டங்களின் கீழ் வழக்குப் பதிவு செய்து, விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். முறைப்பாட்டாளர்களின் சட்டத்தரணிகளின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், உரிய பிரிவுகளில் வழக்குகளைத் தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு கட்டளையிட்டது. வழக்கு ஜீன் மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளர்கள் சார்பில் சட்டத்தரணிகளான, அரச தலைவர் சட்டத்தரணி திருமதி சாந்தா அபிமன்னசிங்கம், கணேசராஜா, இராஜகுலேந்திரா, இளங்குமரன், செல்வி புராதணி சிவலிங்கம், திருமதி விதுர் சுபா, தர்மராஜ் வினோதன், ராகுல் சிறிரங்கநாதன், கதிரமலை ஜெயகாந்தன், இரவீந்திரநாதன் கீர்த்தனா, செல்வரா டினேசன், நடனசபாபதி அனிஸ் ஆகியோரும், எதிராளிகள் சார்பில் அன்ரன் புனிதநாயகம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான பிறிமுஸ் சிராய்வா, பா.டெனீஸ்வரன் மற்றும் யோன் தாஸ் துஷ்ஷத், ஜெபநேசன் லோகு, அர்ஜின் போன்றோரும் முன்னிலையாகியிருந்தனர். (ஒ.5.213)

## மல்லாகத்தில்...

வீட்டுக்குள் நின்றவர்கள் கதவைப் பூட்டியதால் வெளிக்கண்ணாடிகளை அடித்து நொருக்கி முழுண்மயாக சேதப்படுத்திச் சென்றுள்ளனர் என்றும் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தினர் என்றும் முறையிடப்பட்டது. அவர்கள் உந்துருளிகளில் வந்திந்தனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-26)

## மின்...

சுமத்தின.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு, மின்வலு, வலுசக்தி மற்றும் தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதம் இடம்பெற்ற வேளையில் சபையில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர்களே இந்த குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

மகிந்த அணி உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, நாட்டில் தற்போது மின்சார தடை ஏற்பட்டுள்ளது. இது யதார்த்தமான ஒரு விடயம் அல்ல. இந்த மின் வெட்டு திட்டமிட்ட வகையில் செய்யப்பட்ட ஒரு சூழ்ச்சியாகும். இந்த சூழ்ச்சிக்கு மின் அமைச்சின் செயலர் முழுப்பொறுப்பையும் ஏற்றுகொள்ள வேண்டும். கடந்த ஆண்டு 50 மின் பிறப்பாக்கிகள் 90 மில்லியன் ரூபா செலவில் கொண்டுவரப்பட்டுள்ளது. கொண்டுவரப்பட்ட 50 மின் பிறப்பாக்கிகளில் இரண்டு மட்டுமே இன்றுவரை பயன்படுத்தப்படுகின்றது. ஏனைய 48 மின் பிறப்பாக்கிகளும் ஒரு ஓரத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த மின்துண்டிப்பு திட்டமிட்ட வகையில் ஒரு சில அதிகாரிகள் மட்டும் திட்டமிட்டு செய்த மின் துண்டிப்பாகும். தனியார் மின் நிலையங்களுக்கு கொடுத்து அவசர மின் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் இதனை செய்துள்ளனர். அவ்வாறு செய்தால் தான் தரகுப்பணம் கிடைக்கும். இந்த காலப்பகுதியில் மின் தடை ஏற்படும் என ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதனை தெரிந்தும் அரசு திட்டமிட்டு வியாபார நோக்கத்திற்காக செயற்பட்டு வருகின்றனர் என்றார். மக்கள் விடுதலை முன்னணியின் நளிந்த ஜெயதிஸ்ஸ,

இந்த மின் துண்டிப்பு திட்டமிட்ட சதித்திட்டமாகும். தனியார் நிறுவனம் ஒன்றுக்கு துரித மின் உற்பத்தி திட்டத்தை வழங்கவே மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த ஆண்டு இலங்கைக்கு 50 பெரிய மின்பிறப்பாக்கிகள் கொண்டுவரப்பட்டது. இதிலும் சூழ்ச்சி இடம்பெற்றுள்ளது. இவை கொண்டுவரப்பட்ட போதும் அதனைக் கொண்டு மக்களுக்கு மின்சாரத்தை வழங்கவில்லை. இவை இலங்கையில் பயன்படுத்தக் கூடியதாகவும் இல்லை. நீண்ட நேரம் பயன்படுத்தினால் பழுதடையும் நிலைமையே உள்ளது. அதுவும் இதற்கான எண்ணெய் உள்ளிட்ட சில அவசிய பொருள்கள் இந்தியாவில் மட்டுமே உள்ளது. இந்தியாவில் இருந்து கொண்டுவரும் வரையில் இவற்றை பயன்படுத்த முடியாது. 50 மின்பிறப்பாக்கிகள் கொண்டுவரப்பட்டாலும் கூட அதற்கான எண்ணெய் களஞ்சிய தாங்கிகள் 25 மட்டுமே கொண்டுவரப்பட்டுள்ளது. இவை அனைத்துக்கும் அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் மீது குற்றம் சுமத்தவில்லை. இதற்கு முழுவதுமான பொறுப்பை நிர்வாக அதிகாரிகளும், அமைச்சின் செயலருமே பொறுப்புக் கூற வேண்டும். நாட்டில் மின் வெட்டு இடம் பெற்றுக்கொண்டுள்ள நிலையில் கொழும்பு துறைமுகத்துக்கு மிதக்கும் டீசல் எரிபொருள் நிலையம் வந்துகொண்டுள்ளது. இதன் மூலமாக அதிக விலையில் மின்சாரத்தை பெற்றுக்கொள்ளவே இவர்கள் முயற்சித்துள்ளனர். இவை மூலமாக மிக அதிகமான தரகும்பணம் இவர்களின் பைகளில் நிறையவுள்ளது என்றார்.

நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படும் அதுரலியே ரதன தேரர், நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் மின் துண்டிப்புக்கு மின்சார சபையின் உயர் அதிகாரிகளும் நிர்வாக அதிகாரிகளுமே பொறுப்பு கூறவேண்டும். அதிகாரிகள் தங்கள் தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள எடுக்கும் நடவடிக்கையால் இன்று அப்பாவி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். மின்சார கட்டணத்தை குறைத்து நாட்டுக்கு இழப்பு ஏற்படாதவகையில் மேற்கொள்ள நாடாளுமன்றக் குழு அமைத்து மக்கள் திட்டம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்தத் திட்டங்கள் அனைத்தும் செயற்படுத்தாமல் நிராகரிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டத்தை மின்சாரசபை அதிகாரிகள் திட்டமிட்டு மறைத்துவிட்டார்கள். மின்சார மாபியாவை முறியடித்துக்கொண்டு செல்லும் சக்திமிக்க அரசியல் சக்தி ஏற்படுத்தப்படவேண்டும். அமைச்சருக்கு அந்த சக்தி இல்லை - என்றார். (ஒ.5.31)

# திடீர்ப் புகையால் சேவை முடக்கம்

சிட்னி,மார்ச் 30
ஆஸ்திரேலியாவின் சிட்னி வானூர்தி நிலையத்தில் நேற்றுக் காலை திடீரெனப் புகை எழுந்தது. இதையடுத்து வானூர்திச் சேவைகள் நிறுத்தப்பட்டன. அங்கிருந்த ஊழியர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். கட்டுப்பாட்டுக் கோபுரத்தின் மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டது.

கட்டுப்பாட்டுக் கோபுரத்தின் பணிகள், மெல்போர்னில் உள்ள கட்டுப்பாட்டு மையத்துக்கு மாற்றப்பட்டன. புறப்பட வேண்டியிருந்த அனைத்து வானூர்திகளும் நிறுத்தப்பட்டன.


தரையிறங்க வேண்டியிருந்த வானூர்திகளுக்கும் அனுமதியளிக்கப்படாமல் கான்பெரா மற்றும் மெல்போர்னுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன. பின்பு புகை வந்த பகுதியைச் சோதனை செய்ததில் கணினி மின்கலங்களில் ஏற்பட்ட அதிக வெப்பம் காரணமாகப் புகை வெளியானது கண்டுபிடிக்கப்பட்டது அது சரி செய்யப்பட்டது.


இதனால் மிகப்பெரிய தீ விபத்து தவிர்க்கப்பட்டது என்று வானூர்தி நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு வானூர்தி நிலையத்தின் சேவைகள் வழமைக்குத் திரும்பின.


# ரஷ்யாவில் 6.3 ரிக்டரில் நிலநடுக்கம்

மொஸ்கோ,மார்ச்30
ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் நேற்றுச் சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. 6.3 ரிக்டர் அளவில் பதிவான இந்த நில நடுக்கத்தால் உண்டான பாதிப்புகள் தொடர்பான உடனடித் தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

ரஷ்யாவின் எல்லைக்குட்பட்ட காம்சட்கா தீபகற்பத்தையொட்டி, பசுபிக் பெருங்கடல் மற்றும் ஓகோட்ஸ்க்கடல்களுக்குஇடையே பெட்ரோபாவ்கோவ்ஸ்க்காம்சட்ஸ்கை பகுதியில் இருந்து சுமார் 300 கிலோமீற்றர் தூரத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. தரையின் கீழே சுமார் 40 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுக்கோலில் 6.3 அலகுகளாகப் பதிவானது.







இஸ்ரேலில் உலகிலேயே மிகநீளமான உப்புக் குகை கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு 'மால்கம்' எனப் பெயரிட்டுள்ளனர். சாக்கடலை ஒட்டித் தென் மேற்கு மூலையில் இது அமைந்துள்ளது. இந்தக் குகை 'சோடாம்' என்று அழைக்கப்படும் மலையை ஒட்டிச் செல்கிறது. இது சுமார் 10 கிலோ மீற்றர் நீளத்தையுடையது. குகைக்குள் உப்புப் படிவுகள் மேற்பரப்பில் தொங்குகின்றன.

மருத்துவச் சாதனை

# எச்.ஐ.வி. நோயாளியின் சிறுநீரகம் மற்றொரு நோயாளிக்கு மாற்றம்



வோஷிங்டன்,மார்ச் 30
எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளியிடம் இருந்து சிறுநீரகத்தைத் தானமாகப் பெற்ற மருத்துவர்கள் அதைச் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட இன்னொருவருக்குப் பொருத்தினர். உலகில் முதன்முறையாகப் பதிவான இந்தச் சம்பவம் அமெரிக்காவில் நடந்தது.

அமெரிக்காவின் மேரிலாண்டில் பல்டிமோர் நகரத்தில் உள்ள ஜான்ஸ் ஹாப்கின்ஸ் மருத்துவமனையில் எச்.ஐ.வி. தொற்று உள்ள நோயாளியிடம் இருந்து சிறு நீரகத்தை எடுத்து, மற்றொருவருக்குப் பொருத்தும் அறுவைச் சிகிச்சை நடந்தது. கடந்த திங்கள் கிழமை நடந்த இந்த அறுவைச் சிகிச்சையின்போது சிறுநீரகத்தைத் தானமாக வழங்கிய நோயாளியின் பெயர் நினா மார்ட்டினெஸ்(வயது 35), சிறுநீரகத்தைத் தானாமாகப் பெற்றவரின் விவரங்கள் வெளியிடப்படவில்லை. ஆனால் தற்போது இரண்டு நோயாளிகளும் நலமுடன் இருக்கிறார்கள் என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

எச்.ஐ.வி. பாதிப்புள்ளவர்களுக்குச் சிறுநீரக நோய்கள் வருவதற்கான வாய்ப்பு அதிகம் எனக் கருதப்பட்டு வந்தது. தற்போது புதிய வகை மருந்துகள் மூலமாக எச்.ஐ.விக்குச் சிகிச்சை அளிக்க முடியும் என்று கூறப்படுகிறது. உலகளவில் மருத்துவத்துறையினருக்கு மிகச் சவாலளித்து வரும் நோய்களில் எச்.ஐ. வியே முதன்மையானது. 'ஸ்டெம் செல்' மாற்றுச் சிகிச்சை மூலம் பிரிட்டன் நோயாளி ஒருவருக்கு எச்.ஐ.வி கிருமிகள் அகற்றப்பட்ட செய்தி வெளியாகிய ஒரு மாதத்துக்குள் எச்.ஐ.வி சிகிச்சையில் மருத்துவ உலகம் மற்றொரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. இந்த மருத்துவ வளர்ச்சி பெரியதொரு மருத்துவ சாதனையாகப் பார்க்கப்படுகிறது.



கவுதமாலாவில் பரிதாபம்

# விபத்தைப் பார்க்க கூடியவர்களை பாரவூர்தி மோதியது

## 30 பேர் சாவு

கவுதமாலாநகர்,மார்ச்30
வேகமாகப் பயணித்த பாரவூர்தி வீதியில் குழுமி நின்றவர்களை மோதித் தள்ளியதால் கவுதமாலாவில் 30 பேர் சாவடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்தது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, குறித்த இடத்தில் வீதிவிபத்துஒன்றுநடந்து. அந்த விபத்தில் ஒருவர் சாவடைந்திருந்தார். அதைப் பார்ப்பதற்காக ஏராளமானோர் அவ்விடத்தில் குழுமினர். அப்போது அவ்வழியே வேகமாகப் பயணித்த கனரக சரக்கு பாரவூர்தி ஒன்று குறித்த பகுதியில் குழுமியிருந்தவர்களை மோதித் தள்ளியது.

நெடுஞ்சாலையில் வெளிச்சமில்லாமல் இருந்ததும் இந்த விபத்துக்குக் காரணமாகியது. இந்த விபத்துக் குறித்துக் கவுதமாலா அதிபர் ஜிம்மி மொரால்ஸ் தனது கீச்சகப் பக்கத்தில் "இந்தத் துயரச் சம்பவத்தில் சாவடைந்தவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

சாவடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு உடனடியாகத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் அரசு செய்யும்" என்று தெரிவித்தார்.

அத்தோடு நாடு முழுதும் துக்கதினமும் கடைப் பிடிக்கப்பட்டது.

பிரெக்ஸிட் விவகாரம்

# அடுத்த கட்டப் பேச்சுக்கு முன் தெரேசா மே பதவி விலக முடிவு



லண்டன்,மார்ச் 30
பிரிட்டன் தலைமை அமைச்சர் தெரேசா மே முன்வைத்த பிரெக்ஸிட் ஒப்பந்த வரைவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிக்க மறுத்து வரும் நிலையில், ஆதரவு அளிப்பதை வலியுறுத்தும் முயற்சி தொடர்ந்து நடந்து வருகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கான தனது ஒப்பந்த வரைவுக்குப் பிரிட்டன் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைத்தால், திட்ட மிட்டுள்ளதைவிட விரைவாகவே தான் பதவி விலகப்போவதாகத் தெரேசா கட்சி கூட்டத்தில் கூறினார்.

மே மாதம் 22ஆம் திகதிக்குப் பின்னர் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து விலகி, அடுத்த புதிய தலைமை அமைச்சரைத் தேர்ந்தெடுக்கும் வரை தலைமை அமைச்சர் பதவியில் தொடரப்போவதாக அவர் மேலும் கூறினார். பிரெக்ஸிட் ஒப்பந்த வரைவுக்குப் பிரிட்டன் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைத்தால், திட்ட மிட்டுள்ளதைவிட விரைவாகவே பிரிட்டன் தலைமை அமைச்சர் பதவியில் இருந்து விலகுவேன் என்று தெரேசா மே அறிவித்த பின்னரும் அவர் முன்வைத்த தீர்மானத்துக்கு ஆதரவளிக்காத போக்கு நீடிக்கிறது.

அவர் பதவி விலகுவதாக அறிவித்திருப்பது பிரிட்டனின் முன்னாள் அயலுறவுச் செயலர் போரிஸ் ஜோன்சன் உட்பட்ட சிலரை, தெரேசா மேயின் பக்கம் இழுத்துள்ளது.

## இந்தியத் தேர்தல் களம்

# பா.ஜ.காவுக்கும் அ.தி.மு.காவுக்கும் வாக்களித்தால்நாடுசுடுகாடாகிவிடும்

*கனிமொழி எச்சரிக்கை*

தூத்துக்குடி,மார்ச்30
எதிர்வரும் தேர்தலில் மக்கள் பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய கட்சிகளுக்கு வாக்களித்தால் நாடு சுடுகாடாகிவிடும் என்று கனிமொழி கூறினார். தி.மு.க. கட்சியின் மகளிரணிச் செயலரும் மாநிலங்களவை அமைச்சருமான கனிமொழியைக் கட்சி அறிவிப்பாளராகத் தி.மு.க. இன்னமும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. ஆனாலும் அவர் தனது களப்பணியைத் தொடங்கினார். தூத்துக்குடித் தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் தமிழிசை போட்டியிடுவதால், கனிமொழிதேர்தல்பரப்புரைக்ககாகஅங்கு வாடகைக்குத்தனிவீடுஎடுத்துத்தங்கிப் பெருமெடுப்பில் பரப்புரையில் இறங்கியுள்ளார்.
இந்த நிலையிலேயே இவர்களுக்கு வாக்களித்தால் நாடு சுடுகாடாகி விடும் என்று கனிமொழி தெரிவித்தார்.





# தினகரனின் கட்சிச் சின்னம்பரிசுப்பெட்டி!

புதுடெல்லி,மார்ச்30
இந்தியாவில்நடக்கவிருக்கின்றநாடாளுமன்ற,சட்டமன்றஇடைத் தேர்தல்களில் போட்டியிடும் டிடிவி தினகரனின் அ.ம.மு.க. கட்சிக்குப் பரிசுப்பெட்டிச் சின்னத்தைத் தேர்தல் ஆணையகம் ஒதுக்கியது. எதிர்வரும்தேர்தலில்தமிழகத்தில்டிடிவிதினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் அதன் கூட்டணி சார்பில் 39 மக்களவைத் தொகுதிகள், 18 சட்டப்பேரவைத் தொகுதிகளில் போட்டியிடுகிறது.
அந்தக்கட்சியின்துணைப்பொதுச்செயலர்டிடிவிதினகரன்ஏலவே தேர்தலில்நின்றுதான்வெற்றிபெற்றகுக்கர்சின்னத்தைஎதிர்வரும் தேர்தலில் பயன்படுத்துவதற்கு அனுமதி தருமாறு தேர்தல் திணைக்களத்திடம்கோரியிருந்தார்.அந்தச்சின்னத்தைஅவருக்கு வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்த தேர்தல் ஆணையகம் அவருடையகட்சிக்குப்பரிசுப்பெட்டிச்சின்னத்தைஒதுக்கியுள்ளது.

# வாக்கைப் பெறப் பணம் கொடுப்பவரை வேடிக்கை பார்க்கிறது பறக்கும் படை

*சீமான் ஆவேசம்*

அரூர்,மார்ச்30
வாக்குப் பொறுவதற்குப் பணம் கொடுப்பதைத் தேர்தல் பறக்கும் படை வேடிக்கை பார்ப்பதாக் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர்சீமான்தெரிவித்தார். தருமபுரிமக்களவைத் தொகுதியில் நாம் தமிழர் கட்சி சார்பில் உம்மிணி தேவி போட்டியிடுகிறார். அவரைஆதரித்துச்சீமான்பரப்புரையிலீடுபட்டபோதே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, "பறக்கும் படை என்ன செய்கிறது என்றால் கத்தரிக்காய் விற்றுச் செல்பவர், மளிகைக்கடைக்குப் பணம் கொண்டு செல்பவர், அப்பாவை மருத்துவமனையில் சேர்த்துவிட்டுப் பணம் கட்டப் போனவர் அவ்வளவுபேரின் பணத்தையும் பிடித்துக்கொள்ளும். ஆனால் வாக்குக்குப் பணம் கொடுப்பவரை ஓரமாக அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்." என்று ஆவேசமாகப் பேசினார்.

# ஸ்ராலின் தேர்தல் காய்ச்சலில் இருக்கிறார்

*முதல்வர் பழனிசாமி விமர்சனம்*

திருவண்ணாமலை,மார்ச்30
தி.மு.க. தலைவர் ஸ்ராலின் தேர்தல் காய்ச்சலில் இருக்கிறார் என்றும் தோல்வி பயத்தில் என்னென்னவோ பேசுகிறார் என்றும் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார். திருவண்ணாமலையில்பரப்புரை மேடை ஒன்றில் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
அ.தி.மு.க. கூட்டணி மிகப்பெரிய கூட்டணி, வாக்கு வங்கி அதிகம் கொண்ட கூட்டணி. அதனால், அனைத்து வாக்குகளையும் சிதறாமல் பெற வேண்டும். ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் அ.தி.மு.க. வெற்றிபெறவேண்டும். தி.மு.க. தலைவர்ஸ்ராலின் தோல்விபயத்தில்என்னென்னவோபேசுகிறார். அவர் தேர்தல் காய்ச்சலில் இருக்கிறார் என்றார்.

# சிவசேனா தனித்துப் போட்டி!



கொல்கத்தா,மார்ச்30
நாடாளுமன்றத் தேர்தலில் சிவசேனா கட்சி முதன் முறையாக மேற்கு வங்கத்தில் தனித்துப் போட்டியிடுகிறது. அதற்கானவேட்பாளர்களும்அறிவிக்கப்பட்டுள்ளனர். பா.ஜ.க. தலைமையிலானதேசியஜனநாயகக் கூட்டணியில்உள்ளசிவசேனாகட்சி, மேற்குவங்கத்தில்தனித்துப்போட்டியிடஉள்ளதாகஅதிகாரபூர்வமாகத் தெரிவித்துள்ளது.
மேற்கு வங்கத்தில் சிவசேனா தனித்துப் போட்டியிடுவது இதுவே முதன்முறையாகும். அதன்படி மேற்கு வங்கத்தின் அனைத்துத் தேர்தல் தொகுதிகளிலும் இந்துவேட்பாளர்களைமட்டுமேநிறுத்தப்போவதாகச் சிவசேனா கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தொழில்தொடங்கும்நிறுவனங்களுக்கு 3 ஆண்டுகளுக்கு அனுமதி இலவசம்!

*ராகுல் காந்தி அதிரடி*

புதுடெல்லி,மார்ச்30
காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால், தொழில் துறையில் தடை, தாமதங்கள்அனைத்தையும்நீக்கி, புதிதாகத் தொழில்தொடங்கும்நிறுவனங்கள் அடுத்த 3 ஆண்டுகளுக்கு அரசிடம் இருந்து எந்த ஓர் அனுமதியும் பெறாமல் தொழில் நடத்த அனுமதிக்கப்படும் என்று காங்கிரஸ் கட்சியின் தலைவர்ராகுல்காந்திதெரிவித்தார்.
மேலும், புதிய தொழில் நிறுவ னங்கள், தொழில் ஆரம்பிக்கும் நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டு வரும் வரி நீக்கம் செய்யப்பட்டு, வங்கியில் கடன் கிடைப்பது எளிதாக்கப்படும் என்றும்ராகுல்தெரிவித்தார். இந்திய நாடாளுமன்றத் தேர்தலையொட்டிய பரப்புரைகளில்காங்கிரஸ்கட்சிஇவ்வாறாக பல உத்தரவாதங்களை அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.





## இன்றைய நாள்


**மேடம்:** இடையூறு செய்பவரை அடையாளம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.


**இடபம்:** குடும்ப சிரமம் பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில் வியாபாரத்தில் சுமாரான வளர்ச்சி இருக்கும். மிதமான லாபம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர நோக்கில் செலவு செய்வர். உடல்நலனில்அக்கறைதேவை.


**மிதுனம்:** உறவினர்களின் அன்பை பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில்தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.


**கடகம்:** உங்களின் நற்செயல் பிறரால் விமர்சிக்கப்படலாம். சக தொழில் வியாபாரம் சார்ந்தவர்களுடன் சச்சரவு பேசவேண்டாம். அளவான பணவரவு கிடைக்கும். வெளி யூர் பயணத்தில் திடீர் மாறுதல் உருவாகும்.


**சிம்மம்:** திட்டமிட்ட பணிகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில் வளர்ச்சியால் வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.


**கன்னி:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற தாமதமாகலாம். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் ஆடம்பரமாக செலவழிப்பர்.


**துலாம்:** தனித்திறமையை வெளிப்படுத்தி நற்பெயர் பெறுவீர்கள். தாமதமான பணிகள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். பிள்ளை கள் விருப்பம்அறிந்து நிறைவேற்றுவீர்கள்.


**விருச்சிகம்:** கடந்த கால நற்செயலுக்கு உரிய நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதாக நிறைவேறும். லாபம் உயரும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.


**தனுசு:** திட்டமிட்டு செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். ஆதாயம் சீராக இருக்கும். பெண்க ளுக்கு சகோதர வழியில் உதவி கிடைக்கும்.


**மகரம்:** அன்றாட பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். உறவினர் வருகையால் குடும்பச் செலவு அதிகரிக்கும்.


**கும்பம்:** முக்கிய பணிகளை திட்டமிட்டு நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி மறையும்.


**மீனம்:** இடையூறாக செயல்பட்டவர் இடம் விலகிச் செல்வார். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அபரிமிதமாக இருக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

# மின்னொளியில் துடுப்பாட்டத் தொடர்

விஜயரட்ணம் ஞாபகார்த்த இருபதுக்கு இருபது கடினபந்து துடுப்பாட்டத் தொடர் யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக மின்னொளியில் நடத்தப்படவுள்ளது என்றும் அழைக்கப்படும் 8 கழகங்களுக்கு இடையே இந்த ஆட்டங்கள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தினமும் மாலை 5.30 மணிக்கு ஒரு போட்டியும் இரவு 8.30 மணிக்கு ஒரு போட்டியும் என இரண்டு போட்டிகள் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடரில் சென்ரல் விளையாட்டு கழகம் , கே.சி.சி.சி. விளையாட்டு கழகம் , பற்றிசியன்ஸ் விளையாட்டு கழகம் , ஜொலிஸ்டார் விளையாட்டு கழகம் , திருநெல்வேலி மத்திய விளையாட்டு கழகம், சென்றலைட்ஸ் விளையாட்டு கழகம், AB விளையாட்டு கழகம் மற்றும் கிறாஸ் கோப்பர் விளையாட்டு கழகம் என்பன மோதவுள்ளன. முதல் நாள் சுற்று போட்டியில் AB விளையாட்டு கழகமும் சென்றலைட்ஸ் விளையாட்டு கழகமும் மோதவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-37)




# ஞானமுருகனை வீழ்த்தி சம்பியனானது பாடும்மீன்

யாழ்ப்பாணம், மார்ச் 30

கீதனின் ஹெட்ரிக் கோல்களின் உதவியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தி குருநகர் பாடும்மீன் அணி வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கியது.



யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 21 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை துரையப்பா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.


இரசு 7 மணிக்கு மின் ஒளியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியும், இளவாலை மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் விறுவிறுப்பாக ஒன்றுக்கு ஒன்று சளைக்காது மோதின. முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் இருந்ததால் எந்த அணியாலும் கோல் எதையும் பெற முடியவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் பாடும்மீன் அணி தனது வியூகத்தை மாற்றிக் கொண்டது. ஞானமுருகன் அணியினரின் தடுப்புக்களை உடைத்த பாடும்மீன் அணி கோல்களைப் பெறத் தொடங்கியது. ஒன்றன்பின் ஒன்றாக அந்த அணி 5 கோல்கயைப் பெற, அவற்றைத் தடுக்க ஞானமுருகன் அணி மேற்கொண்ட அணிகள் பிசுபிசுத்தன.

பாடும்மீன் அணி சார்பாக கீதன் 3 கோல்களையும், கெயின்ஸ் மற்றும் அனஸ்ராஜ் ஆகியோர் தலா ஒரு கோல்களையும் பெற்றனர். பாடும்மீன் அணியின் பாதுகாப்புத் தடுப்புக்களை உடைத்து கோல்களைப் பெறுவதற்கு ஞானமுருகன் அணியினர் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. ஆட்டத்தின் இறுதியில் 5:0 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இறுதியாட்டத்தின்போது முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் ஜெயசீலனும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தனும் கலந்து கொண்டனர்.(எ-23)





மியாமி ரெனிஸ் தொடர்

# பிலிஸ்கோவா -பார்தி இறுதியில் மோதல்

மியாமி பகிரங்க ரெனிஸ் போட்டித் தொடர் புளோரிடாவில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்று இடம்பெற்ற பெண்களுக்கான ஒற்றையார் பிரிவு அரையிறுதியாட்டத்தில் தரவரிசை 5ஆவது இடத்திலுள்ள கரோலினா பிலிஸ்கோவா வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறினார்.

கரோலின் பிலிஸ்கோவா பன்னாட்டுத் தரவரிசையில் 2ஆவது இடத்திலுள்ள ரோமானிய வீராங்கனை சிமோனா ஹொலப்பை எதிர் கொண்டார். இதில் முதல் சுற்றை கடும் போட்டியின் மத்தியில் பிலிஸ்கோவா 7:5 என்ற கணக்கில் கைப்பற்றினார். இரண்டாவது சுற்று பெரிதும் எதிர் பார்க்கப்பட்ட நிலையில் பிலிஸ்கோவா 6:1 என்ற கணக்கில் ஹொலப்பை இலகுவாக வீழ்த்தினார். இறுதியில் பிலிஸ்கோவா 7:5, 6:1 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இவர் இறுதியில் தரவரிசையில் 12ஆவது இடத்திலுள்ள ஆஸ்திரேலிய வீராங்கனை ஆஸ்லி பார்தியை சந்திக்கின்றார். ஆஸ்லி பார்தி இந்த வருடம் இடம்பெற்ற ஆஸ்திரேலியா பகிரங்க ரெனிஸ் தொடரில் காலிறுதி வரை முன்னேறியிருந்தார்.

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் கே.ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றன. இன்று காலை 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் காமாட்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மதியம் 1மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (எ-23)

\+ + +

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாணம் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் விஜயரெட்ணம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மின்னொளியிலான ரி20 துடுப்பாட்டதொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இன்று மாலை 5.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஏபி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி துடுப்பாட்டக்கழக அணி மோதவுள்ளது. (எ-23)





# இறுதியாட்டம் இன்று


யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் மாவட்ட ரீதியிலான இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு துரையப்பா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இறுதியாட்டத்துக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனும், சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் சிறிசற்குணராசாவும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-23)




# நடுவர்கள் கண்களை திறந்து வைத்திருங்கள்

## கோக்லி காட்டம்


பெங்களூர் - மும்பை அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் மும்பை அணி 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் இறுதிப் பந்துப்பரிமாற்றத்தை மலிங்க வீசியிருந்தார். இறுதிப் பந்தில் பெங்களூர் அணி வெற்றி பெறுவதற்கு 7 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 6 ஓட்டங்கள் எடுத்தால் போட்டி சமநிலையில் முடிவடைந்திருக்கும். மலிங்க வீசிய இறுதிப் பந்து முறையற்ற பந்து வீச்சாக காணப்பட்ட போதிலும் அதனை நடுவர் கவனிக்கத் தவறியிருந்தார் என்று பெங்களூர் அணியின் தலைவர் கோக்லி நடுவர்கள் மீது குற்றம் சாட்டியிருந்தார்.

இது தொடர்பாக கோக்லி நடுவர்களிடம் சென்று பேசினார். இதனால் மைதானத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.


இது குறித்து கோக்லி மேலும் தெரிவிக்கையில்: நாங்கள் ஐ.பி.எல். கிரிக்கெட் விளையாடி கொண்டிருக்கிறோம். கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி அல்ல. இறுதிப் பந்தை முறையற்ற பந்து வீச்சு என்று அறிவிக்காதது கேலிக் குரியது. நடுவர்கள் தங்களது கண்களை திறந்து வைத்திருக்கவேண்டும். இந்த நடுவரின் செயலால் ஆட்டம் முற்றாக மாற்றி விட்டது. அங்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. நடுவர்கள் இன்னும் விழிப்புடன் செயற்படவேண்டும்- என்றார்.

இது குறித்து மும்பை அணித் தலைவர் ரோகித் சர்மா தெரிவிக்கையில்:

உண்மையிலேயே நான் எல்லை கோட்டை தாண்டிய போது தான் அது முறையற்ற பந்து வீச்சு என்பது எனக்குத் தெரியும். இதுபோன்ற தவறுகள் விளையாட்டுக்கு நல்லதல்ல. 19ஆவது பந்துப்பரிமாற்றத்தில் பும்ரா வீசிய ஒரு பந்து அகலப் பந்து என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அது அகலப் பந்து கிடையாது. எனவே நடுவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்- என்றார்.







# மும்பை அணிக்கு அல்சாரி


12ஆவது ஐ.பி.எல். தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் மும்பை இந்தியன்ஸ் அணியில் விளையாடிய நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஆடம் மில்னே குதிக்கால் காயத்தால் தொடரில் இருந்து வெளியேறினார்.

அவருக்குப் பதிலாக சிறந்த வேகப்பந்து வீச்சாளரான மேற்கிந்தியத்தீவுகள் அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் அல்சாரி ஜோசப் இணைக்கப்பட்டுள்ளார். இவர் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்காக டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இவர் இதுவரை ஏழு ரி-20 போட்டிகளில் விளையாடி 9 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார்.

# பி.வி. சிந்து காலிறுதிக்கு

இந்திய பகிரங்க பூப்பந்தாட்டப் போட்டி டெல்லியில் இடம்பெற்று வருகின்றது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து 21:11, 21:13 என்ற நேர்செற் கணக்கில் கொங்காங் வீராங்கனை டெங் ஜாய் சுவானை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.



# சென்னை அணி ரிஷப் பந்துக்கு மதிப்பளிக்கும்

## பிளெமிங் தெரிவிப்பு


12ஆவது ஐ.பி.எல். தொடரில் இடம்பெற்ற மும்பை -டெல்லி அணிகளுக்கிடையிலான போட்டியில் டெல்லி அணி வீரர் ரிஷப் பந்த் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி அந்த அணியின் வெற்றிக்கு காரணமாகவிருந்தார்.

இது குறித்து சென்னை அணியின் ஆலோசகர் ஸ்டீபன் பிளெமிங் தெரிவிக்கையில்:

நாங்கள் இந்த ஐ.பி.எல். தொடரில் ஏராளமான வீரர்களுக்கு மதிப்பளிக்கிறோம். இதில் ரிஷப் பந்தும் ஒருவர். இந்திய அணியில் இடம்பிடிக்கும் இளம் வீரர்களில் ஒருவராக இவர் காணப்படுகின்றார். ஆனால் டெல்லி அணியில் தவான், கொலின் இங்கிராம், ஷ்ரேயாஸ் அய்யர் போன்ற வீரர்களும் உள்ளனர். அவர்களின் தவறுகளை கண்டுபிடித்து, அதை சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும். நாங்கள் எங்களுடைய சொந்த பலத்தின் மீது கவனம் செலுத்துவோம் - என்றார்.



# பெடரர் அரையிறுதிக்கு முன்னேற்றம்



மியாமி பகிரங்க ரென்னிஸ் போட்டித் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆண்களுக்கான ஒற்றையார் பிரிவு காலிறுதிப் போட்டியொன்றில் தரவரிசையில் நான்காவது இடத்திலுள்ள சுவிற்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

பெடரர் தென்னாபிரிக்கா வீரர் கெவின் அன்டர்சனை எதிர் கொண்டு 6:0,6:4 என்ற நேர் செற் கணக்கில் அவரை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

பெடரர் அரையிறுதியில் ஸ்ரேல் நாட்டு வீரர் டெனிஸ் சப்போவல்லை இன்று எதிர் கொள்கின்றார்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னப்பு வேலுப்பிள்ளை**

தோற்றம் 07.02.1947 — மறைவு 13.04.2015

திதி: தசமி (30.03.2019)

ஆண்டுகள் நான்கு சென்றதே ஆறிட
- முடியுமா உங்கள் மறைவு
ஆலமரமாய் எங்களைத் தாங்கி
- விழுதுகளாய் நாம் வாழச் செய்தீர்
அன்பையும் பண்பையும் எம்முள் வளர்த்து
- காற்றோடு கலந்தது ஏனோ?
ஆறடி நிலம்தான் சொந்தமென்று
- விண்ணுலகு சென்றீர்களோ?
எம் மூச்சினில் உணர்கின்றோம்
- நீங்கள் என்றும் எம்முடனேயென்று.

நான்கு ஆண்டுகள் கடந்தாலும் என்றும்
எம் இதயத்தில் வாழும் அப்பாவுக்கு எமது அஞ்சலிகள்

கைதடி தெற்கு,
கைதடி.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
அன்பு மனைவி, மகன், மருமகள் மற்றும்
உறவினர்கள்,

## தேவை

ஊர்ச்சேவல், ஊர்ப்பேடு கூடிய விலைக்கு கொள்முதல் செய்யப் படும்.

**இல. 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம், தாசன் பாம் 077 312 7498**

## மாபெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புதுவருடத்தை
முன்னிட்டு ஏசியன் தளபாட
நிலையத்தின் மாபெரும் மலிவு
விற்பனை இலுப்பையடி சந்திக்கும்
ஆனைப்பந்தி சந்திக்கும்
இடையில்.

**077 3583879/076 8219416**

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**T.P: 077 662 9137**

O/L Day Class இற்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்

**O/L Day Class (8.00 to 2.30)**

ஆரம்பம் 01.04.2019 9.00 மணி

- கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
- எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு.
- அனுமதிகளை இன்று முதல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி.

(C 9755)(14,17)

## Smart Science Centre

(நீராவியடி பிள்ளையார் கோவில் வடக்கு வீதி)

**A/L 2021 புதிய விஞ்ஞான பிரிவுகள்**

ஆரம்பம்:
31.03.2019 ஞாயிற்றுக்கிழமை, 8.00 Am

பௌதீகவியல்:
T.K.Kajan B.Sc

இரசாயனவியல்:
S.Ehan B.Sc Spl in chem, M.sc

இணைந்த கணிதம்:
T.S.Rankan B.Sc (Hons) Math, PGDE

ஏனைய பிரிவினர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. **077 653 1177, 077 084 8363**

உதயன்
advt@uthayan.com

## கம்பர் மலை - வல்வெட்டி வன்னிச்சி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம் கூறுவிலை கோரல்

கம்பர் மலை வல்வெட்டி வன்னிச்சி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வர்ணவேலைகள் (Painting) இற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

**இது தொடர்பான மேலதிக விவரங்களை**

**ஆ.ஞானேந்திரன் (தலைவர்) - 077 703 3015**
**இ.லோகநாதன் (செயலாளர்) - 077 662 4422**
**ச.தவச்செல்வன் (பொருளாளர்) - 078 356 7043/ 021 226 3302**

ஆகியோருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 15.04.2019**

30.03.2019 நிர்வாக சபை.

## Techno World
## தொழில்நுட்பப் பிரிவு

**A/L 2021 ஆரம்பம்**

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.

**30.03.2019 சனிக்கிழமை காலை 8.30**

**அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்ட தரமான பேரீச்சம்பழங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் மிக மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

இப்புத்தாண்டுக்கு உங்களது அன்புக்குரியவர்களுக்கு வழங்கும் இனிப்புகளுடன் ஆரோக்கியமிக்க பேரீச்சம்பழங்களையும் சேர்த்து பகிர்ந்திடுங்கள்




DELIGHTING THE WORLD WITH DATES

எம்மிடம் உள்ள வகைகள்

| | | |
|---|---|---|
| Safawi Dates | Algerian Dates | Sukkari Dates |
| Ajwa Premium | Maryam Dates | Barari Algerian Dates |
| Ajwa No.1 | Sagai Dates | Date Syrup |
| Mabroon Dates | Medjool Dates | Kimia Dates |

இன்னும் பலவகையான ஈச்சம்பழங்கள்

நாடு பூராகவும் விநியோகஸ்தர்கள் தேவை

ஈச்சம்பழத்தை தினமும் உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்தி உங்கள் வாழ்க்கையின் ஆரோக்கியத்தை அனுபவியுங்கள்.

ஏப்ரல் 02ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் (SLECC) நடைபெறவுள்ள கண்காட்சியில் அமைந்துள்ள 78, 89 கண்காட்சி கூடத்தில் பேரீச்சம்பழங்களை விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**Best Food Marketing (Pvt) Ltd.**

No.32/A, Old Moor Street, Colombo - 12. | Tel : 011 2441277 | Fax: 011 2441979
E-mail: bestfoodmarketing@yahoo.com | datecrownsrilanka/
datecrownsl?utm_source=ig_profile_share&igshid=ea8lzodinlio

போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்! தரமான ஈச்சம் பழங்களை பார்த்து வாங்குங்கள்

## வேலைக்கு ஆள்கள் தேவை

முருகண்டியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சைவ உணவகத்திற்கு சமையல்காரர், ICE கிறீம் தயாரிப்பாளர், உணவு பரிமாறுபவர்கள், உதவியாளர்கள், காசாளர் பெண்கள் தேவை.

**தொடர்பு - 077 386 6250**

(CS 24376/15/18)

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- பண வசூலிப்பாளர்கள்
- இரவு நேர விநியோக ஊழியர்கள்
- பாதுகாப்பு உத்தியோகத்தர்
- அலுவலக உதவியாளர்கள்



ஆர்வமுள்ளவர்கள் 01.04.2019 திங்கட்கிழமை மு.ப.11.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணிவரை உங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

**உதயன் பணிமனை**
**A9, வீதி, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.